www.tamilarangam.net

# களத்தில்

காலங்காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள், சாவும் அழிவுமாக அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள்,, சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக் கண்ணீர் இவையெல்லாம் பௌத்த தேசத்தின் காருண்ணியத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (26.02. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (129) அன்பளிப்பு: 60 p



லெப். கேணல் பொன்னம்மானின் பயிற்சி முகாம் ஒன்றினைக் குறிக்கும் மரச்சிற்பம் - *கட்டுரை உள்ளே...*

## 'வெளிச்சம்' 50வது இதழ் தலைவரின் வாழ்த்துடன் வன்னியில் பிரசுரம்

தமிழீழ மக்களின் கலை – பண்பாட்டு வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகத் திகழும் 'வெளிச்சம்' மாத இதழின் 50வது இதழ் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் வாழ்த்துரையுடன் வன்னிப் பகுதியில் பிரசுரமாகியுள்ளது.

கடும் போர்ச் சூழலிலும் தமிழீழ மக்கள் தமிழ்த் தேசிய உணர்வுடன் தமது கலை பண்பாட்டு பாரம்பரியத்தைத் தொடர்ந்துபேணி, இலங்கைத் தீவின் ஒரு தனியான தேச இனமாக இயங்குவதன் நடைமுறைச் சான்றாக 'வெளிச்சம்' மாதஇதழ் திகழ்கிறது. தமிழீழச் சமுதாயத்துக்கு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## புத்தூரில் படையினர் வெறித்தனம்

### ✳ பொதுமக்கள் மூவர் பலி ✳ ஆறு பேர் படுகாயம்

சிறிலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பிரதேசமான புத்தூரில் 10–02–97 அன்று பொதுமக்கள் மீது சிறிலங்காப் படையினர் வெறித்தனமான தாக்குதலொன்றை நடாத்தியுள்ளனர். வீட்டுக்குள் இருந்த பொதுமக்களை

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# 130 தமிழீழ மக்கள் கடலில் அநியாயச் சாவு

✳ 'எடிபல-2' இராணுவ நடவடிக்கையின் கோர விளைவு!

✳ 22ஆம் திகதி தமிழீழத் தேசிய துக்க தினமாகியது!

✳ உயிருக்காகப் போராடிய 20 பேர் கடற்புலிகளால் மீட்பு!

'எடிபல–2' சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு அஞ்சி, உயிர்ப் பாதுகாப்புத் தேடி மன்னார் நாச்சிக்குடாவிலிருந்து படகுகளில் தமிழகம் நோக்கிப் புறப்பட்ட படகுகளில் ஒன்று மூழ்கியதில், அதில் சென்ற 150 தமிழீழ மக்களில் 130 பேர் அநியாயமாக இறந்துள்ளனர்.

இறந்த மக்களின் கிடைக்கப் பெற்ற விபரங்கள் உள்ளே ...

இந்த அவல நிகழ்வால் தமிழீழமெங்கும் சோகமயமாகியது. கடலில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த 20 பேரை, உதவிக்கு விரைந்த கடற்புலிகள் மீட்டுள்ளனர். இறந்தவர்களில் பலர் பெண்களும் சிறுவர்களுமாவர்.

### தமிழீழத் தேசியத்தின் இழப்பு

இந்தத் துயரச் சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது. "இத் தமிழ் மக்களின் இழப்பு – தமிழீழத் தேசியத்தின் இழப்பேயாகும். இந்தச் சோகம் எல்லாத் தமிழ் மக்களுக்கும் பொதுவானது" என விடுதலைப் புலிகள் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### பொதுமக்களின் மீதான இராணுவத் தாக்குதலின் வெளிப்பாடு

அண்மையில் தொடங்கப்பட்ட 'எடிபல' இராணுவ

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## பிரித்தானிய பிரதியமைச்சர் அழைப்பு சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் நிராகரிப்பு!

பிரித்தானிய வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் பிரதியமைச்சர் கலாநிதி லியாம் பொக்ஸ் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு 11ஆம் திகதி வரை அங்கே தங்கியுள்ளார். இந்த விஜயத்தின் போது, கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதுவராலயத்தில் நடாத்திய பத்திரிகை மாநாட்டில் "இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணும் வகையில், இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்கப் பிரித்தானிய அரசு என்றும் தயாராக உள்ளது" என அறிவித்திருந்தார். இதனை நிராகரிக்கும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

### உள்ளே... ☞


- தாயகம் நோக்கிய ...
- பரந்தன் - ஆனையிறவு சமரில் வீரமரணமடைந்த போராளிகள் விபரங்கள்...
- விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுப் பரப்புரையும்.....
- கனடா (நீதிமன்ற) வழக்கு....
- கவிதைக்களம் ...
- சர்வதேசக்களம்.....
- தமிழீழச் செய்திகள்...
- மக்கள் பணியில் த.பு.க.(TRO)
- போரும் பொருண்மியமும் (TEEDOR)...
- குடிசைகளின் உயிர்நரம்பை... (உண்மைக்கதை)








01-02-97 இல் பாட்டாளி மக்கள் கட்சியினால் நடாத்தப்பட்ட ஈழத்தமிழர் பாதுகாப்புப் பேரணியும், மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்களில் இடமிருந்து : திரு. வீரபத்திரன், திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ், திரு ஆனைமுத்து, டாக்டர் ராமதாஸ் - முழுவிபரமும் நடுப்பக்கத்தில்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## யாழ். குடாநாட்டு இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளில் தொடர்ச்சியான தாக்குதல்கள்

சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள யாழ். குடாநாட்டுப் பகுதிகளில் இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்கள் வேகப்படுத்தப்பட்டு வருகின்றன. 16 ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையிலான ஐந்து தினங்களில் பலமுனைகளில் சிறிலங்கா இராணுவம் கடுந் தாக்குதல்களை அனுபவித்துள்ளதாகத் தெரிகிறது. 16ஆம் திகதி கூழாவெளிக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில், 17ஆம் திகதி குளப்பிட்டிச் சந்தி, 18ஆம் திகதி மீண்டும் அதேபகுதி, 20ஆம் திகதி வட்டுக்கோட்டை எனப் பரவலாகத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இத் தாக்குதல்களினால் சிறிலங்காப் படையினருக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்ட போதிலும் தாக்குதல்தள சூழ்நிலை காரணமாக புலிவீரர்களினால் இராணுவ இழப்புக்கள் குறித்த தகவல்கள் எடுக்கப்பட முடியாமல் போய்விட்டது. இதனைச் சாட்டாக வைத்து சிறிலங்கா இராணுவத்தரப்பும் எவ்வித விபரங்களையும் வெளியிடாது மூடிமறைத்துவிட்டது.

17 ஆம் திகதி இரவு 11.20 மணிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினர் மீது வதிரியில் வைத்து புலிவீரர்கள் நடாத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதங்கள் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டன. ●

## காடுகளைக் காட்டி வாக்கு வேட்டையாட வவுனியா - மன்னார் பகுதிகளில் படையெடுப்பு

பதவிவெறி கொண்டுள்ள சந்திரிகா அரசு, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் மக்களின் இனவெறியைத் தூண்டி வாக்கு வேட்டையாடத் தீட்டிய திட்டத்தின் ஒரு பகுதியே வவுனியா – மன்னார் ஆக்கிரமிப்புப் படையெடுப்பு முயற்சிகள் என அரசியல் – இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அடர் காட்டுப் பகுதியில் சில மணி நேரம் இராணுவ வாகனங்களை செலுத்திக் காட்டியாவது அப் பகுதியில் தாம் முன்னேறுவதாக, புதியதோர் உற்சாகத்தை சிங்கள இனவெறியர்களுக்கு ஏற்படுத்துவதற்காக வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி ஆக்கிரமிப்பு முயற்சிகளை சந்திரிகா அரசு முடுக்கிவிட்டுள்ளது. இருந்த போதிலும், சிறிலங்காப் படையினர் அங்குல அங்குலமாக பயப்பீதியுடன் காலடி வைத்தவாறு செல்லும் இந் நடவடிக்கையானது – இது ஓர் பலத்த இழப்பு ஏற்பட்டதற்கான அல்லது ஏற்படுவதற்கான அறிகுறியாக உள்ளது எனவும் செய்தியாளர்கள் ஐயுறுகின்றனர். ஆயினும் சந்திரிகாவும், ரத்வத்தவும் கூட்டாக காட்டைக் காட்டி வாக்குகள் பெறவும், தொடர் தோல்விகளால் சோர்ந்து போயுள்ள இராணுவத்தினரின் மனநிலையையும் உயர்த்த மிகக் கடுமையாக முயற்சிப்பதாகத் தெரிகிறது. ●

## விடுதலைப் புலிகள் பலத்த எச்சரிக்கை படையெடுப்பு தற்கொலைக்கு ஒப்பான முயற்சி

வன்னிப்பெருநிலப் பரப்பில் எந்த முனையிலும் எந்த நேரத்திலும் உக்கிரச் சமர் வெடிக்கலாம் என அறிவித்துள்ள விடுதலைப் புலிகள் சிங்களப் படையெடுப்புக்கு எதிரான எதிர்த் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் தயாராகவே இருப்பதாகவும் பலத்த எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வன்னித் தளத்தின் பல்வேறு முனைகளிலும் படையெடுப்பு அரங்குகள் சிறிலங்காவால் திறக்கப்படக்கூடிய சாத்தியப் பாடுகளை எதிர்பார்த்து சிறிலங்காப் படைக–ளின் அசைவுகள் அனைத்தும் விடுதலைப் புலிகளினால் மிகக் கூர் மையாக அவதானிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. எத்தகைய சூழ்நிலையையும் எதிர் கொள்வதற்கு ஆயத்த நிலைகளில் விடுதலைப் புலிகளின் படையணிகள் காத்திருக்கின்றன.

முல்லைத்தீவு என்றும் ஆனையிறவு என்றும் மற்றும் வேறு வழிகளிலும் விடுதலைப் புலிகள் பெற்றிருக்கின்ற புதிய ஆயுத தளபாடங்களும் கணிசமான மனித வளமும் மரபுமுறைச் சமர்களில் ஈடுபடவல்ல திடமான போர்த்திறனை இப்போது விடுதலைப் புலிகளுக்கு வழங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள அரசின் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு பலத்த எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக விடுத்துள்ள அறிக்கையில், "ஆக்கிரமிக்கப்பட்ட படையெடுப் பானது – சிங்களத் தலைமையெடுத்த தற்கொலைக்கு ஒப்பான காரியங்களுள் ஒன்றாகும். இதனை இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஆய்வாளர்கள் வரலாற்று ரீதியாகப் பதியப் போகின்றார்கள்" என வர்ணித்து எச்சரிக்கை செய்துள்ளனர். ◆

## மன்னார் கடல் அனர்த்தத்தில் இறந்தோர்களின் கிடைக்கப்பெற்ற பெயர் விபரங்கள்

1. ரங்கராஜா கோபியா றமணன் (7 மாதம்)
2. ஆதி நாராயணசாமி (75 வயது) வல்வெட்டித்துறை, (த.மு. சுதந்திரபுரம், உடையார்கட்டு)
3. பரமசாமி கண்மணி (63) " "
4. பாலச்சந்திரன் ஜெயராணி (44) " "
5. காசிநாதன் கண்மணி (53) பொலிகண்டி, (த.மு.7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)
6. ஈஸ்வரதேவன் நாகம்மா (50) பொலிகண்டி (த.மு. 12ஆம் கட்டை, விசுவமடு)
7. சிதம்பரநாதன் விஜயலட்சுமி (29) பொலிகண்டி, (த.மு. வல்லிபுரம், புதுக்குடியிருப்பு)
8. சிதம்பரநாதன் அருண் (10) " "
9. சிதம்பரநாதன் தர்மினி (7) " "
10. K. அன்னபூரணம் (52) " "
11. K. அருள்வேந்தன் " "
12. S. சிவசக்தி (32) கொக்குவில் (த.மு. பனிச்சங்குளம், மல்லாவி)
13. S. அகிலசக்தி (32) " "
14. S. அனுரங்கன் (8) " "
15. செல்லத்துரை சதீஸ்வரன் (22) விடத்தல்பளை, மிருசுவில் (த.மு. யோகபுரம், மல்லாவி)
16. மகாலிங்கம் மைதிலி (25) திருநெல்வேலி யாழ்ப்பாணம் (த.மு. அம்மாள்குளம், வவுனிக்குளம்)
17. மகாலிங்கம் மஞ்சுளா (22) " "
18. மகாலிங்கம் மாலதி (22) " "
19. மகாலிங்கம் சகானா (12) " "
20. ஒப்பிலாமணி சிவனேந்திரன் (50) வல்வெட்டித்துறை (த.மு.விசுவமடு)
21. சிவேந்திரன் நிர்மலாதேவி (29) " "
22. சிவேந்திரன் சேயமாயவன் (12) " "
23. மகாதேவன் சர்வேஸ்வரி (42) அச்சுவேலி (த.மு. 304 யோகபுரம், மல்லாவி)
24. பொன்னுச்சாமி குமாரசுவாமி (66) நல்லூர் யாழ். (த.மு. 332, பாண்டியன்குளம், மல்லாவி)
25. குமாரசாமி தாரணி (20) " "
26. குமாரசுவாமி ராகினி (16) " "
27. நாகராசா விக்னேஸ்வரன் (15), செட்டிக்குளம் வவுனியா (த.மு. விஜி வீதி, முழங்காவில்)
28. தயாபரன் நிர்மலாதேவி (25) " "
29. தயாபரன் தனுசா (3) " "
30. திருச்செல்வம் வரலட்சுமி (29) தெல்லிப்பளை– கிழக்கு (த.மு.332 பாண்டியன்குளம், மல்லாவி)
31. திருச்செல்வம் தர்மியா (4 மாதம்) " "
32. சிவசுப்பிரமணியம் தவமணி (50) வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (த.மு. தேவிபுரம், புதுக்குடியிருப்பு)
33. சிவசுப்பிரமணியம் சிவாகரன் (17) " "
34. சிவசுப்பிரமணியம் தனலட்சுமி (19) " "
35. V. உமாசெல்வம் (22) கணுக்கேணி, முல்லைத்தீவு (த.மு. மல்லாவி, யோகபுரம்)
36. பரம்சோதி செல்வநாச்சியார், (இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு)
37. பரம்சோதி மகான் " "
38. S. சிவபாக்கியம் (செம்மன்குன்று, பூநகரி)
39. S. இராமலிங்கம் (52) யாழ்.வீதி, யாழ். (த.மு.367 கரிகாலை, நாகபடுவான்)
40. இராமலிங்கம் பத்மாவதி " "
41. இராமலிங்கம் பவதராமி (15) " "
42. மரியராசா ராஜேஸ்வரி (43) நாவாந்துறை யாழ்ப்பாணம் (த.மு. வலைப்பாடு)
43. மரியராசா ஜெகன் (15) " "
44. மரியதாஸ் தர்சன் (13) " "
45. யூட் கமில்டன் போல் சறோஜினி (22) " "
46. முத்துக்குமார் அம்பிகைச்செல்வன் (18) இரத்தினபுரம், கிளிநொச்சி (த.மு. மல்லாவி, யோகபுரம்)

## ஈழத்தமிழருக்கு மருந்துகள் அனுப்ப முயற்சித்ததாக தமிழ்நாடு பொலிசால் ஐவர் கைது

தமிழ்நாட்டிலிருந்து தமிழீழத் தமிழர்களுக்கு மருந்துகளை அனுப்ப முயற்சித்ததாக ஐந்து தமிழர்கள் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலை முன்னணிச் செயலாளர் ஈழவேந்தன், காந்தளகம் ஈழத்தமிழ் புத்தக விற்பனை நிலைய உரிமையாளரும், அறவழிப் போராட்டக் குழுவின் ஸ்தாபகர்களில் ஒருவரும், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் ஆலோசகரும் ஆகிய மறவன்புலவு சச்சிதானந்தம், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் புலம்பெயர் தமிழீழப் பெண்ணாகிய மாலினி தேவி இராஜநாயகம், மருத்துவர் சிறீதர், பாண்டியன் ஆகியோரே இவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்டு சென்னையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ◆

## சிறுவர் ஆபாசபடம் தயாரித்தவர் சிறிலங்கா ஜனாதிபதியால் விடுதலை

சிறிலங்காவின் நீர்கொழும்புப் பகுதியில் சிறுவர்களை வைத்து ஆபாசப் படங்களைத் தயாரித்த சுவிஸ்லாந்தைச் சேர்ந்த வர்த்தகரான விக்டன் பகுமான் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. 1985ஆம் ஆண்டு முதல் சிறிலங்காவில் வசித்துவரும் விக்டன் பகுமானுக்கு 1998 மாசி வரை வதிவிட அனுமதி சிறிலங்காவால் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், சிறிலங்காப் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுரத்த ரத்வத்தயின் சிபார்சில் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா, விக்டர் பகுமானை சுவிஸ்லாந்துக்கு திருப்பியனுப்ப உத்தரவிட்டார். இதையடுத்து உதவிப் பொலிஸ் அதிகாரி ரொனி கருணாநாயக்கவின் பாதுகாப்புடன் யாராலும் எவ்விதப் பிரச்சினையும் ஏற்படாதவாறு பாதுகாக்கப்பட்டு விக்டர் பகுமான் சுவிஸ்லாந்து சென்றுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இவர் மீதான வழக்குகள் அனைத்தும் விசாரணையின்றி பின்வாங்கப்பட்டுள்ளன. உலகின் பல நாடுகளில் இடம்பெறும் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் சம்பந்தமாக அகில உலகுமே கவலை கொண்டுள்ள இன்றைய காலகட்டத்தில், சிறிலங்கா ஜனாதிபதி இவ்வாறான ஒரு நபரைத் தப்பிச் செல்ல உதவுவது ஓர் கேடுகெட்ட செயல் என கொழும்பு சிறுவர் நல அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன. இதேவேளை, அண்மையில் பி.பி.சி. தொலைக்காட்சி, சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் சிறிலங்காவின் தென்பகுதியில் அதிகளவில் காணப்படுவதாக 30 நிமிட நிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ◆

www.tamilarangam.net



# எமது கடமை

காலனித்துவம் உருவாக்கிய அந்நிய அரசான சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் இனத்துன்புறுத்தல்கள், இனக்கொலைகள், இனஅழிப்பு எனும் மனிதாயத்துக்கு எதிரான குற்றங்களின் விளைநிலமாக மாற்றப்பட்டுள்ள எமது தமிழீழத்தேசமும் அதன் மக்களும், "பாதுகாப்பான அமைதி" வாழ்வைப்பெற உதவுதல், புலம்பெயர் வாழ் தமிழீழ மக்களாகிய எமது கடமையாகும்.

எமது தமிழீழத்தேச மக்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வைப்பெற, மூன்று தேவைகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

ஒன்று, அவர்களது நியாயமானதும் தவிர்க்கமுடியாததுமான தமிழீழ விடுதலைப் போராட்டம், உலகால் தேசிய விடுதலைப் போராட்டமாக ஏற்கப்படல் வேண்டும்.

இரண்டு, சர்வதேசச் சட்டங்களுக்கும் ஐ. நா. வின் மனிதஉரிமைச் சாசனத்திற்கும் எதிராக, சிறிலங்காவால் இராணுவ முற்றுகைக்கும் பொருளாதாரத் தடைகளுக்கும் மக்கள் மீதான யுத்தத்திற்கும் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு அல்லலுறும் எமது மக்களின் புனர்வாழ்விற்கும் தேசத்தின் புனர்நிர்மாணத்திற்கும் சர்வதேச மனிதாய உதவிகள் நேரடியாக எமது மக்களைச் சென்றடைவதற்குச் சர்வதேசநாடுகள், அமைப்புக்களை உதவும்படி கேட்க வேண்டும். இவ் யதார்த்த நிலைமினை அவர்களுக்கு விளக்கி அதற்கு இத்தகைய சூழல்களில் ஒருநாட்டின் இறைமை என்பதையும்மீறி துன்புறும் மக்களுக்கு உதவும் கடமையும் -சட்டஅதிகாரமும் சர்வதேச சட்டங்களால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன என்பதை நாம் தெளிவுறுத்த வேண்டும். எமது மக்கள் அமைப்புக்களான தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் என்பவற்றின் செயற்பாடுகள், புனிதத்தன்மைகள், ஆற்றல்கள் சர்வதேச சமூகத்திற்கு விளக்கப்பட்டு அவைகள் ஊடாக மனிதாய உதவிகள் எமது மக்களை நேரடியாகச் சென்றடைய உழைக்க வேண்டும்.

மூன்றாவதாக, எமது மக்கள் ஆளணிப்பலம்கொண்டும் சுடுதிறன் பெருக்கம்கொண்டும் சிறிலங்கா நடாத்தும் இனஅழிப்பு யுத்தத்தை எதிர்த்து நிற்பதற்கான தமிழீழத் தேசியப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய நிதியும் வழங்கலும் வழங்கவேண்டிய தலையாய பொறுப்பும் எமது மகத்தான கடமையாக உள்ளது.

இந்த மூன்றுமே, தமிழீழத்தில் வாழும் மக்கள் கைகளில் அல்ல, புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களாகிய எமது கைகளிலேயே தங்கியுள்ளது.

இந்நேரத்தில் எமது தேசத்தலைவர் பிரபாகரனின் பின்வரும் கருத்தை ஒவ்வொரு புலம்பெயர் வாழ் தமிழனும் தமது இதயத்தில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.

"இப்போது நாங்கள் விழிப்புடன் செயற்படத்தவறினால் இத்தனை ஆண்டுகாலமாக நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனைகள், நாம் அடைந்த வெற்றிகள், நாம் அடைந்த துன்பங்கள், நாம் கொடுத்த உயிர்ப்பலிகள் பொருள் இழப்புக்கள் எல்லாமே அர்த்தமற்றவையாகப் போவதுடன், நாம் மீண்டும் அடிமை வாழ்வுக்குள் தள்ளப்பட நேரிடும்" என்பதே எம் தேசத்தலைவனின் விழிப்புக்கான அழைப்பு.

இந்த அழைப்புக்கு எமது பதில் என்ன? மனச்சாட்சி உள்ள மனிதர்களாக - இனமான உணர்வுள்ள மனிதர்களாக - ஆக்கிரமிப்பை அடக்குமுறையை எதிர்க்கக் கூடிய மனிதர்களாக, நாம் மாறவேண்டும்.

எமது புகலிட வாழ்வின் துன்பங்கள் எமக்கு நிறைய உண்டு. நேரத்தையும் பணத்தையும் செலவிடமுடியாத அளவிற்குக் கஸ்டப்படுகிறோம் என்பதும் எமது நாளாந்த அனுபவம்தான். ஆனால் இத்தனைக்கும் மேலாக, எங்கள் எல்லோருக்குமாக தம்மையே தந்து , பாதுகாப்பான அமைதிக்காய் போராடும் எம்மவர் மீது, மேற்கொள்ளப்படும் சிங்கள பௌத்த பேரினவாத இராணுவ அடக்குமுறையை ஒழிக்க, நாமும் ஏதாவது செய்தேயாகவேண்டும். இதுதான் நாம் எமது உடன்பிறப்புக்களுக்கு உதவவேண்டிய உரியநேரம். காலத்தின் தேவை உணர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசக் கிளைகளுடன் இணைந்து எம்மக்களுக்கு உரியவை உரிய நேரத்தில் கிடைக்க இன்றே ஆவன செய்வோம். தேசத்தலைமையுடன் இணைந்து தேசவிடுதலைக்கு விரைவாக உதவுவோம். வாருங்கள். வெற்றுப்பேச்சுப் பேசுவதில் பயனில்லை. செயற்படுவோம். விரைவான திட்டமிட்ட செயற்பாடே ஆக்கம் தரும். ✷

# ஜெனரல்களால் வெற்றி கொள்ளமுடியாத போர்

சிங்கள அரசியல் வாதிகள் எவருமே உலக வரலாற்றையோ, இன்றி தமது சமகால அனுபவத்தையோ பாடமாகவோ அல்லது படிப்பினையாகவோ கொள்வதில்லை. அவ்வாறு கொண்டிருப்பின் இலங்கையின் இனப்பிரச்சனை இதுவரையும் தீர்க்கப்படாது இருந்திருக்கப்படமாட்டாது. அது மட்டுமல்ல, எதிர்காலத்திலும் சுமூகமான முறையிலும் தீர்க்கப்படுவதற்கான சமிக்ஞைகள் எவையும் தென்படாமல் இருந்திருக்கமாட்டாது. அதாவது கடந்த கால ஆட்சியாளர்கள் தற்போதைய ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, எதிர்காலத்தில் ஆட்சியைக் கைப்பற்ற முனைபவர்கள் கூட, இனப்பிரச்சனைத் தீர்விற்குச் சரியான வழிமுறையைச் சிந்திக்காமல் இருந்திருக்க மாட்டார்கள். இந்த வகையில் எதிர்காலத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் முனைப்பாக உள்ள எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் உள்ளடங்குகின்றார். "ஜெனரல்களாக மாறியுள்ள அரசியல்வாதிகளின் மந்திரவித்தைகளால் யுத்தத்தை வெல்லமுடியாது. யுத்தத்தை வெல்லுவதற்கு அனுபவம் கொண்டுள்ள கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் மீண்டும் அமைக்கப்பட வேண்டும்" என்ற ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுக்களே மேலே, தரப்பட்ட விமர்சனத்தின் அடிப்படையாகும்.

ரணில் விக்கிரமசிங்க கூறுவது போல், ஜெனரல்களாய் மாறிவிட்ட அரசியல்வாதிகளின் மந்திரவித்தைகளினால் யுத்தத்தை வெல்லமுடியாது என்பது முற்றிலுமாகச் சரியானதொன்றே. ஏனெனில் இரவோடு இரவாய் கையொப்பமிடும் கடிதங்கள், ஒரு முக்கிய ஜெனரலை உருவாக்கிவிடப் போவதில்லை. அதிகாரம் கையில் கிடைத்துள்ளதினால் ஜெனரல் என்ற தகுதியைப் பெற்றுவிட முடியாது. ஆகையினால், இவ்வாறான ஜெனரல்கள் காட்டும் மந்திர சக்திகள் யுத்தத்தை வெற்றிப்பாதைக்கு ஒருபோதும் கொண்டு செல்லமாட்டாது. ஆனால், ஜெனரல்கள் ஆகிவிட்ட அரசியல்வாதிகளினால் மட்டுமல்ல, இராணுவ ரீதியில் நிபுணத்துவம் பெற்ற ஜெனரல்களாய் பதவி உயர்வு பெற்றவர்கள் கூட தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளில் கடந்த காலத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த வரிசையில் ஜெனரல் சேபால அட்டிகல, ஜெனரல் கமில்டன் வனசிங்க, லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ன என சிறிலங்காவின் ஜெனரல்கள் பட்டியல் நீள்கின்றது. இதைத் தவிர, இந்திய ஜெனரல்கள் பலரது பெயர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான போரில்

**ஆசிரிய தலையங்கம் , ஈழநாதம் - தமிழீழம்**

இடம் பெற்றுள்ளன. இவர்களாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றிகொள்ள முடியவில்லை. அதாவது, தமது வாழ்நாளில் பெரும் பகுதியை இராணுவப்பயிற்சிகளில் கழித்திருந்த ஜெனரல்களினால் கூட வெற்றிபெற முடியாத போர் ஒன்றில், திடீரென ஜெனரலாக மாறிய அரசியல்வாதியினால் எவ்வாறு வெற்றிகொள்ள முடியும்?

யுத்தமென்ன மந்திரத்தால் மாங்காய் பறிக்கும் காரியமா? இதே சமயம் ரணில் விக்கிரமசிங்க கூறுவது போன்று, அனுபவம் வாய்ந்த அதிகாரிகளைக் கொண்ட கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்தினை அமைப்பதனால் மட்டும் போரில் வெற்றிபெற முடியுமா? ஏனெனில் கடந்த காலத்தில் மூன்று தடவை கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் அமைக்கப்பட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், போரில் வெற்றிபெற அப்பொழுதும் வாய்ப்பு ஏற்படவில்லை. இந்த நிலையில் போரில் வெற்றியை, ஜெனரல்களாக மாறியுள்ள அரசியல்வாதிகளால் மட்டுமல்ல, அனுபவம் வாய்ந்த இராணுவத் தளபதிகளினாலோ அன்றி கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் அமைக்கப்படுவதினாலோ பெற்றுவிடமுடியாது. இவை வரலாற்றின் ரீதியாகவே தோல்வி கண்டுவிட்டன. இன்று அரசாங்கத்தரப்பினர் இவர் சொல்லுவது போன்று, அமெரிக்கப் பாதுகாப்புத்துறைமின் தலைமையமாக உள்ள பென்டகன் போன்ற அமைப்பை உருவாக்கினால் கூட, இப்போரில் சிறிலங்கா அரசினால் வெற்றி பெற முடியாது. ஏனெனில் பென்டகன் கூட, தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களில், எடுத்துக்காட்டாக வியட்நாம் போரில் வெற்றிபெற்றதில்லை. இந்த வகையில் ஜெனரல்களின் திறமையோ அன்றி ஆயுதப்படையின் கட்டமைப்பு மாற்றமோ ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடித்து விட உதவப் போவதில்லை. இவ்வாறு எண்ணுவது, "ஆடுவதற்கு மேடை சரியில்லை" என்று கூறும் காரணமாகவே இருக்கமுடியும். ✷

www.tamilarangam.net



## ஆறுபிள்ளைகளின் தந்தை கல்முனை பொலிசால் சுட்டுக் கொலை

தைப்பொங்கல் தினத்திற்கு முதல்நாள் கல்முனைக்குடி அரிசி ஆலையில் பணிபுரியும் 6 பிள்ளைகளின் தந்தையான தொழிலாளி ஒருவர் கல்முனை சிங்களப் பொலிசாரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். சுப்பிரமணியம் கணேசகுமார் எனும் இவரின் மனைவியையும் பொலிசார் பலத்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

### செங்கலடியில் விவசாயிகள் படுகொலை

செங்கலடியில் தங்கள் நாளாந்த வாழ்வுக்காக, வயலில் வேலை செய்து கொண்டிருந்த மூன்று விவசாயிகள் சிறிலங்காப் படையினரின் எறிகணை வீச்சுக்கு இலக்காகி படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ◆

## 3 படையினர் தமிழ்ப் பெண் மீது பாலியல் வன்முறை

மூன்று சிறிலங்கா அதிரடிப் படையினர் கொடூரமான முறையில் ஒரு தமிழ்ப் பெண் மீது பாலியல் வன்முறை புரிந்துள்ளனர். இந்த மனிதாபிமானமற்ற கேவலமான செயல் மண்டூர் பட்டிருப்பில் உள்ள சிறிலங்கா அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆயினும், சிறிலங்கா நீதிமன்றம் அதனைப் பொருட்படுத்தாது சம்பந்தப்பட்டவர்களை பிணையில் செல்ல அனுமதித்துள்ளது. இச் சம்பவம் தொடர்பாக சிறிலங்காப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போதிலும் சிறிலங்கா அரசு, எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ◆

## நாடு பிரிந்தே இருக்கிறது ஒன்று சேர்க்கவே தீர்வுத்திட்டம்

"தமிழ்ப் பிள்ளைகள் சிங்களத்தை வினாத் தாள்களில் கூட வெட்டுகின்றனர். நாடு இப்போது இரண்டாகப் பிரிந்தே இருக்கிறது. அதனை ஒன்று சேர்க்கவே தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைக்கிறது. இத் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதை முழு உலகுமே வரவேற்றுள்ளது. சுவிற்சலாந்து போன்ற மேற்கு நாடுகள் தமிழர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதை நிறுத்தியுள்ளது." இவ்வாறு காலி சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினர் பியசேன கமகே, பிட்டவெத்தரை பாடசாலையில் பேசுகையில் கூறியுள்ளார்.

காலி மாவட்ட பா.உ. சந்திரிகாவின் தீர்வுத் திட்ட முயற்சி இறைமையை வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்குள் திணிப்பதற்கான – ஆக்கிரமிப்புக்கான அரசியல் அணுகுமுறை தான் என்பதைத் தனது உரையினால் நன்கு தெளிவாக்கியுள்ளார். தீர்வுத் திட்டத்தை சிங்களவர்கள் ஏற்காதுவிட்டால் அங்கவீனர் தொகை அதிகரிப்பது ஒன்றே விளைவாகும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

### தமிழ்த் தேசியத்திற்கு சான்று

தான் மட்டக்களப்பில் பரீட்சை மண்டப அதிகாரியாகக் கடமையாற்றியபோது கேள்வித் தாள்களில் க.பொ.த(சாதாரணம்) எனச் சிங்களத்தில் இருந்த அச்செழுத்தைக்கூட தமிழ்ப் பிள்ளைகள் மையினால் கீறி அழித்துவிட்டே தேர்வு எழுதத் தொடங்குவதைத் தான் கண்டதாகக் கூறிய அந்த காலி மாவட்ட பா.உ., இதன் மூலம் தமிழ்த் தேசியம் இலங்கைத் தீவின் தமிழீழத் தேச இனத்தின் வெளிப்பாடு என்பதை தனது பேச்சின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். ◆

## 130 தமிழீழ மக்கள் கடலில்...

நடவடிக்கையால் 10,000 மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். அவர்களுக்கு நிவாரணமோ புனர்வாழ்வு நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை. சந்திரிகா அரசால் உணவு – மருந்து மற்றும் வாழ்வு மறுக்கப்பட்ட நிலையில் இந்தியா செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் எதுவும் இருக்கவில்லை. "இந்தியா நோக்கிச் செல்ல மக்கள் முடிவெடுப்பதானது – பொதுமக்கள் மீதான இராணுவத் தாக்குதலின் வெளிப்பாடே!" எனச் சுட்டிக்காட்டியுள்ள விடுதலைப் புலிகள் "இந்தத் துன்பகரமான கடல் பயணமே, அவர்களின் இறுதிப் பயணமாக இருந்தது பெரும் அதிர்ச்சியாக உள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

### குடும்பங்களின் துயரத்தில் பங்கேற்கிறோம்

இறந்தவர்களின் குடும்பங்களின் துயரத்தில் பங்கெடுத்துக் கொள்வதாக அறிவித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம், 22ஆம் திகதியைத் தமிழீழத் தேசத்தின் தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்தியது. சிங்கள இனவெறியரசின் தமிழின அழிப்புக் கொள்கையால் உயிர்ப் பாதுகாப்புத் தேடி ஓடும் தமிழ்ப் பொதுமக்கள், சிங்கள அரசால் விரட்டி விரட்டி வேட்டையாடப்படும் சம்பவங்கள் நிறையவே நடந்திருக்கின்றன. அந்த வகையில், இந்தச் சம்பவத்தில் இவ்வளவு தொகை மக்கள் ஒன்றாக இறந்துள்ள சோக நிகழ்வு – தமிழீழத்தைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளதை 22ஆம் திகதி தேசிய துக்கதினம் உலகுக்கு தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழீழத்தில் – வீடுகள், வீதிகள், பாடசாலைகள், பொதுமையங்கள், பொது நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு துயர உணர்வு வெளிக்காட்டப்பட்டது. வீதிகள், வர்த்தக நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. முக்கிய வீதிகள், சந்திகளில் எல்லாம் அஞ்சலிச் செய்திகள் வரைந்த பலகைகள் காட்சியளித்தன. முழுத் தமிழீழத் தேசமுமே இந்த துயரச் சம்பவத்தால் உலுக்கி எடுக்கப்பட்டுள்ளதை தேசிய துக்கதினம் தெட்டத் தெளிவாக உலகுக்குக் காட்டியுள்ளது.

### புலம்பெயர்ந்த தமிழர்கள் துயரம்

தமிழீழத்தில் மட்டுமல்ல, புலம்பெயர் தமிழர்களாய் உலகின் பல தலைநகரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழீழ மக்களிடையேயும் இந்தத் துயரச் சம்பவம் அவர்களின் உணர்வுகளைப் பிழிந்து எடுத்துள்ளது. சம்பவத்தைக் கேள்விப்பட்டது முதல் இறந்த மக்களின் விபரங்களை அறிய அந்தந்த நாடுகளில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசக் கிளைகளுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பல நூற்றுக் கணக்கான தமிழீழ மக்கள், தங்கள் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் வெளிப்படுத்தியவண்ணம் இருந்தனர். ◆

## புத்தூரில் படையினர் ...

வெளியே வருமாறு உத்தரவிட்ட சிறிலங்கா இராணுவத்தினர், அவர்களை இரும்புக் கம்பிகளாலும் மரத்தடிகளாலும் துவக்குப் பிடிகளாலும் தாக்குதல் நடத்தினர். பின்னர் வெறிகொண்டு கண்மூடித்தனமாக சுட்டதில் மூவர் படுகொலை செய்யப்பட்டு, ஆறு பேர் கடுங்காயங்களுக்கு உள்ளாகினர்.காலை எட்டு மணியளவில் நடந்த இந்த மக்கள் மீதான தாக்குதலில் பதினொன்று, பதின்நான்கு, பதினாறு வயதுடைய மூன்று மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர் விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

எஸ். கவிதா (20), இராசையா பிரேமிளா (15), இராசையா பிரதீபன் (12), இராசையா சதானந்தன் (25), த. விக்னேஸ்வரன் (30), த. சுப்பிரமணியம் (47), ஆகியோர் கடுங்காயமுற்று யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பிரித்தானிய பிரதியமைச்சர்...

வகையில், சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர், "சிறிலங்கா அரசு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்கத் தயாராக இல்லை" எனப் பகிரங்க அறிவிப்புச் செய்துள்ளார்.

## வெளிச்சம் 50வது இதழ்...

வெளிச்சமாகத் திகழும் வெளிச்சம் இதழ் மேலும் ஒளிவிட்டு சுடர் வீச "களத்தில்" பத்திரிகை சார்பாக சகோதர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கைதடி வெடிவிபத்தில்...

றஞ்சன், சில காலத்துக்கு முன்பு வாசுவோடு சேர்ந்து விமானமொன்றைத் தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டு வந்தார். முழுவதுமாக தன்னை எம்முடனேயே இணைத்துக்கொண்டவர்.

14–2–87 அன்று தாக்குதல் நடத்துவதாக இருந்தது. கெரில்லாத் தாக்குதல்கள் இரவு நடத்துவதுதான் எமக்கு மிகவும் உசிதமானவை. ஏன் என்றால் தாக்குதல் தொடங்கியதும் இராணுவ 'கெலிகெப்டர்'களும் குண்டு வீச்சு விமானங்களும் தகவல் கிடைத்து எம்மைத் தாக்கத் தொடங்கும். பகல் வேளையானால் மேலிருந்து கண்டு பிடித்து குண்டு வீசுவது அவைக்கு மிகவும் சுலபமான விடயம். ஆனால், இரவு இராணுவ முகாமுக்கு தண்ணீர் கொண்டு செல்ல பி. ப. 6–30 மணிக்குப் பின் அனுமதிக்கப்படுவதில்லை. எனவே கடைசி சந்தர்ப்பத்தைத் தேர்ந்தெடுத்தோம். 6–30 மணிக்கு சண்டை தொடங்குமானால், சுமார் ஒரு மணி நேரத்தில் இருட்டடித்துவிடும். அதன் பின் எமக்கு மிகவும் பாதுகாப்பாகவே இருக்கும்.

முதல் நாள் இரவு, இரவாக பொன் அம்மான், வாசு றஞ்சன் ஆகியோர் மருந்தடைத்தனர். "ஜெலட்டினின்" நச்சுத் தன்மை அவர்களைப் பாதித்தது. நான் பார்க்கும் போது மூவரும் சோர்ந்து காணப்பட்டனர். விடியும்போது 'பவுசர்' வெடிமருந்து இணைக்கப்பட்டு தயாராக நின்றது. அம்மான் அவ்விடத்திலேயே தூங்கி விட்டான். வாசுவும் நானும் வந்து தாக்குதல் குழுக்களைப் பிரித்து அவரவர்களுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்துக்கொண்டிருந்தோம். மூன்று பெரிய லொறிகள் தயார்படுத்தப்பட்டன. முகாமுக்குள் சென்ற 'பவுசர்' வெடித்ததும் ஜொனி, கேடில்ஸ், சூசை தலைமையிலான குழுக்கள் லொறிகளில் விரைந்து முகாமுக்குள் சுட்டுக்கொண்டே உட்புகுவார்கள். லொறியின் முன்புறமும் மேல் பக்கமும் மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டன. முதல் லொறியில், மேலே – பரன், 'ரொக்கட்லோஞ்சரு'டன் நிற்பான். உட்புகும் போது, 'ரொட்கட்டால்' வாயில் காவல் அரணை உடைத்தெறிவதாக திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

நேரம் பகலை நெருங்கிக்கொண்டிருக்க, தாக்குதல் குழுக்கள் தத்தமது நிலைகளுக்குச் செல்லத்தொடங்கி விட்டனர். பவுசரை அனுப்பும் பொறுப்பு பொன் அம்மான், கேடில்ஸ், வாசு ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நான் தாக்குதலை நடத்துவதற்காக சகலருடனும் 'வாக்கிடோக்கி'யில் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய வகையில் இடத்தைத் தெரிந்தெடுத்து அதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

நான் ஐந்து மணியளவில் எல்லாக் குழுக்களையும் சரிபார்த்து வந்துகொண்டிருந்தேன். நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நான் ஒரு குழுவினர் நின்ற வீட்டில் அவர்களை சரிபார்த்துக் கொண்டிருக்கையில் மிகப் பெரிய சத்தத்தைத் தொடர்ந்து பூமி ஒருமுறை அதிர்ந்தது. அதிர்ச்சி, வியப்பு. சற்றும் புரியவில்லை. நேரத்தைப் பார்த்தேன். சரியாக 5–30. ஆனால் நாம் 6–30க்குத்தான் வெடிக்க வைப்பதாக இருந்தது. எனவே பொன் அம்மானைப் பல தடவை வாக்கியில் கூப்பிட்டேன். கேடில்ஸ்சைக் கூப்பிட்டேன். வாசுவைக் கூப்பிட்டேன். பதில் இல்லை. பல தடவை அழைத்தேன். பதில் இல்லை. ஜொனியை அழைத்தேன். பதில் வந்தது. ஜொனியை என்னிடம் அழைத்து சத்தம் கேட்ட இடத்திற்கு அனுப்பினேன்.

ஜொனி என்னை அழைத்தான். அங்கு சென்றபோது, எங்கும் தூசிமயம். ஒரு பெரிய குழி. அதற்கருகில் கேடில்ஸ்சினுடைய கார் நொருங்கிப்போய் கிடந்தது. இதற்கு 50 யார் தூரத்தில் லொறி நின்றது. லொறிக்குள் எட்டிப் பார்த்தேன். ஐந்து தோழர்கள் இறந்து கிடந்தார்கள். ஆம் தண்ணீர் நிரப்பிக்கொண்டிருக்கையில் 'பவுசர்' வெடித்துவிட்டது. ஆனால் அந்த இடத்தில் நின்று சம்பவத்தைப் பார்த்த யாரும் உயிருடன் இல்லை. பொன் அம்மான், கேடில்ஸ், வாசு, றஞ்சன் ஆகியோர் அந்த இடத்திற்கு வந்ததாக தோழர்கள் கூறினார்கள். பவுசரில் தண்ணீர் நிரப்பும்போது தண்ணீர் சிறிது ஒழுகியதாம். அதை பொன் அம்மான் கேடில்ஸ்சுக்கும் வாசுவுக்கும் தெரிவித்து பொறியியலாளர் றஞ்சனையும் அழைத்துக்கொண்டு 'பவுசர்' நின்ற இடத்துக்குச் சென்றான். இன்னும் சிலர் தந்த தகவல்படி அவர்கள் அந்த துவாரத்தை ஒட்டுவதற்கு மின்சார இணைப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்ததாகவும் தெரிய வருகிறது. ஆனால், அங்கு நடந்தது என்ன என்பது யாருக்கும் தெரியாது. ஏனென்றால், அந்தக் கடைசி சந்தர்ப்பத்தில் அங்கிருந்த எவரும் இன்று உயிருடன் இல்லை. எல்லோரையும் தேடினோம். வாசுவின் பிஸ்டலும் அடையாள அட்டையும், கேடில்ஸ்சின் காற்சட்டையின் ஒரு பகுதியும் தான் கிடைத்தது.

பொன் அம்மானை அடையாளம் காணக் கூடிய வகையில் அவனுடைய உடலோ, உடலின் பகுதியோ எந்தத் தடமும் கிடைக்கவில்லை. ஈழத்தில் வீசிக்கொண்டிருக்கும் காற்றோடு காற்றாய் அவன் மறைந்துவிட்டான். அந்தத் தவறு எப்படி நேர்ந்தது. விடை கிடைக்கவில்லை. இன்றும் கிடைக்கவில்லை.

இனி எப்போதும் கிடைக்கப் போவதுமில்லை.

–கிட்டு. ★

www.tamilarangam.net



# விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுப் பரப்புரையும் சிறிலங்கா அரசும்

சென்ற இதழ் தொடர்ச்சி

வி. மணிவண்ணன்
(தமிழீழம்)

இன்று எமது மக்களை அழிப்பதற்கு சிறிலங்கா இராணுவத்திற்கு இராணுவ உதவிகள், பயிற்சிகள் வழங்கும் நாடுகளுடன்கூட அமோகமான நல்லுறவினை ஏற்படுத்துவதிலும், அவர்களது உதவிகள் எவ்வாறு தமிழ் மக்களை அழிக்கின்றது என்பதை வலியுறுத்திச் சுட்டிக்காட்டுவதிலும் விடுதலைப் புலிகள் பூரண கவனம் செலுத்தி வருகின்றார்கள். அரச சார்பற்ற நிறுவனங்களுடனும், உதவிவழங்கும் தொண்டர் அமைப்புக்களுடனும் நல்லுறவைப் பேணுவதிலும் அவர்களது வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவதிலும் விடுதலைப்புலிகள் இயக்கமானது முன்னுரிமை கொடுத்து வருகின்றது. தமிழ் மக்களின் வாழ்விற்கெதிராகச் செயல்படும் சிறிலங்கா அரசும் அதன் அரச இயந்திரமும், விடுதலைப் போராட்டத்தின் எதிரிகள் என்பதை, விடுதலைப் புலிகள் இயக்கமானது தெளிவாக உணர்ந்துள்ளது.

இந்த 24 வருடகாலப் போராட்ட வரலாற்றில் எந்தவொரு வெளிநாட்டினரைக் கடத்துவதிலோ, பணயம்வைப்பதிலோ, அச்சுறுத்துவதிலோ அல்லது அவர்களின் சொத்துக்களை நாசமாக்குவதிலோ ஈடுபட்டது கிடையாது. ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் பாரிய இடப்பெயர்வு குறித்து அறிக்கை வெளியிட்ட ஐ.நா. செயலாளர் நாயகத்தை வெருட்டியதும், கொழும்பில் துடுப்பெடுத்தாட்டத்திற்கு வராமலிருந்த அவுஸ்திரேலியாவை விரட்டியதும் நாகர்கோவில் குண்டுவீச்சைச் சுட்டிக்காட்டிய M.S.F. நிறுவனத்தைக் கண்டித்ததும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்தைக் கொழும்பில் குழப்பியதுமாக, தமது தமிழினப் படுகொலையை ஏற்றுக்கொள்ளாத நாடுகள், அமைப்புக்கள் மீது பாய்வது சிறிலங்கா அரசின் செயற்பாடுகளாகும், அத்துடன், அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் ஆகிய நாடுகளின் கூலிப்படைகளைக் கொண்டு தமது இராணுவத்திற்குப் பயிற்சி அளிப்பதும், அவற்றை இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதும் சிறிலங்கா அரசுதான். விடுதலைப் புலிகளது வெளிநாட்டுப் பரப்புரைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமலும், வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் செய்கின்ற நிதியுதவியினைப் பொறுக்க முடியாத சிறிலங்கா அரசு, வெளிநாடுகளிலுள்ள மா.:.பியா கும்பல்களுடன் தொடர்பு கொண்டு வெளிநாட்டிலுள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களைக் கொலை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது என்பது நாதன், கஜன் ஆகியோர்களின் படுகொலைச் சம்பவங்களைத் தொடர்ந்து அம்பலமாகியுள்ளது.

"எந்தப் பேயிடமாவது உதவிபெற்று தமிழர் விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பேன்" என்று சூழுரைத்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. அதனை இன்று சந்திரிகா நடைமுறைப் படுத்துகின்றார். சிறிலங்கா அரசின் இவ்வாறான செயற்பாடுகள், தென்னாசிய வட்டத்தின் சமநிலைமையைக் குழப்புவதுடன், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதித்தன்மையைச் சீர்குலைப்பதுடன், வல்லரசுப் போட்டியொன்றிற்கும் களம் அமைப்பதாகவே தோன்றுகின்றது.

உலகின் முதுபெரும் இனம் தமிழினமாகும். ஏனைய இனங்கள் நாகரீகம் அடையாத காலத்தில் உலகிற்குத் தமது உயர் நாகரீகத்தைப் பரப்பி சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்த இனமாகும். மனிதநேயம், மனிதஉணர்வு, மனித நாகரீகம், மனித உரிமை, மனிதப்பண்பினை உலகிற்கே எடுத்துக்காட்டிய இனம் தமிழினம். தமிழர்களுக்கு யாரும் மனிதஉரிமை பற்றிச் சொல்லிக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறான ஒரு பாரம்பரியத்தில் வந்தவர்கள்தான் விடுதலைப்புலிகள்.

## பாஸ்போட் மோசடி அல்லது ஆட்களைக் கடத்தல்

இன்று சந்திரிகா அரசின் மிலேச்சத்தனமான யுத்தத்திற்கும் பொருண்மியத் தடைக்கும் முகம் கொடுக்க முடியாத தமிழ் மக்கள், தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து வெளியேறி வருகின்றார்கள். இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பிச் சம்பாதிப்பதையே தொழிலாகக் கொண்ட நூற்றுக்கணக்கான முகவர் நிலையங்களும், முகவர்களும் கொழும்பிலும் பல்வேறு நாடுகளிலும் உள்ளனர். இவர்களில் சட்டரீதியாக இயங்குபவர்களும் பல்வேறு வகையான சட்டமீறல்களையும், ஏமாற்றுக்களையும் செய்பவர்களும் இருக்கின்றார்கள். இவர்கள், அரசின் பல்வேறு மட்டங்களின் ஆதரவுடனும், அனுசரணையுடனும் இயங்கி வருகின்றார்கள். இவர்களைக் கட்டுப்படுத்துவதையோ, கண்காணிப்பதையோ செய்ய முடியாத சிங்கள அரசின் கையாலாகாத்தனத்தையும், சட்ட ஒழுங்கின்மையையும் மூடிமறைப்பதற்காகவே, விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டுக்களைப் போட முனைகின்றனர் என்பது தெளிவு.

## மனித உரிமை மீறல்

இன்றைய புதிய உலக ஒழுங்கில், மனித உரிமை என்பது ஒரு ஆயுதமாக அல்லது ஒரு அழுத்தமாகப் பயன்பட்டு வருகின்றது. உலகின் முதுபெரும் இனம் தமிழினமாகும். ஏனைய இனங்கள் நாகரீகம் அடையாத காலத்தில் உலகிற்குத் தமது உயர் நாகரீகத்தைப் பரப்பி சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்த இனமாகும். மனிதநேயம், மனிதஉணர்வு, மனித நாகரீகம், மனித உரிமை, மனிதப்பண்பினை உலகிற்கே எடுத்துக்காட்டிய இனம் தமிழினம். தமிழர்களுக்கு யாரும் மனிதஉரிமை பற்றிச் சொல்லிக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறான ஒரு பாரம்பரியத்தில் வந்தவர்கள்தான் விடுதலைப்புலிகள். இன்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தைக் காட்டிகொடுப்பவர்களுக்கும் துரோகம் செய்பவர்களுக்கும் தண்டனை வழங்கப்படுகின்றது. மேலும், தமிழர்களின் தாயகப் பிரதேசங்களில் சிங்கள அரசினால் பலாத்காரமாகக் குடியேற்றப்பட்ட ஆயுதம் தாங்கிய சிங்களக் காடையர்கள் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடத்துகிறார்கள். காட்டிக் கொடுப்பவர்களாலும், சிங்களக் காடையர்களாலும் எத்தனையோ ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். காயமடைந்தார்கள். சொத்துக்களை இழந்தார்கள். தமது பாரம்பரியப் பூமியில் இருந்து விரட்டப்பட்டார்கள். தமிழினத்தின் மீது, நாசம் விளைவிப்பவர்களுக்கு விடுதலைப் புலிகள் ஒருபோதும் கருணை காட்டுவதில்லை. மறுவளமாக சண்டைகளில் கைதாகும் இராணுவத்தினர், பொலிஸார் பலர் எந்தவித நிபந்தனையுமின்றி மனிதநேய அடிப்படையில் தமிழீழத் தேசியத் தலைவரால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். சாதாரண சிங்கள மக்கள் மீது, தமிழ் மக்களுக்கு எதுவித வெறுப்பும் இல்லை. மாறாக, சிங்கள இனவாத ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டு, பலிக்கடாக்களாக்கப் படுகிறார்கள் என்ற அனுதாபமே மேலோங்கியுள்ளது. அரசியல்வாதிகள் குளிரூட்டப்பட்ட தமது மாளிகைகளில் இருந்துகொண்டு தமது பிள்ளைகளை வெளிநாட்டிற்கும், கொழும்பிலுள்ள உயர்தரப் பாடசாலைகளுக்கும் அனுப்பி கிரிக்கெட் விளையாடி, டிஸ்கோ என்றும், கசினோ என்றும் போய்க்கொண்டிருக்க, கிராமப்புறங்களில் வாழும் அப்பாவிச் சிங்களவர்களின் பிள்ளைகள் வடக்குக் கிழக்கு யுத்த முனைகளில் கொல்லப் படுவதும், அங்கவீனமாக்கப்படுவதும் அனுதாபத்தையே ஏற்படுத்தியுள்ளது.



14 - 08 - 95 இல் சுவிசில் நடைபெற்ற பரப்புரைப் போரில்
( மாபெரும் பேரணியில்).....

இவ்வாறு, சிங்கள அரசு மேற்கொள்ளும் பொய்யான பரப்புரையை எந்தவொரு நாடும் ஏற்றுக்கொள்ளாதபோதும், லக்ஸ்மன் கதிர்காமர் சளைக்காமல் ஒவ்வொரு நாடுநாடாக ஏறி இறங்கி, விடுதலைப்புலிகளின் செயலகங்களை மூடிவிடப் பகீரதப் பிரயத்தனம் எடுத்து வருகின்றார். தமிழர்களின் நீதியான போராட்டத்தின் காரணமாகவும் விடுதலைப் புலிகளின் செயலகங்கள், அந்தந்த நாட்டுச் சட்ட ஒழுங்கிற்கமைய செயற்படுவதாலும் கதிர்காமரின் முயற்சி, விழலுக்கு இறைத்த நீராய்ப் போயின.

சாதாரண சிங்கள மக்கள் மீது, தமிழ் மக்களுக்கு எதுவித வெறுப்பும் இல்லை. மாறாக, சிங்கள இனவாத ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டு, பலிக்கடாக்களாக்கப் படுகிறார்கள் என்ற அனுதாபமே மேலோங்கியுள்ளது. அரசியல்வாதிகள் குளிரூட்டப்பட்ட தமது மாளிகைகளில் இருந்துகொண்டு தமது பிள்ளைகளை வெளிநாட்டிற்கும், கொழும்பிலுள்ள உயர்தரப் பாடசாலைகளுக்கும் அனுப்பி கிரிக்கெட் விளையாடி, டிஸ்கோ என்றும், கசினோ என்றும் போய்க்கொண்டிருக்க, கிராமப்புறங்களில் வாழும் அப்பாவிச் சிங்களவர்களின் பிள்ளைகள் வடக்குக் கிழக்கு யுத்த முனைகளில் கொல்லப்படுவதும், அங்கவீனமாக்கப்படுவதும் அனுதாபத்தையே ஏற்படுத்தியுள்ளது.

## விடுதலைப் புலிகளது வெளிநாட்டுச் செயற்பாடுகள்

உலகிலே மிகவும் கட்டுப்பாடான ஒழுக்கம் மிக்க விடுதலை இயக்கம் விடுதலைப்புலிகள் மட்டும்தான்.

தொடர்ச்சி மறுபக்கம்...

www.tamilarangam.net



# விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு.....

விடுதலைப்புலிகள் இயக்கமானது மதுஅருந்துதல், புகைப்பிடித்தல், ஒழுங்கிற்கெதிரான பாலுறவு, மக்களது சொத்தைத் திருடல் போன்ற செயல்களற்ற இறுக்கமான கட்டுப்பாடுகளையுடைய ஒரு விடுதலை இயக்கமாகும். தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு நீதிமன்றம், காவல்துறை போன்ற பல சட்ட அமைப்புக்களை நிறுவி, நீதியான சட்ட ஒழுங்கினைப் பேணிவந்ததுடன் தமிழர்களது சமூக, பொருண்மிய மேம்பாட்டுக்கான அமைப்புக்களையும் நிறுவி,

**தமிழ் தேசியத்தில் பற்றுறுதி கொண்டவர்களும், சிங்கள இனவாதத்தின் பல்வேறு வடிவங்களால் பாதிக்கப்பட்டவர்களுமான தமிழ் இளைஞர்களும், தமிழ் புத்திஜீவிகளும்தான் விடுதலைப்புலிகளது பரப்புரையின் ஆணிவேராக அமைந்துள்ளார்கள். தன்னலம் கருதாது, தமது குடும்ப நலன்களைத் துறந்து, கடும் பனியிலும், குளிரிலும், வெயிலிலும் அலைந்து திரிந்து தம்மை வருத்தி பல்வேறு வகையான இன்னல்களிற்கும், அழுத்தங்களிற்கும் முகம் கொடுத்துச் செயலாற்றும் செயற்பாட்டாளர்கள் தான் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பரப்புரையின் அத்திவாரக் கற்களாகும்.**



10. 09 . 96 - 16 . 09 . 96 வரை சுவிஸ் சூரிச்சில் நடைபெற்ற , சுவிஸ் பிரதிநிதி முரளிதரனை விடுதலை செய்யக் கோரிய பரப்புரைப் போரில்......

அவற்றிற்காகவும் பாடுபட்டு வருகின்றது. தமிழ் மக்கள் நேரடியாகப் பங்குபற்றக் கூடிய அமைப்புக்கள் இவை. வெளிநாடுகளில் செயற்படும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் இவ்வாறான பல கட்டுப்பாடுகள் உள்ளன. வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகள் செயலகங்கள் அந் நாடுகளின் சட்ட ஒழுங்குகளுக்கு அமையவே செயற்பட வேண்டுமென, தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் எப்போதும் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இருந்த போதிலும் கனடா, சுவிற்சலாந்து போன்ற நாடுகளில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே. சிறிலங்கா அரசினது விசமத்தனமான பொய்ப் பிரச்சாரங்களால் இவ்வாறான சில சம்பவங்கள் நடந்த போதிலும் இதற்கும் சட்டரீதியாக விடுதலைப் புலிகள் இயக்கம் நடவடிக்கை எடுக்கின்றது. இதன் அடிப்படையிலேயே சுவிஸ் பிரதிநிதி அண்மையில் விடுதலை செய்யப்பட்டார். அதேபோல், கனடாப் பிரதிநிதியும் விரைவில் விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

விடுதலைப் புலிகளின் அனைத்துலகப் பரப்புரையின் மையமாக, லண்டனில் அமைந்துள்ள அனைத்துலகச் செயலகம் இயங்கி வருகின்றது. மேலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் விடுதலைப் புலிகளின் செயலகங்களும் தொடர்பு




1995 இல் யேர்மனியில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான பரப்புரைப் போரில்......

மையங்களும் அமைந்துள்ளன. சிறிலங்காவின் தூதரகங்களைவிட, அதிக நாடுகளிலும் பல்வேறு நகரங்களிலும் பரந்துபட்ட ஒரு பரப்புரை வலையகத்தை நிறுவியுள்ளார்கள்.

தமிழ் தேசியத்தில் பற்றுறுதி கொண்டவர்களும், சிங்கள இனவாதத்தின் பல்வேறு வடிவங்களால் பாதிக்கப்பட்டவர்களுமான தமிழ் இளைஞர்களும், தமிழ் புத்திஜீவிகளும்தான் விடுதலைப் புலிகளது பரப்புரையின் ஆணிவேராக அமைந்துள்ளார்கள். தன்னலம் கருதாது, தமது குடும்ப நலன்களைத் துறந்து, கடும் பனியிலும், குளிரிலும், வெயிலிலும் அலைந்து திரிந்து தம்மை வருத்தி பல்வேறு வகையான இன்னல்களிற்கும், அழுத்தங்களிற்கும் முகம் கொடுத்துச் செயலாற்றும் செயற்பாட்டாளர்கள் தான் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பரப்புரையின் அத்திவாரக் கற்களாகும். இந்த உறுதியான, பலமான, உலகம்முழுதும் பரந்துபட்டிருக்கும் விடுதலைப்புலிகளின் கட்டமைப்புக்களைச் சீர்குலைப்பதற்குப் பரப்புரை ரீதியாகவும் சட்டரீதியாகவும் முயற்சி எடுத்துத் தோல்வி கண்ட சந்திரிகா அரசானது, இன்று தனது பயங்கரவாதத்தை அங்கு ஏவிவிட்டுள்ளது.

இதுவரைகாலமும் உள்நாட்டில் தமிழர்கள்மீது திணிக்கப்பட்ட அரச பயங்கரவாதமானது, தற்போது கடல் கடந்து வெளியுலகிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. போரின் அச்சத்தினால் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்குக்கூட, தற்போது பாதுகாப்பு இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாசா போன்ற சிங்கள ஜனாதிபதிகள் செய்யத்துணியாத காரியத்தைப் பிரான்சில் அரசியல் விஞ்ஞானம் கற்ற, சந்திரிகா அம்மையார் செய்யத் துணிந்துள்ளார். இனிமேல் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கூட, சிங்களப் பேரினவாத உயிர்வடிவமான அரச பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாப்புத் தேடவேண்டிய நிலையில் உள்ளார்கள். **"கெட்டிக்காரன் புழுகும் எட்டு நாளைக்கு"** என்ற முதுமொழிக்கிணங்க, இதுவரைகாலமும் லக்ஸ்மன் கதிர்காமராலும் ஜீ.எல். பீரிஸினாலும் கட்டி எழுப்பப்பட்ட தமிழர்களின் உரிமை வழங்குவதற்கான நாடகத்தின் திரை முற்றுமுழுதாகக் கிழிந்து விட்டது. **"கணவனை இழந்த கைம்பெண்"** என்று சந்திரிகா போட்ட வேடமானது, கிருஷாந்தியாலும் ரஜனியாலும் குலைந்துள்ளது. போருக்கான தீவிர ஈடுபாட்டையும் தமிழர்களை அழிப்பதில் காட்டும் வெறியையும், சமாதானம் என்பது வெளியுலகை ஏமாற்றப் பயன்படுத்தும் பொய்ப்பரப்புரை என்பதையும் அனைத்துலகமும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. சந்திரிகா அரசின் உள்நாட்டு அரச பயங்கரவாதமும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முனையும் அரச பயங்கரவாதத்தையும் அனைத்துலகமும் தெளிவாக உணர்ந்துள்ளது. தமிழர்களது நீதியான போராட்டத்தை ஏற்றுக்கொண்ட அனைத்துலகம், விரைவில் தமிழர்களது பாரம்பரியத் தாயகம், இலங்கைத்தீவின் வடக்கு – கிழக்கு பகுதிகள் என்பதையும், தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்ப தையும், தமிழீழத்தில்தான் தமிழ்மக்கள் நிரந்தர சமாதானத்துடனும் அமைதியுடனும் வாழமுடியும் என்பதையும் ஏற்றுக்கொள்ளும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

(முற்றும்)



www.tamilarangam.net



# யாழ் குடாநாட்டிலிருந்து ஒரு கடிதம்

**சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ் குடாநாட்டிலுள்ள தென்மராட்சிப் பகுதியிலிருந்து, வயோதிபத் தாய் ஒருவர் வன்னியில் உள்ள தன் மகனுக்கு எழுதிய கடிதம்.**

தென்மராட்சி
31-10-96.

**அன்புள்ள மகனுக்கு!**

வன்னிப்பகுதியிலுள்ள காடுகளில் – மரநிழல்களில் கஞ்சியோ, கூழோ குடித்துவிட்டு நின்மதியாக நீங்கள் உறங்குகிறீர்கள். ஆனால் நாங்கள் கல்வீட்டில் இருந்தாலும் நின்மதியாக உண்டு, உறங்க முடியாமல் அவல நிலையில் வாழவேண்டி இருக்கிறது. முன்னர் மட்டக்களப்பில் இருந்த நிலையில்தான் தற்போது இப்பகுதி இருக்கிறது.

இங்குள்ள பனைமரங்களுக்கு ஏற்பட்டுள்ள கதிபோல்தான் இங்குவாழும் ஆண்பிள்ளைகளின் நிலையும் இருக்கிறது. இங்குள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எப்படியாவது வன்னிக்கு அனுப்பிவிட வேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறார்கள். தாய்க் கோழியின் சிறகின் அரவணைப்புக்குள் இருக்கும் குஞ்சுகளை இறாஞ்சிக்கொண்டு இரையாக்கும் பருந்துபோல், பெற்றோர்களின் பிடியில் இருந்து விடலைப்பருவத்து பெண்பிள்ளைகளையும் ஆண்பிள்ளைகளையும் கதறக்கதற ஆமிக்காரங்கள் இழுத்துச் செல்கிறாங்கள். வேள்விக்குக் கொண்டு செல்லும் ஆட்டுக்கடாக்களைப் போல, பிள்ளைகள் செல்லும் காட்சியும், அவர்களைப்பிரிந்து கண்ணீர் மல்க பெற்றோர்கள் குளறி அழும் அவலமும் சொல்ல முடியாது.

தென்மராட்சிப் பகுதி இராணுவ சூனியப் பிரதேசமாக, பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள் இராணுவத்தினர். தேவையான அத்தியாவசியப் பொருட்களைக்கூட, பக்கத்திலுள்ள கடைகளுக்குச் சென்று வாங்க முடிவதில்லை. வீட்டுப் படலையைத் திறக்க முடியாத அளவுக்கு எந்த வீட்டிலும் படலையைக் காணமுடியாது. வீட்டு வேலிகள் மரம்–தடி–குழை எதுவும் இல்லாத அளவு வெட்டி அழிக்கப்பட்டுள்ளன. நான்கு சுவருக்கு மத்தியில்தான் முடங்கிக் கிடக்க வேண்டியிருக்கிறது. 'ஐயோ' என்று அவலக்குரல் எழுப்பினால், ஏனென்று கேட்க யாரும் வரமாட்டார்கள்.

நான் உயிருடன் இருந்தால் கண்டு கொள்ளுங்கள். உங்கள் சுகம்தான் எனது சுகம்.

அன்புடன்
அம்மா

# ஏவுகணைகள் தீர்வாகா!

'ஈழநாதம்' ஆசிரிய தலையங்கம்

விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தில் துப்பாக்கிகளில் இருந்து பீரங்கிகள், ஆட்டிலறிகள் எனக்கனரக ஆயுதங்களை வைத்துள்ள சிறீலங்கா ஆயதப்படையினர் இனி ரொக்கட்டுகளுக்குப்பதில் ஏவுகணைகள் செல்லாது விட்டால் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது எனக் கருதத்தொடங்கியுள்ளனர். இதனால் அரசு தானே ஏவுகணைகளை கொள்வனவு செய்ய முன்வரவேண்டும் என அவை சிபாரிசு செய்ய முனைகின்றன.

கடந்த 13 ஆண்டுகளாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் தீவிரமாக ஈடுபட்டுள்ள சிறீலங்கா ஆயுதப்படையினர் காலத்துக்குக்காலம் நவீன போர்த்தளபாடங்களை அறிமுகம் செய்த வண்ணம் உள்ளனர். இந்தஅறிமுகம் தரை, கடல், வான் என மூன்று பகுதிகளிலும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதனால் கணிசமான அழிவுகளை அவற்றால் செய்யக்கூடியதாகவும் இருந்துள்ளது. ஆனால் ஆட்சியில் இருந்த சிறீலங்கா ஆட்சியாளர் எவரும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் வெற்றியீட்டவில்லை. போரில் அவர்களினால் வெற்றியீட்ட முடிந்திருக்குமாயின் நவீன ஆயுதங்களை மேலும் மேலும் அறிமுகம் செய்துவைப்பதில் அவர்கள் அக்கறை காட்டவேண்டிய அவசியம் எதுவும் இருந்திருக்க மாட்டாது. இந்தவகையில் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவம் வெற்றிபெற்று வருகின்றது என்ற அரசாங்கத்தின் பேச்சுக்களே அபத்தமானவையாகும். ஆனால் ஏவுகணைகள் குறித்து பிரஸ்தாபிக்கும் அளவிற்கு முன்னர் எப்பொழுதும் இல்லாத வகையில் யுத்தம் தற்போது தீவிரம் அடைந்துள்ளது. அல்லது தீவிரம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையானது இலங்கையில் சந்திரிகா குமாரதுங்கா கூறிக்கொள்வது போன்று, யுத்தம் விரைவில் முடிந்துவிடுவதற்கான சாத்தியப்பாடுகள் எதுவும் இல்லை என்பதை உணர்த்துவதாகவே இருக்கும். ஆயுதத் தளபாடங்களின் பெருக்கம் நவீனத்துவம் தேசிய இனங்களின் போராட்ட வெற்றி கொள்கை கூடியனவாக இருந்திருப்பின் உலகில் தேசிய இனங்களின் எழுச்சிகரமான வரலாறுகளே இன்று இருந்திருக்க மாட்டாது. தேசிய இனங்களின் அடிப்படையில் உருவாகிய அரசியலே இன்று இருந்திருக்க மாட்டாது. மறுவகையாக ஒடுக்குமுறையாளர்களின் ஆட்சியே உலகை ஆக்கிரமித்து இருக்கும். தேசிய இனங்கள் யாவும் அடக்குமுறைக்கு எதிராக எழுச்சிகொண்ட போதெல்லாம் அடக்குமுறையாளர்கள் பலமாகவே இருந்தார்கள். ஆயுதரீதியிலும், ஆளணியிலும் மிகக்குறைந்த பலத்துடன் இருந்ததில்லை. ஆனால் இவர்களின் தோல்வியானது எழுச்சிப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இனத்தவர்களின் தியாகங்களினாலும்,அர்ப்பணிப்புக்களினாலும், வீரம்செறிந்த போராட்டங்களினாலும் விளைந்ததே ஒழிய ஆயுதபலத்தினாலோ, ஆளணி அதிகரிப்பினாலோ விளைந்தவை அல்ல.

இனப்பிரச்சனை ஒன்றிற்கு ஆயுதரீதியில் தீர்வு ஒன்றைக் காண முடியாது என்பதற்கான உலகின் முதலாவது படிப்பினை அல்ல இலங்கை இனப்பிரச்சனை ஒன்றிற்கு ஆயுதரீதியில் தீர்வு காண முற்படுகையில் அது தீவிரமாகிவிடும் என்பதே வரலாற்றுப் பாடமாகும். ஒடுக்குமுறை தீவிரமாக அதற்கு எதிரான போராட்டமும் தீவிரமாகும் என்பதே யதார்த்தமானதாகும். ஏனெனில் விழிப்புற்ற ஒரு மக்கள் கூட்டமாக அடக்குமுறைக்கு அஞ்சித் தமது உரிமைகளை விட்டுக்கொடுக்கப் போவதில்லை. மேலும் அடக்குமுறை தீவிரமானதாக இருந்தால் இருதரப்பினருக்கும் இடையிலான சமரசம் என்பது கடினமாகவே இருக்கும். ஏனெனில் இழப்புக்களும் அழிவுகளும் அதிகரித்துச் செல்லச்செல்ல கோரிக்கைகளும் இழப்புக்களும் தவிர்க்க முடியாதவாறு அதிகரித்துச் செல்பவையாகவே இருக்கும்.அத்தோடு ஒடுக்குமுறையாளர்கள் மீதான நம்பிக்கையீனமும் அதிகரித்துச் சென்ற வண்ணமே இருக்கும். இந்தவகையில் இராணுவத்தின் ஆயுதத்தளபாட நவீனமயமாக்கலும் ஆளணிப்பெருக்கமும் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு பெரும் முட்டுக்கட்டையாகவும், நிட்சயம் விடுதலைப் போராட்டத்தின் தீவிரத்தையும் அதிகரிக்கவே உதவும். ஒருபோதும் சந்திரிகா எண்ணுவது போன்று இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காண்பதற்கு உதவ மாட்டாது. இதனால் இருதரப்பிற்குமான முரண்பாட்டில் இணக்கம் காணமுடியாத நிலையையே உருவாக்கும். ✷

# ஜனாதிபதிக்கு ஓர் பகிரங்கக் கடிதம்

**1996 செப்ரம்பர் 7ம் திகதி யாழ். குடாநாட்டில் உள்ள கைதடிப்பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத் தடைமுகாமில் உள்ள படையினரால் கைதுசெய்யப்பட்ட கிருஷாந்தி குமாரசாமி (18) சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி, திருமதி. இராசம்மா குமாரசாமி (59) கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய துணைஅதிபர், பிரணவன் குமாரசாமி (16) யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன், கிருபாகரன் சிதம்பரம் (35) ஆகியோர் பின்பு செம்மணி வெளியில் சடலங்களாக மீட்கப்பட்டது யாவரும் அறிந்ததே. இவர்களில் கிருஷாந்தி குமாரசாமி இராணுவத்தின் கொடூரமான பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இவரது சகோதரியான பிரஷாந்தி குமாரசாமி, சிறிலங்கா ஜனாதிபதிக்கு எழுதிய பகிரங்கக் கடிதமே இது.**

சந்திரிகா குமாரதுங்கா,
ஜனாதிபதி,
அலரிமாளிகை.

**மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு**

இந்தக்கடிதத்தை உங்களுக்கு எழுத வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு. தாய், சசோதரி, சகோதரன், உதவ வந்த நண்பர் என நான்கு பேரை இழந்து நிற்கின்றேன். இது தவிரவும் நானொரு இருப்பிடமற்றவள். பன்னிரண்டு வருடங்களுக்கு முதல், தந்தையை இழந்து நிற்கும் அனாதை.

1996 செப்ரம்பர் 7ம் திகதி நண்பகல் வேளை, கிருஷாந்தி குமாரசாமி என்ற பெயருடைய எனது 18 வயதுச் சகோதரியைச் நாவற்குழி – கைதடி வீதியில் வைத்து இராணுவத்தினர் கைது செய்தனர். அதேநாள் 59 வயதான இராசம்மா குமாரசாமி என்ற எனது தாயும், 16 வயதான ஒரே சகோதரன் [illegible]ணவனும், எங்களுக்கு உதவும் 35 வயதான கிருபாகரன் சிதம்பரமும் முகாமுக்குச் சென்று அங்கிருந்த இராணுவத்திடம் கிருஷாந்தியைப் பற்றிய விபரங்களைக் கேட்டறிய முயன்றனர். ஆனால், அங்கு சென்ற அவர்கள் மூவரையும் இராணுவத்தினர் கைது செய்து விட்டனர். இது அன்றைய தினம் (96 செப்ரம்பர் 7) 2 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் நடைபெற்றது. அதன்பிறகு இன்றுவரை அவர்களைப்பற்றிய எதுவித தகவல்களையும் நான் பெறவில்லை. கேட்கவுமில்லை. இவ்வுலகில் எனக்கென்றிருந்த சொந்தமும், சுற்றமும் அவர்கள்தான்.

இதன் பிறகெல்லாம், பலமுறை இராணுவத்திடம் அவர்கள் பற்றி விசாரித்தேன். ஆனால், அவர்களைப்பற்றிய எதுவித தகவல்களையும் இராணுவ்த்தினர் தெரிவிக்கவில்லை. இந்தச்சம்பவம் பட்டப்பகலில் பலர்முன் நடந்தது. அவர்களை விசாரணைக்கென கைது செய்ததை அங்கிருந்த பலபேர் கண்ணுற்றிருக்கின்றனர். எனினும் அவர்களெல்லாம் வெளியில் வந்து (சாட்சி) சொல்வதற்குப் பயப்படுகிறார்கள். இராணுவம் (அவர்களை) பயமுறுத்தி வைத்திருக்கிறது. நாங்கள் இருந்த இடத்திற்குச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்து அங்கிருந்தவர்களையெல்லாம் பயமுறுத்தியிருப்பதாக நான் அறிந்தேன். சிலவேளை இதுதான் இராணுவத்தினரின் இவ்வாறான சம்பவங்களுக்கான விசாரணை முறையோ தெரியாது. மேன்மை மிகு ஜனாதிபதி அவர்களே! நீங்களும் ஒருதாய். உங்கள் கணவரையும் மிகவும் துன்பகரமான முறையில் இழந்தவர் நீங்கள். உங்கள் கணவரும் இவ்வாறான துன்பகரமான நிலைகளை ஏனையவர்களின் வேதனைமிகு வாழ்க்கையை எண்ணிறைந்ததும், சொல்ல முடியாததுமான கஸ்டங்களையெல்லாம் சகிப்பவரல்லவே.

மேதகு ஜனாதிபதி அவர்களே! எனக்கிருந்த உறவுகளான அவர்களை இழந்துபோய் அநாதையாய் வாடி நிற்கும் நான் உங்களை மன்றாட்டமாய்க் கேட்கிறேன், இக்கைது பற்றிய உடனடி விசாரணைகளை, நடவடிக்கைகளை எடுக்குமாறு. இராணுவத்தின் ஒழுங்கு குலைந்துவிடும், அவர்கள் அவநம்பிக்கை கொள்வர் என்பதற்காக வேண்டி இதுபற்றிய எனது வேண்டுகோள்களை நீங்கள் கண்டுகொள்ளாமல் இருந்துவிடாதீர்கள். ஜனாதிபதி அவர்களே! இராணுவத்தின் ஒழுங்கு குலைந்துவிடும் என்றெல்லாம் சொல்லப்படும் காரணங்களை வைத்து, பெறுமதி மிகு உயிர்கள் சம்பந்தப்பட்ட இவ்வாறான நிகழ்வுகளையிட்டு நீங்கள் அசிரத்தையாக இருக்கக்கூடாது. நீங்கள் இவற்றுக்கெல்லாம் பதில் சொல்லவும், மக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களாகவும் இருக்கிறீர்கள்.

மேதகு ஜனாதிபதி அவர்களே! நான் ஏழ்மையான எதுவித உதவிகளுமற்ற ஒரு பெண்தான். எனினும் நம்பிக்கை இழக்கவில்லை. வேதனையோடு உங்கள் பக்கம் திரும்பியிருக்கிறேன். ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன்......, நீதியின் பெயரால் எனக்கொரு நீதியைப் பெற்றுத்தருமாறு நான் உங்களை மன்றாட்டமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வண்ணம்
பிரஷாந்தி குமாரசாமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 09, 10 ஜனவரி 1997 ஆனையிறவு - பரந்தன் இராணுவ முகாங்கள்



01. கப்டன் அமரவதி
பாலசிங்கம் சுசிலா
குச்சவெளி திருமலை

02. வீரவேங்கை குமுதினி
பேதுருப்பிள்ளை
மரியக்கொறட்டி சுகந்தி
மணற்காடு குடத்தனை, யாழ்.

03. 2ம். லெப். கடலோசை
பெரியசாமி விக்னேஸ்வரி
திரியாய் திருமலை,
த.மு: மூங்கிலாறு உடையார்கட்டு

04. வீரவேங்கை. இளவேங்கை
ஜெகராஜா வசந்ததேவி – வசந்தி
குருநகர் கொழும்புத்துறை, யாழ்.

05. கப்ரன் மலர்வதனா
குகநாதன் சுமித்திராதேவி
பூம்புகார் அரியாலை., யாழ்.

06. வீரவேங்கை ஞானரூபி
செல்வரட்னம் விஜயமதி (விஜி)
தம்பாட்டி, நாவற்குழி, யாழ்.

07. 2ம் லெப். வர்ணா
சிவபாக்கியம் சின்னையா – செல்வம்
வெற்றிலைக்கேணி நாகர்கோயில், யாழ்.

08. லெப். அமிர்தகலா
ஜேசுராசா லட்ஷின் ஜெயந்தா
ஊர்காவற்றுறை, யாழ்

09. கப்டன் நாவலன்
செல்வரட்னம் ஆனந்தராஜா
பெரியவிழான் இளவாலை, யாழ்.

10. லெப். விமல் – அறிவு
தர்மசேனன் தர்மராஜா
மூதூர் திருமலை

11. கப்டன் பன்னீர்செல்வம் – செல்வன்
முத்துலிங்கம் ஞானமூர்த்தி
ஒட்டிசுட்டான் முல்லைத்தீவு

12. 2ம் லெப். அறிவுச்செல்வி – அறச்செல்வி
சுப்பிரமணியம் வசந்தி
தம்பன்கேணி மட்டக்களப்பு

13. வீரவேங்கை மதுராங்கனி
ராசு வசந்தகுமாரி (சூரி)
தம்பளை கிழக்கு, கற்கோவளம், யாழ்.

14. வீரவேங்கை மாதங்கி
பாலசிங்கம் றோகினி
காங்கேசன்துறை, யாழ் (த.மு. மீசாலை)

15. லெப். கார்த்திகா
இரத்தினம் வதனா
பத்தைமேனி, அச்சுவேலி, யாழ்.

16. லெப். நித்தியகலா
சுந்தரலிங்கம் சிவாந்தினி
அச்சுவேலி, யாழ். (த.மு. கற்சிலைமடு)

17. கப்டன் சுரதா
பொன்னுத்துரை ராஜேஸ்வரி (செல்வி)
பெரியமடு மன்னார்

18. கப்டன் சுமித்ரா – செந்தாமரை
சுப்ரமணியம் பரமேஸ்வரி
செல்வபுரம் முல்லைத்தீவு

19. மேஜர் நித்திலா
செல்வநாயகம் துஸ்யந்தி (உஷா)
உரும்பிராய், யாழ்.
த/மு: இல3, இராசநாயகபுரம், ஓமந்தை

20. லெப். அருள்
திருநாவுக்கரசு குமுதினி
புங்குடுதீவு, யாழ்.

21. 2ம் லெப். ஈழச்செல்வி
தெய்வேந்திரம் தர்மவதி
கொக்குவில், யாழ்.

22. லெப். கம்பதாசன்
பழனித்தம்பி தங்கவேல்
யானைக்கட்டியாவெளி, மண்டூர், மட்டு.

23. 2ம் லெப். எழில்குமணன்
கணேசராஜா விமலன்
உறியங்கட்டு, வாகரை, மட்டு.

24. கப்டன் வைரமுத்து
இளையவன் ரவிச்சந்திரன்
மந்துவில் வடக்கு, கொடிகாமம், யாழ்.

25. லெப். மகேசன்
வீரையா ஜெயரூபன்
4வது பிரிவு ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு

26. 2ஆம் லெப். அரசதுரை
ஆனந்தம் ராமச்சந்திரன்
மகிலங்காடு நாவற்காடு, மட்டக்களப்பு

27. 2ம் லெப். இராஜபாரதி
மாணிக்கப்பொடி சௌந்தராஜா
நெல்லிக்காடு, செங்கலடி, மட்டக்களப்பு

28. லெப். செல்வம்
கறுப்பையா மோகன்
வேப்பங்குளம் சந்தி, ஓமந்தை வவுனியா

29. 2ம் லெப். கண்ணழகன் / கிருஷ்ணன்
பழனியாண்டி மாரிமுத்து
கண்டி. த/மு: 2வது பிரிவு யோகபுரம் மல்லாவி

30. லெப். வாசுகி
சின்னராஜா இருதயராணி
வசாவிளான், யாழ். த.மு.: மாங்குளம் பள்ளிக்கூடம்

31. லெப். தாரகை / ராதா
சிறிதரன் கௌசல்யா
மத்திய கைதடி, யாழ்.

32. 2ம் லெப். மோனா – மேனகை
பொன்னம்பலம் காந்தரூபி
மந்துவில், தென்மராட்சி, யாழ்.

33. கப்டன் குழவி
கந்தசாமி கவிதா
மானிப்பாய், யாழ்.

34. லெப். கலை
செல்வராசா நாகேஸ்வரி
சங்கத்தானை, சாவகச்சேரி, யாழ்.

35. 2ம் லெப். புவி
காந்திநாதன் சுகிர்தா
திருமலை (த.மு. புதுக்குடியிருப்பு)

36. 2ம் லெப். கோணேஸ்
ஆனந்தன் அகிலா
பாரதிபுரம் மேற்கு, அக்கராயன்குளம்

37. வீரவேங்கை பிரகாசினி அல்லது மணியரசி
பர்னாந்து இம்மானுவல் பெரிகலிஸ்ரா
யாழ்ப்பாணம்,
த.மு.: கடற்கரை வீதி, நாச்சிக்குடா, மன்னார்

38. 2ம் லெப். ஆரணி
சக்திவேல் கிருஸ்ணவேணி
ஏ.சிபண்ணை, தட்டுவன்கேணி, கிளிநொச்சி

39. லெப். ரேகா – சிவநங்கை
பாலகிருஸ்ணன் சியாமளவேணி (றெஜி)
எழுதுமட்டுவாள், யாழ்.
த/மு: பன்றிக்கெய்தகுளம், ஓமந்தை

40. லெப். புகழரசி
இன்பகவிராசா சசீகரி
96ம் வட்டாரம் கும்புறுபிட்டி
உடையார்கட்டு, முல்லை.
த/மு: காந்தி திட்டம் நெடுங்கேணி

41. லெப். இளவழகி
மகாதேவன் மதுரா (சுவீற்றி)
மானிப்பாய், யாழ்.

42. லெப். நந்தினி
ஏழுமலைநாதன் சுகிர்தா (சோதி)
சுன்னாகம், யாழ்.
த/மு.: 8ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

43. கப்டன். சுபானந்தி
கனகசிங்கம் வசந்தராணி (வசந்தி)
கோப்பாய், யாழ்ப்பாணம்.
த/மு: முழங்காவில், மன்னார்.

44. லெப். ஆதிரை
சிவபாதம் ஞானேஸ்வரி (ஞானம்)
திருவையாறு, கிளிநொச்சி.
த/மு. தீப்பெட்டிபாலம், பாளிநகர், வவுனிக்குளம்.

45. வீரவேங்கை கோகிலா
வைத்தியநாதன் ராகினி (சாந்தா)
அல்வாய் கிழக்கு, யாழ்.

46. லெப். மாதுரி
கந்தசாமி ஜெயச்சித்திரா (சித்திரா)
மந்துவில் கிழக்கு, கொடிகாமம், யாழ்.

47. மேஜர் பாமிலா (உமா)
கந்தசாமி உமாமகேஸ்வரி (ரமணி)
மீசாலை வடக்கு, கொடிகாமம், யாழ்.

48. வீரவேங்கை. கௌரி
ஆனந்தராஜா மனோரஞ்சினி
கோண்டாவில் கிழக்கு, யாழ்.

49. வீரவேங்கை குயில்மொழி
நாகராஜா ராஜலட்சுமி (ராசம்)
மிருசுவில், தென்மராட்சி, யாழ்.

50. 2வது லெப். தாரணி
தேவராஜா கிருஸ்ணவேணி, (ரமணி)
வீரோதயர் நகர், சாம்பல்தீவு, திருமலை.

51. லெப். விஸ்வம்
சண்முகம் ராஜேஸ்வரி
வாடியடி பாறயன்கீறை, பூநகரி, யாழ்.

52. 2வது லெப். வானிலா
குழந்தைவேல் தவநேசம் (வனிதா)
கோரைக்களிமடு, ஆலடிச்சேனை, மட்டு.

53. வீரவேங்கை பூங்கிளி
ராஜதுரை கிருஜா (கிரி)
வேலணை, யாழ்ப்பாணம்.
த/மு: துணுக்காய், மல்லாவி, முல்லை.

54. கப்டன் மஞ்சு
மரியதாஸ் மேகலா செல்வராணி (கலா)
அரியாலை, யாழ்ப்பாணம்.
த/மு: மடு வீதி, மன்னார்.

55. 2வது லெப். தவமலர்.
முருகேசு முத்துக்குமாரி (மணி)
கண்டி. த/மு: சிவன் நகர், உருத்திரபுரம்.

56. 2வது லெப். கலைப்பிரியா அல்லது அருள்
ஜெயகலா திருநாவுக்கரசு (ஜெயா)
கரவெட்டி யாழ்ப்பாணம்.

57. வீரங்கை விவேகா
செல்வராஜா உசாந்தினி
தண்ணீரூற்று, முல்லைத்தீவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மிதான தாக்குதலில் வீரமரணத்தை தழுவிய மாவீரர்களின் பெயர்கள்:

58. கப்டன் கிளி
யோசப் பெர்னாண்டோ மேரி ஜெயராணி.

59. கப்டன் தமிழரசி
நாகேஸ்வரன் விக்னேஸ்வரி (சாந்தி)
சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி

60. மேஜர் தர்சிகா – தாமரைச்செல்வி
நடராஜா சசிகலா
அச்சுவேலி, யாழ்.

61. லெப். ஒளிநிலா
நவரட்னம் சுமதி
குமரபுரம், பரந்தன், கிளிநொச்சி.

62. 2ம். லெப். மாலதி
தவராசா அனிதா
நயினமடு, ஆனந்தபுளியங்குளம்.

63. லெப். வாசுமதி
ஆறுமுகம் அன்னபூரணி (பூரணம்)
2வது பிரிவு சேமமடு, வவுனியா.

64. 2ம். லெப். பைந்தமிழ்
கந்தையா ஜெயசிறி (குட்டி–ஜெயா)
பனிச்சங்கேணி, மதுரங்குளம், மட்டு.

65. லெப். கலைச்செல்வி
சந்தானம் சிறீதேவி
வவுனியா.
த/மு: B பிரிவு மடு முகாம், மன்னார்.

66. கப்டன் அல்லி
வீரசுத்தி உதயமாலா
தனங்கிளப்பு, தென்மராட்சி

67. கப்டன் விநோதன்
டானியல் ஜெயரங்கன்
4ம் பிரிவு வரிக்குடியிருப்பு
பாவற்குளம், வவுனியா.

68. 2ம். லெப். குரு – திலீபன்.
சங்கரதாஸ் ரவி
பண்றிக்கெய்தகுளம், வவுனியா.

69. லெப். சுகந்தி
செல்வவேலாயுதன் தனுசா
கோப்பாய் தெற்கு, யாழ்.

70. 2ம். லெப். ஞானம் – கருணா
நாகரட்னம் விஜயசங்கர்.
மூதூர், திருமலை.

71. கப்டன் உதயசங்கர்
செல்வராஜா ஜெயசீலன் – சுதன்
முல்லைத்தீவு வீதி, ஒலுமடு, மாங்குளம்.

72. வீரவேங்கை நல்லழகன்
செல்வராஜா உதயகுமார்
வல்வெட்டித்துறை, யாழ்.

73. கப்டன் தாஸ் – உலவழகன்
சின்னத்தம்பி சிறிகாந்தன்
வத்தல் ஓடை புன்னாலைக்கட்டுவன், யாழ்.

74. 2ம். லெப். சாந்தி
வல்லிபுரம் புஸ்பலீலாவதி (தயா)
இயத்தாளை, வறணி, யாழ்.

75. கப்டன் சாமந்தி
மகேஸ்வரன் கௌசலா
நாச்சிமார் கோவிலடி, யாழ்.

76. கப்டன் அமுதராணி
குசைப்பிள்ளை அனிதா
சின்னையா வளவு, உடுப்புக்குளம்

77. வீரவேங்கை நளினி / பூமணி
துரைராஜா நிர்மலா (கௌசலியா)
மைலிட்டி வடக்கு, இயத்தாளை, வரணி, யாழ்.

78. லெப். மஞ்சரி
குலநாயகம் உதயமலர் (மயூ)
வரணி இயத்தளை, யாழ்.

79. 2ம் லெப். திருமகள்
கந்தசாமி மேரிசீதா
முகமாலை, பளை, யாழ்.

80. லெப். வனிதா
மார்க்கண்டு ஜெயராணி
மானிப்பாய், யாழ்.

81. வீரவேங்கை பூங்குழலி
தியாகராஜா சுமதி
காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்

82. லெப். கோகுலா
நல்லையா நந்தினி
பெரியகுளம், கனகராயன்குளம், யாழ்.

83. 2ம். லெப். சரண்யா
கிருஷ்ணசாமி பவானி
¼ குமரபுரம், பரந்தன்

84. 2ம் லெப். மீனா
சண்முகராஜா கன்மணி (வாணி)
பெரியபோறைத்தீவு, பழுகாமம், மட்டு.

85. கப்டன். பூபதி
அலோசியஸ் டயானி / மதி அந்தோனிசாமி,
உப்புவெளி திருமலை.

86. லெப். மாலா
குசைமுத்து மேரிபவானி (திருசா)
2ம் யூனிற். மல்லாவி

87. வீரவேங்கை வனஜா
கோவிந்தசாமி ரதிகலாதேவி (ரதி)
குமரபுரம், பரந்தன், பரந்தன்

88. லெப். கௌதமி
துரைராஜா லலிதாவதி
மந்துவில் கிழக்கு, கொடிகாமம், யாழ்.
கொடிகாமம்.

89. கப்டன் லாவனிதா
கந்தையா வசந்ததேவி
த/மு: 486, அக்கராயன்குளம், கிளிநொச்சி

90. 2ம். லெப். யோகதாசன்
பாலசிங்கம் கரிகரன்
அளவெட்டி மத்தி, யாழ்ப்பாணம்

91. லெப். கவியரசன்
கிருபரட்னம் லிங்கேஸ்வரன்
சம்பூர், மூதூர், திருகோணமலை.

92. லெப். கலைராசா
ராஜேஸ்வரன் லவசுதன்
314, இராமநாதபுரம், கிளிநொச்சி

93. வீரவேங்கை. தேவகுமார்
பொன்னுத்துரை ஞானச்சந்திரன்
64வது மைல் கல், மூதூர், திருமலை.

94. 2ம். லெப். குவேந்திரன்
நவரத்தினம் செல்வக்குமார்
மூதூர், திருகோணமலை.

95. வீரவேங்கை செல்வக்குமார்
மகாரதம் செல்வேந்திரம்
ஈச்சிலம்பத்தை, மூதூர், திருமலை

96. லெப். பரிமேலழகன்.
சின்னத்தம்பி உதயகுமார்
தம்பலகாமம், திருமலை

97. கப்டன் மணி
அன்ரனி வில்லியம் சாள்ஸ் லோரன்ஸ்
இல: 1199 பளையூர்.



98. லெப். இன்பன்
சச்சிதானந்தன் கிருபாகரன்
கரணவாய் மேற்கு
கரவெட்டி, யாழ்.

99. 2ம். லெப். அரியநாயகம்
கணபதி யேசு
புதுமுறிப்பு, கிளிநொச்சி

100. வீரவேங்கை பிரியளன்
மயில்வாகனம் கிருபைராஜா
திருகோணமலை

101. வீரவேங்கை இளவேந்தன்
கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்
மூதூர், திருகோணமலை

102. 2ம். லெப். பெருங்கீரன்
தர்மலிங்கம் சுதாகரன்
சங்கானை, யாழ்ப்பாணம்.

103. மேஜர் நாயகம்
மயில்வாகனம் செல்வக்குமார்.
மல்லிகைத்தீவு, கிளிவெட்டி,
மூதூர், திருகோணமலை.

104. லெப். மறைச்செல்வன் / வேந்தன்
பாண்டியன் விமல்ராஜா
தம்பலகாமம், திருகோணமலை.

105. வீரவேங்கை புதியவன்
பெரியதம்பி ஜெயசீலன்
திருகோணமலை

106. 2ம். லெப். தேவன்
உதயலிங்கம் பிரியநாதன்
கொடிகாமம், யாழ்ப்பாணம்

107. 2ம். லெப். எழிழன்
குலேந்திரன் தயாளன்
மூதூர், திருகோணமலை.

108. 2ம் லெப். இளங்கோவன்
சொக்கலிங்கம் முகுந்தன்
ஒலுமடு, மாங்குளம்

109. 2ம் லெப். பரம்கீரன்
தர்மலிங்கம் சுதாகரன்
யாழ்ப்பாணம். த.மு: மாங்குளம்

110. கப்டன் கீரன்
நடராசா கடகேசன்
யாழ்ப்பாணம்

111. மேஜர் வெற்றிவேல் / தியாகு
அந்தோனி பிரான்சிஸ்
அம்மன் கோவில் வீதி, புளியங்குளம்

112. கப்டன் தென்றல் / மாறன்
கந்தசாமி மயில்வாகனம்
யாழ். த.மு.: கல்மடு வீதி, புளியங்குளம்

113. கப்டன் மோகனதாஸ் / குமணன்
மாணிக்கவாசகம் சுதர்சன்
கமால் வீதி, பழம்பாசி நெடுங்கேணி

114. மேஜர் நித்தியா
நவரட்னம் விஜிதா (விஜி)
ஆனந்தபுரம்
கிளிநொச்சி

115. வீரவேங்கை தயாளினி
சுப்பிரமணியம் விஜயா (விஜி)
மகரம்பைக்குளம்– வவுனியா
த/மு மேஜர் தயாபரன் அபிவிருத்தித் திட்டம்
முள்ளிக்குளம்
மன்னார்

தொடர்ச்சி மறுபக்கத்தில்...

www.tamilarangam.net



# 09, 10 ஜனவரி 1997 ஆனையிறவு - பரந்தன் இராணுவ முகாங்கள் மீதான தாக்குதலில் வீரமரணத்தை தழுவிய மாவீரர்கள் ...



116. வீரவேங்கை இன்மொழி
சுப்பிரமணியம் மலர்
செல்வபுரம்
முல்லைத்தீவு

117. வீரவேங்கை அற்புதன்
ஜெயராசா ஜெயரூபன்
ராஜ்மோகன் வீதி தும்பளை
த/மு நெல்லண்டை வீதி
யாழ்ப்பாணம்

118. வீரவேங்கை முனியப்பன்
பாக்கியலிங்கம் பைந்தீபன்
சேச் வீதி அமித்தமலை
உடுப்பிட்டி

119. லெப். சகாதேவன்
மயில்வாகனம் சசிகரன்
ரவிராஜ் வீதி- கொக்குவில் கிழக்கு
த/மு தெல்லிப்பளை கிழக்கு

120. வீரவேங்கை துளசிமாறன்
சேகராஜசேகரம் தர்மசீலன்
துன்னாலை கமம் B 7
கிளிநொச்சி

121. வீரவேங்கை கருணா
வித்தியலிங்கம் சிவகரன்
பெரியவிளான்
இளவாலை.

122. வீரவேங்கை நக்கீரன்
நடராசா குடகேசன்
பருத்தித்துறை
யாழ்ப்பாணம்.

123. 2வது லெப். ஜெயந்தன்
பாலசிங்கம் இலங்கேஸ்வரன்
ஆறாம் கட்டை- மாங்கா ஊற்று கிண்ணியா.
த/மு சின்னப்பன் பேக் அகதிமுகாம்
சீனன்குடா திருகோணமலை.

124. கப்டன். அசோகன்/அகிலன்
அப்புலிங்கம் சிவா
பிரான்பற்று- சங்கானை கிழக்கு, யாழ்ப்பாணம்.

125. லெப். கலைவாணி
கந்தசாமி சந்திரகலா (கலா)
கச்சாய் வீதி
கொடிகாமம்.

126. 2ம். லெப். தனுசா
பெர்ணாந்து விஜிதா
இளவாலை யாழ்ப்பாணம், த/மு சங்கானை

127. வீரவேங்கை தென்னவள் பாமுகில்
நாகராஜா பிரியதர்சினி
கந்தரோடை சுன்னாகம்
த/மு 30.வீட்டுத்திட்டம் புளியங்குளம்.

128. வீரவேங்கை நதியா
இராசையா சுமதி
செம்மலை அலம்பில்

129. லெப். இளவேணி
இரத்தினம் கஜனி
அராலி தெற்கு-யாழ்ப்பாணம், த/மு மாங்குளம்

130. வீரவேங்கை மாங்கனி
இளங்குட்டி கொர்ணா
தெல்லிப்பளை யாழ்ப்பாணம்
த/மு நவாலி தெற்கு, மானிப்பாய் யாழ்ப்பாணம்.

131. கப்டன் நெடுஞ்செழியன்
இராசலிங்கம் ரஞ்சன்
38/2 கந்தசாமி கோவில் வீதி
திருகோணமலை.
36/3A காட்டு இலாகா ஒழுங்கை
த/மு சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.

132. லெப். தமிழ்முடி
அருமைத்துரை தமிழ்ச்செல்வன்
நாகர் கோவில் வடக்கு
யாழ்ப்பாணம்.

133. வீரவேங்கை ரோசா
பொன்னுச்சாமி கனகமலர்
காரைநகர், த/மு ஓட்டுமடம் யாழ்ப்பாணம்.

134. கப்டன் அருட்செல்வன் (கட்சன்)
எட்வேட் ரபார் லவண்ரைன்
வாட் இல 08 பேசாலை
மன்னார்.

135. லெப். எழுச்சியன்
சிவராசா திருத்தணிகன்
சிவாகர் வீதி தர்மபுரம், கிளிநொச்சி.

136. கப்டன் நெய்தல்
கணபதிப்பிள்ளை இளவேணி (வனிதா)
வெற்றிலைக்கேணி த/மு பருத்தித்துறை

137. வீரவேங்கை குயிலன்
அரியதாஸ் கமலேஸ்வரன்
கொக்குத்தொடுவாய் வடக்கு
த/மு முள்ளியவளை- முல்லைத்தீவு

138. வீரவேங்கை மாறன்
சின்னத்தம்பி அமிர்தலிங்கம்
பட்டிப்பளை மட்டக்களப்பு
த/மு ஸ்கந்தபுரம் கிளிநொச்சி

139. மேஜர் சேந்தன் (ராஜா)
கிருஸ்ணபிள்ளை இளங்கோ
சிவசக்தி அகம் சுழிபுரம் மேற்கு

140. மேஜர் வாணன்
வீரகத்திப்பிள்ளை இரஞ்சிதமலர்
பழைய தோட்டம்- முரசுமோட்டை
த/மு பரந்தன், கிளிநொச்சி

141. வீரவேங்கை அன்புக்கினியன்
அருணாசலம் நிரஞ்சன்
மீசாலை கிழக்கு
மீசாலை யாழ்ப்பாணம்.

142. கப்டன் அழகராசன்
நடராசா சிவதாசன்
பூநகரி நல்லூர் பிரதான வீதி த/மு மன்னார்

143. 2ம்லெப். புகழரசன்
ஆனந்தவடிவேல் சக்திவேல்
மயுரகிரி அல்வாய் கிழக்கு, அல்வாய்.

144. கப்டன் கம்பன்
கதிர்காமத்தம்பி கலாதர்
அன்னை இல்லம்
நீதிமன்ற வீதி
மல்லாகம் யாழ்ப்பாணம்
த/மு குரும்பசிட்டி தெல்லிப்பளை

145. வீரவேங்கை சாது
யோகநாதன் ரவிக்குமார்
முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

146. வீரவேங்கை தேவதீபன்
சிவராசா சிவானந்தமூர்த்தி
இல.430, 4வது யூனிட், யோகபுரம் , மல்லாவி.

147. வீரவேங்கை ஈழமுதன்
இராமலிங்கம் கிருஷ்ணராஜா
6 யோன்வீதி, பாலாயவியான் கண்டிவீதி, நுவரெலியா.

148. வீரவேங்கை ஜெயந்தன்
மகாலிங்கம் லிங்கேஸ்வரன்
மட்டக்களப்பு . ஸ்கந்தபுரம்.

149. வீரவேங்கை விமலன்
செல்வரெட்னம் ஜெயரூபன்
12, ஜெயந்திநகர்

150. வீரவேங்கை தெய்வம் / நிஷாந்தன்
ஏகாம்பரம் ரவீந்திரன்
துர்க்கையம்மன் வீதி உதயநகர், கிளிநொச்சி

151. வீரவேங்கை ஜல்பாதி
சிவிகராசா டேவிட்
தேவாலயம், மூளாய், சுழிபுரம்.

152. வீரவேங்கை அஜந்தன்
இளையவன் ரவிச்சந்திரன்
மந்துவில் வடக்கு கொடிகாமம்

153. வீரவேங்கை ஜெகநாதன்
தம்பிராசா உதயராஸ்
பழமொட்டை வவுனியா

154. வீரவேங்கை சுபதீபன்
அந்தோனிசாமி அந்தோனியேரன்
திருகோணமலை, உடையார்கட்டு,
மூங்கிலாறு, மகேஸ் கொலனி.

155. வீரவேங்கை கம்பதாசன்
பழனித்தம்பி தங்கவேல்
மட்டக்களப்பு

156. வீரவேங்கை சுதர்சன்
மரியதாஸ் அந்தோனி யூலிக் செல்வசுதாகரன்
மாதகல். இரணையாலை,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

157. வீரவேங்கை நீலவண்ணன் / அப்பு
கறுப்பையா நாகராசா
தாண்டிக்குளம், பூம்புகார்,
கல்மடு, வவுனியா.

158. வீரவேங்கை சிதம்பரன்
கணபதிப்பிள்ளை சிவகுமாரன்
பதிலிப்பாய், பூநகரி மன்னார்,
ஞானிமடம், பூனகரி மன்னார்.

புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள , இரும்பையொத்த மனவுறுதி எனக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக மனித மலைகளாக, உறுதியோடு நின்ற மாவீரர்களை, நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.

மாவீரர்களது அற்புதமான இலட்சிய வாழ்க்கை, அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள் இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

www.tamilarangam.net



# கைதடி வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த மாவீரரின் 10ஆம் ஆண்டு நீங்காத நினைவில்....

தமிழீழப் போராட்ட வரலாற்றில் இடம்பெற்ற முதலாவது வெடிவிபத்துச் சம்பவம் கைதடி வெடிவிபத்து. இத் திட்டம் வெற்றிகரமாக நடந்தேறியிருக்குமானால் - தமிழீழத்தில் நிகழ்ந்த முதலாவது மிகப்பெரும் தாக்குதல் இதுவாகத் தான் இருந்திருக்கும். இவ் விபத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி லெப்.கேணல் பொன்னம்மான் உட்பட 10 போராளிகளையும் சில பொதுமக்களையும் தமிழீழத் தேசம் இழந்து தவித்தது.

மூத்த தளபதி மாவீரன் லெப்.கேணல் பொன்னம்மான் அவர்களைப் பற்றியும் மற்றும் இவ் வெடிவிபத்து நிகழ்வதற்கு சில மணி முன்னதாக தான் நேரில் கண்ட, கேட்ட நிகழ்வுகளை எமது மூத்த தளபதியான மாவீரன் கேணல் கிட்டு அவர்கள் எழுதிய நினைவலைகள் இவை. என்றும் நீங்காத நினைவுகள்........!!

**1983**ஆம் ஆண்டுக்குப் பின் எம்முடைய இயக்கம் மிகவும் வேகமாக வளரத் தொடங்கியது. ஆயிரக் கணக்கான இளைஞர்கள் எம்முடைய இயக்கத்தில் சேர்ந்து கொண்டி ருந்தார்கள். ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களை நல்வழிப்படுத்தி, சாதாரண சராசரி இளைஞர்களுக்கே உரிய இளமைத்தனத்துடன் வாழ்ந்து கொண்டி ருந்தவர்களை புரட்சியாளர்க ளாக்கி, உலகமே வியக்கக்கூடிய கெரில்லா வீரர்களாக உருவாக்கிய பெருமையின் பெரும் பகுதிக்கு உரியவன் பொன் அம்மான் என்றால் மிகையாது.

ஏறத்தாழ மூவாயிரம் வீரர்களை உருவாக்கினான். அதாவது மூவாயிரம் வீரர்களுக்குப் பயிற்சியளித்தான் என்றும் சொல்லலாம். பயிற்சியளிப்பதை விட புரட்சி வீரனை உருவாக்குவது என்பது பல பரிமாணங்களைக் கொண்டது. வெறுமனே ஆயுதப் பயிற்சி மட்டும் நல்ல புரட்சியாளனை உருவாக்கப் போது மானது அல்ல என்பதை பொன் அம்மான் அடிக்கடி எடுத்துச் சொல்வான். வெறுமனே பயிற்சி கொடுக்கும் பயிற்சியாளனாக மட்டுமல்லாமல் அனைத்துத் தோழர்களுக்கும் தாயாகி, நல்ல உறவாகி வாழ்ந்தான். எனவேதான் எல்லோராலும் "அம்மான்" என்று செல்லமாக அழைக்கப்பட்டான்.

எமது பயிற்சிக் குழுவுக்குப் பொறுப்பாளராக இருந்த வேளையிலேயே, எமக்கு வேண்டிய ஆயுதங்களை நாமே செய்துகொள்ள வேண்டும் என்ற துடிப்புடன் செயலபட்டு, அதற்கென்று ஓர் தனிப் பிரிவை உருவாக்கி, கைக்குண்டுகளை ஏராளமாகத் தயா ரித்தான்.

அம்மானுடைய அந்தக் கைக்குண்டுகள் தயாரிக்கும் முயற்சியில் அவனடைந்த அனுபவங்கள் எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் நவீன கைக்குண்டுகளுக்கு நிகராக அவனு டைய தயாரிப்புகள் இருந்தன. அதைவிடவும் தானாகவே ஓர் புதிய வடிவத்தையும் உருவாக்கினான். அம்மான் வெடிமருந்துத் துறையிலும் சிறந்து விளங்கினான் என்றால் மிகையாகாது. தமிழர்களை சிங்களவர்கள் பொதுவாக "பனங்கொட்டை" என்று கேலி செய்வது பல காலத்து வழக்கம். எனவே பனங்கொட்டையைப் போன்ற அமை ப்பிலேயே தன்னுடைய கைக்கு ண்டுகளைத் தயாரித்தான். என்னிடம் பல தடவைகள் கூறி இருக்கின்றான். "மச்சான் பனங்கொட்டை என்று எம்மை இழிவு செய்தவர்கள் பனங்கொட்டையைக் கண்டாலே பயப்பட வேண்டும். எனவேதான் இந்த வடிவத்தை உருவாக்கினேன்" என்றான்.

நான் இயக்கத்தில் சேர்ந்து சில மாதங்களில் அம்மானும் சேர்ந்தான். நான் இயக்கத்தில் சேர்ந்தவுடன், இயக்கத்தால் நடத்தப்படும் விவசாயப் பண்ணைக்கு அனுப்பப்பட்டேன். அங்கிருக்கும் போதுதான் அம்மான் இயக்கத்தில் சேர்ந்தான். அம்மான் எப்போதும் கலகலப்புடன் காணப்படுவான். அது அவனுடைய தனி இயல்பு என்றே கூறலாம். சில சமயங்களில் சினிமாக்களில் தோன்றும் நகைச்சுவைப் பாத்திரம் போன்று விளங்குவான். தான் மட்டுமல்ல தன்னைச் சூழ உள்ளவர்களையும் எப்போதும் சிரிக்க வைத்துக்கொண்டு இருப்பதே அவனுடைய பொழுதுபோக்கு. சத்தியமாகச் சொல்கின்றேன், அவன் இருக்கும் இடத்தில் எப்போதும், எப்படியோ ஓர் சிரிப்புடனான சூழ் நிலையையே உருவாக்கி வந்தான்.

விவசாயப் பண்ணையில் ஏறத்தாழ ஒருவருட காலம் சேர்ந்து பணியாற்றினோம். விவசாயம் செய்துதான் நாம் எம்முடைய தேவைகளைப் பெறவேண்டியிருந்தது. விவசாயப் பண்ணைகளில் எப்போதும் கடுமையாக உழைப்போம். உழைத்து, சோர்ந்த மாலை வேளைகளில் பொன் அம்மான் தினமும் பாட்டுப் பாடுவான். அம்மானின் தாயார் சங்கீதத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். அம்மான் சங்கீதம் கற்றிராவிட்டாலும் நல்லாகவே பாடுவான். பாடல் மட்டுமல்ல, பாடிக்கொண்டே நடித்துக் காட்டி, சிரிப்புக் காட்டி ஒரு அட்டகாசமே செய்துவிடுவான்.

நானும் அம்மானும் தனித்திருக்கும் வேளைகளில் எம்முடைய விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலத்தைப் பற்றி விவாதிப்போம். கற்பனைகள் கூட செய்வோம். அதுமட்டுமல்ல எமது எதிர்கால நடவடிக்கையையிட்டு, சச்சரவுகூடப் பட்டுக்கொள்வோம். நாம் எமக்குத் தேவையான ஆயுதங்களை நாமாகவே தயாரிக்க வேண்டும் என்பதை பல காலம் சிந்தித்து வந்தோம். 79-ம் ஆண்டு அப்பையா அண்ணன், பொன் அம்மான், அன்ரன் ஆகியோருடன் நானும் சேர்ந்து கைக்குண்டுகள் தயாரிக்கத் தொடங்கினோம். பலத்த இராணுவக் கெடுபிடிகளுக்கு நடுவில் ஓர் மறைவிடத்தில் எமது தொழிற்சாலை உருவாக்கப்பட்டது. இரும்பை உருக்கி வார்க்கக்கூடிய வசதி அச்சமயம் எம்மிடம் இல்லை. எனவே அலுமினியத்திலான கைக் குண்டுகளை உருக்கி வார்த்தோம்.

நால்வரும் மிகவும் பெருத்த சிரமத்தின் மத்தியில், முன் அனுபவம் எதுவுமில்லாமலேயே, ஓரளவு எமது தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கைக்குண்டுகளை உற்பத்தி செய்தோம். பின்பு, பல இடைஞ்சல்களால் அந்த வேலைத்தளம் மூடப்பட வேண்டி வந்துவிட்டது. ஆனால் அன்றைய அந்த முயற்சியே நாம் பின்பு உலகமே வியக்கக்கூடிய வகையில் எமது உற்பத்திகளை உருவாக்குவதற்கு வழி கோலியது எனலாம். பிற்காலத்தில் பொன் அம்மான் HE-36 போன்ற கைக்குண்டுகளை மிகவும் நேர்த்தியாக மிகப் பெரிய தொகையில் உரு வாக்கினான். அன்ரன், கிளைமோர், பண்டிக்குண்டி போன்ற நவீன வெடிகளை உருவாக்கினார்.

நானும் அப்பையா அண்ணாவும் மிகவும் சக்திவாய்ந்த பெரிய மோட்டார்களையும் குண்டுகளையும் தயாரித்தோம். இப்படி யாக ஆரம்ப காலத்தில் இருந்தே எமது போராட்டப் பணிகளை உறுதியாக முன்னெடுத்து வந்தோம்.



1983-ம் ஆண்டுக்குப் பின் பொன் அம்மான், இயக்கத்தின் பயிற்சிக் குழுவுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பின், நான் யாழ் மாவட்டப் பொறுப்பாளராகவும் பணி யாற்றியதால் - இருவரும் உறவா டக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை. சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான எமது வீரர்களை உருவாக்கி இயக்க வரலாற்றில் பெரும் சாதனை படைத்தவன் பொன் அம்மான்.

1986-ம் ஆண்டின் பிற்பகுதியில் இருவரும் ஒன்றாகச் சந்தித்துக் கொண்டோம். அவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் உள்ள நாவற்குழி எனும் இராணுவ முகாம் மீது தாக்குதலை நடத்த நானும் என்னுடைய தோழர்களும் திட்டமிட்டுக் கொண்டிருந்தோம். இராணுவ முகாம் மிகவும் பலம்பொருந்திய வெளி அமைப்பைக் கொண்டிருந்தது. இராணுவ முகாமில் ஒரு பக்கம் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அது கடல் நீர் உள்வாங்கிய பகுதி. சுற்றிவர நூறு யாருக்கும் மேலாக ஒரே வெளிப் பிரதேசம். வெட்டைவெளி. நாம் அப்பகுதியைக் கடந்து இராணுவ முகாமை அணுகுவது மிகவும் கடினம். அதைவிடவும் இராணுவ முகாமைச் சுற்றி நன்கு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு மண்ணை சுவர்போலக் குவித்து வைத்திருந்தனர். அவர்க ளுடைய காவல் அரண்களை உடைத்துக்கொண்டு உட்புகுவது என்பது மிகவும் சிரமத்துக்குரியதும் எமது தரப்பில் அதிக சேதத்தை ஏற்படுத்தக்கூடியதுமான முயற்சி. எனவே அவர்களுக்கு அதிர்ச்சியூட்டி அந்த அதிர்ச்சியில் இருந்து மீண்டு அவர்கள் காவல் அரண்களைப் பலப்படுத்துவதற்கு முன்னர் நாம் தாக்கி உட்புகக் கூடியதாக திட்டத்தை உருவாக்கினோம்.

தினமும் அந்த இராணுவ முகாமுக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு ஒரு 'பவுசர்' செல்வது வழக்கம். அது வெளியாரின் வண்டி. சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டிருந்தது. எனவே, நாமும் அதைப் போலவே ஓர் பவுசர் வண்டியைத் தயாரித்து, அதன் (கீழ்) அரைவாசிப் பகுதிக்கு வெடி மருந்தை நிரப்பி, மேலே அரைவாசிப் பகுதிக்கு தண்ணீரைவிட்டு, நாம் திட்டமிட்ட நாளில் உள்ளே அனுப்பி வெடிக்க வைத்து, நாம் உட்புகுவது என்பது எமது திட்டம்.

பழைய வண்டியைப் போல் ஒரு புதிய வண்டியைத் தயாரிப்பது என்பது மிகவும் கஷ்டமான விடயம். அதிலும் அந்த மதிகெட்ட 'பவுசர்' எங்கே ஒரு இடத்தில் விபத்துக்குள்ளாகி ஒரு பக்கத்தில் நசுங்கியும் இருந்தது. எனவே நாம் செய்யும் வண்டியும் வாயில் காவலர்களைத் தாண்டிச் செல்லவேண்டி இருந்ததால், அதேபோல் நசுக்கப்பட வேண்டி இருந்தது. இயற்கையாக விபத்துக்குள்ளான வண்டியைப் போல் எமது வண்டியை மிகச் சிரமத்துக்குப் பின் உருவாக்கினோம். புதிதாக மை பூசிய எமது 'பவுசரை' பழைய 'பவுசரைப்' போல் உருமாற்றம் செய்ய வேண்டும். ஏன் - பழைய வண்டியில் ஏற்பட்டிருந்த துருப் பிடித்த பகுதிகூட எமது பவுசரில் இருந்தாக வேண்டும். அதைவிடவும் 'பவுசர்' இரு பகுதியாகப் பிரிக்கப்பட்டு, கீழ் பகுதி வெடி மருந்து நிரம்பிய பகுதியாகவும் மேல் பகுதியில் தண்ணீர் நிரம்பிய பகுதியாகவும் தயாரித்தோம். ஏனென்றால், முகாம் வாயிலில் உள்ள காவல் அரணில் இருப்பவர்கள் பவுசரின் மேல் ஏறி மூடியைத் திறந்து தண்ணீரைப் பார்த்த பின்னர்தான் உள்ளே அனுமதிப்பார்கள்.

இத்தனை சிரமங்களின் மத்தியிலும், அந்த பவுசரை மிக நேர்த்தியாக வடிவ மைத்தோம். 'பவுசரு'க்கு வெடிமருந்தை இணைக்கும் பணியை பொன் அம்மான் எடுத்துக் கொண்டான். இம்முயற்சிக்கு வழிகோலி, அயராது உழைத்து வந்தவன் என் அருமைத் தோழன் கேடில்ஸ்தான். அவன் சாவகச்சேரிப் பகுதிக்குப் பொறுப்பாளராக விளங்கியவன். மிகத் துல்லியமாக முகாமை வேவு பார்த்து, இராணுவ முகாமினது ஒவ்வொரு நடவடிக்கையையும் அவதா னித்து வைத்திருந்தான். கேடில்ஸும் வாசுவும் சேர்ந்துதான் இரவு பகலாக உழைத்து அந்த 'பவுசரை' உருவாக்கினார்கள். அவர்களுக்குத் துணையாக ரஞ்சன் எனும் பொறியியலாளர் ஒருவர் பணியாற்றினார். அவர் பொன் அம்மானின் உறவினரும் கூட. மிகவும் மதி நுட்பம் வாய்ந்த

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத் தமிழர் பாதுகாப்புக்கான பேரணியும்



ஈழத்தமிழர் பாதுகாப்புப் பேரணியின் ஒரு சிறு பகுதி

**"1991** இலிருந்து நீறுபூத்த நெருப்பாக இருந்த தமிழக மக்களின் 'தமிழீழ உணர்வு', 01-02-96 இல் சென்னையில் நடைபெற்ற பாட்டாளி மக்கள் கட்சியின் மாபெரும் பேரணியினாலும் மாநாட்டினாலும் கனல் கக்கும் தீயாக ஊதிவிடப்பட்டுள்ளது" எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா அரசின் இன அழிப்புக் குட்பட்டுள்ள தமிழ் ஈழ மக்களின் அவலங்களை, அனைத்துலக சமூகத்தின் மத்தியில் வெளிக்கொணருவதற்கும் ஈழத் தமிழரின் பாதுகாப்புக்குமாக இப்பேரணியும் மாநாடும் பா. ம. கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்டது. ஏறத்தாழ 15 கி. மீ தூரத்திற்கு 7 மணித்தியாலங்கள் நடைபெற்ற அப்பேரணியில், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவு முழக்கங்களும் ஈழத்தமிழரின் பாதுகாப்புக்கான முழக்கங்களும் பெருமளவில் எழுப்பப்பட்டன. பேரணியில் 7 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதாக அறியப்படுகிறது. இதனால், நீறுபூத்த நெருப்பாக இருந்த தமிழக மக்களின் தமிழீழ உணர்வு, தமிழகமெங்கும் கனல் கக்கும் தீயாக எரியத் தொடங்கியுள்ளது.

பேரணியைத் தொடர்ந்து, சென்னை சீரணி அரங்கில் விசேடமாக அமைக்கப்பட்ட, **'அப்துல் ராவூஃப்'** ("ஈழத் தமிழரைக் காப்பாற்றுங்கள்" என்ற முழக்கத்துடன் தனக்குத் தானே தீமூட்டி, தமிழீழ விடுதலைக்காய் தன்னையே அர்ப்பணித்த தமிழக மண்ணின் மைந்தன்) நினைவரங்கத்தில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் **பேராசிரியர் தீரன்** தலைமையில் **"ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாடு"** நடைபெற்றது. பா. ம. க பொதுச்செயலாளர் தலித் எழில்மலை வரவேற்புரை நிகழ்த்த திரு. **ஜார்ஜ் பெர்னாண்டஸ்**, பா. உ(தலைவர் -சமதா கட்சி), **நீதிபதி அஜித்சிங் பெய்ன்ஸ்** (தலைவர் -பஞ்சாப் மனித உரிமைக் குழு), திருமதி. **மதலீன் மைக்கேல்** (இணைச் செயலாளர் -த. ஈ. ஒ. தொ. மை, சுவிட்சலாந்து), திரு. **கோ. மு. வீரபத்திரன்** (தென் ஆப்பிரிக்கா), திரு. **வே. ஆனைமுத்து** (அமைப்புச்செயலாளர் -மார்க்சீயப் பெ. பொ. க), திரு. **எம். அப்துல் லத்தீப்**, எம். எல். ஏ (பொதுச்செயலாளர் -இந்திய தேசிய லீக்), திரு. **வி. டி. ராஜசேகர்** (ஆசிரியர் -தலித் வாய்ஸ்) ஆகியோர் சிறப்புரை வழங்க, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ச. இராமதாஸ் அவர்கள் நிறைவுரை ஆற்றினார். இரவு 9.00 மணியளவில் தொடங்கிய மாநாடு, அடுத்த நாள் அதிகாலை 3.00 மணிவரை நீடித்தது. மாநாட்டில், பா. ம. கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் சி. ஆர். **பாஸ்கரன்** அவர்களால் தயாரிக்கப்பட்ட **'தாயக வேட்கை', 'விடுதலை வரும் நாள்', 'புதிய வித்துக்கள்'** ஆகிய ஒலியிழை நாடாக்களும் வெளியிடப்பட்டன.

## தமிழ் ஈழத்தவர்களுக்காக குரல் கொடுப்பது தவறா?

**- டாக்டர் ராமதாஸ்**

"தமிழ் ஈழத்தவர்களுக்காகக் குரல் கொடுப்பது தவறா?" என, ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் கேள்வி எழுப்பிய டாக்டர் ராமதாஸ் அவர்கள், "ஈழத் தமிழர்களுக்குக் குரல் கொடுப்பதற்காகத் தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தாலும் அஞ்சமாட்டேம்" எனவும் ஆவேசமாகப் பேசினார். அதிகாலை 2.25 மணியளவில் உரையாற்றத் தொடங்கிய இவர், 3.00 மணிக்கே தனதுரையை முடித்துக் கொண்டார். அதுவரை, கொட்டும் பனியில் கடற்கரை மணலில் பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் உட்கார்ந்திருந்தனர். திரு. ராமதாஸ் அவர்கள் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள் இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றது.

## எங்களால் ஆபத்தென்றால் எங்களைக் கைது செய்யுங்கள்

"ஈழத் தமிழ் மக்கள் தங்கள் தாய் நாட்டில் சுதந்திரமாக வாழ முடியவில்லை: அவர்களின் பிரச்சினையை உலக மக்களுக்கு உணர வைப்பதற்காகவே இந்த மாநாட்டைக் கூட்டியுள்ளோம். இந்த மாநாடு நடக்குமா? நடத்த விடுவார்களா? என்று பலருக்குச் சந்தேகம். நடத்த விடக்கூடாது என்று சிலர் விரும்பினார்கள். பத்திரிகையிலும் சிலர் எழுதினார்கள். உடனே கைது செய்ய வேண்டும் - இரும்புக்கரம் கொண்டு நசுக்க வேண்டும் -ஒடுக்க வேண்டும் என எழுதினார்கள். ஒரு புலிப்படத்தைப் போட்டு, அதை நான் தடவிக் கொடுத்து - "இது ஒண்ணும் செய்யாது, பரம சாது" என்று சொல்வது போல் கேலிச் சித்திரமும் போட்டார்கள். மாநாட்டை நடத்தினால் தேசிய பாதுகாப்புச் சட்டப்படி கைது என்ற அச்சுறுத்தலும் வந்தது. தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பதால் தமிழ் நாட்டுக்கு, தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தென்றால் அந்தச் சட்டத்திலேயே எங்களைக் கைது செய்யுங்கள். தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக நாங்கள் சிறை செல்லவும் தயங்க மாட்டோம் -எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராகவுள்ளோம். அதற்காகப் பயப்படுகிறவர்கள் அல்ல நாங்கள்" எனவும் திரு. ராமதாஸ் அவர்கள் தனதுரையில் சவால் விட்டார்.

## கனடாவில் காசையல்ல உணர்வுகளையே வாங்கி வந்துள்ளேன்

"நான் கனடா, லண்டன், சுவிட்சலாந்து சென்று வந்த பின், கனடாவிலிருந்து காசை வாங்கி வந்து இந்தப் பேரணியை - மாநாட்டை நடாத்துவதாகவும் சிலர் சொன்னார்கள்: இவர்கள் சொல்வது போல், கூலிக்கு மாரடிக்கும் பழக்கம் எங்களிடம் இல்லை. அந்த எண்ணம் எங்கள் இரத்தத்திலும் இல்லை. நான், "கனடாவிலிருந்து உணர்வுகளையே வாங்கி வந்திருக்கிறேன்: காசை வாங்கி வரவில்லை." "இலங்கையில் - இவ்வளவு பிரச்சினைகள் நடக்கிறதே, தமிழ் நாட்டில் அதைப்பற்றிச் சலனம்கூட இல்லையே - உணர்வு இல்லையே" என, கனடா போன்ற நாடுகளில் உள்ள தமிழர்கள் கேட்டார்கள். "அந்த உணர்வு இல்லை என்று கூறமுடியாது: அது நீருபூத்த நெருப்பாக இருக்கிறது. அதை ஊதினால் அது பெருந்தீயாக மாறும்" எனக் கூறிவிட்டு வந்தேன். இப்போது அதை ஊதிவிட்டுள்ளேன். அது கனல் விட்டு பெருந்தீயாக எரிவது, தமிழ் உணர்வுள்ள அனைவரதும் கடமை எனவும் திரு. ராமதாஸ் அவர்கள் கூறினார்.

## தார்மீக அடிப்படையில், விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில் எந்த தவறும் இல்லை

"ஈழத் தமிழர்கள் பற்றிப் பேசலாம், விடுதலைப் புலிகள் பற்றிப் பேசக்கூடாது என்று சொல்கிறார்கள்: எதற்கெடுத்தாலும் விடுதலைப் புலிகளையே காரணம் காட்டுகிறார்கள். இங்கு ஒரு வழிப்பறிச் சம்பவம் நடந்தால் கூட, இது விடுதலைப் புலிகளின் வேலையாக இருக்கும் என்றே சொல்கிறார்கள். இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாகச் செயற்படுவதாகக் கூறுகிறார்கள். விடுதலைப் புலிகள் இலங்கையில் ஈழத் தமிழர்களுக்காகப் போராடி வருகிறார்கள். தார்மீக அடிப்படையில் அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதில் எந்தத் தவறும் இல்லை. இதற்குக் கூட உரிமை கிடையாதா?"

எனக் குரல் எழுப்பிய திரு. ராமதாஸ் அவர்கள் மேலும் தமதுரையில்,

"உலகம் முழுவதும் உள்ள 8 கோடித்



பேரணியை டாக்டர். ராமதாஸ், முன்னாள் நீதிபதி அஜித் சிங் பெய்ன்ஸ், திருமதி. மதலீன் மைக்கேல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாட்டாளி மக்கள் கட்சியின்

தமிழர்களும் ஈழத் தமிழர் பிரச்சினையை, தமிழ் ஆய்ந்த தலைவர் கலைஞரால்தான் தீர்க்க முடியும் என்று நம்புகிறார்கள்: ஆனால் அவர், இந்திய அரசின் நிலைதான் எங்கள் நிலை என்கிறார். புலிகள் பற்றிப் பேசினால் ஆட்சியைக் கவிழ்த்து விடுவார்களோ என்று நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களுக்கு நாங்கள் எப்போதும் பக்கபலமாக இருப்போம்" எனவும் கூறினார்.

கத்தக்கது. இலங்கை இராணுவத்திற்கு அமெரிக்காவும், இஸ்ரேலும், பாகிஸ்தானும் பயிற்சி அளிக்கின்றன. இதுபற்றி இந்திய மத்திய அரசு ஏன் வாய் திறக்கவில்லை?

இராணுவத்தின் கொடுமை தாங்கமுடியாமல் தமிழர்கள் அகதிகளாக வெளியேற்றப் படுகிறார்கள். சொந்த நாட்டிலேயே நிர்க்கதியாக நிற்கும் தமிழர்கள் பற்றி ஐ. நா. சபையிலே இந்தியா பேச முயன்றிருக்க வேண்டும்.

# மாநாடும்



பேரணியைப் பார்வையிடும் தலைவர்களில் ... இடமிருந்து : திருமதி . மதலீன் மைக்கேல், திரு. வே. மு. வீரபத்திரன், டாக்டர். ராமதாஸ்

## இலங்கை தமிழர் பிரச்சினையில் இந்தியா மௌனம்

**- ஜார்ஜ் பெர்னாண்டஸ்**

மாநாட்டில் உரையாற்றிய சமதா கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் (பா. உ) அவர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா கடைப்பிடிக்கும் மௌனத்தைக் கண்டித்ததுடன், அது கலையட்டும் எனவும் கேட்டுக் கொண்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"மனித உரிமை பற்றிப் பேசுகிறவர்கள், மனித உரிமையின் அடிப்படையே இலங்கையில் பறிபோவதைப் பார்த்துக் கொண்டிருப்பது வேதனையே: கடந்த செப்ரெம்பர் 7 ஆம் நாள் 18 வயதுடைய கல்லூரி மாணவி கிருஷாந்தி தேர்வு எழுதிவிட்டு வீட்டுக்குத் திரும்பும் வழியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். கிருஷாந்தியைத் தேடிச்சென்ற தாய், சகோதரன், மற்றும் உறவினர் ஆகியோரையும் இராணுவத்தினர் படுகொலை செய்து புதைத்து விட்டனர். எதற்காக இவர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற கேள்வியை நாம் கேட்கக்கூடாதா? இதற்கு நாம் துக்கப்பட வேண்டாமா? ஆனால், இந்தப் பிரச்சினையையே கண்டு கொள்ளமாட்டோம் என்றிருப்பது கண்டிக்

அதுவும் நடக்கவில்லை. ஆனால், இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பது பற்றி, மனித உரிமையில் அக்கறையுள்ளவர்கள் கவலைப்படாமல் இருக்க முடியாது. பக்கத்து நாடான இலங்கையின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும், அமைதி காணப்பட வேண்டும் என நான் முன்பு பேசியிருந்தேன். அதற்குத் தேசத்துரோகி என்ற பட்டம் கிடைத்தது. அது தேசத்துரோகமா? இலங்கையில் தமிழ் மக்கள் பட்டுவரும் கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. அது பற்றி தீர்வுகாண அக்கறை இல்லாதவர்கள் அமைதிபற்றி பேசுவதையும் தடுக்க வேண்டுமா?" எனவும் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் கேள்வி எழுப்பினார்.

## கொடுமை இழைக்கப்பட்டதன் விளைவுதான் புலிகள் இயக்கம்

"இலங்கைப் பிரச்சினையைப் புலிகளை வைத்துத்தான் பார்க்கிறார்கள்: இலங்கைப் பிரச்சினைக்குக் காரணம் புலிகளா? 1948 இலிருந்தே இலங்கையில் பிரச்சினை இருந்து வருகிறது. பிரச்சினை தோன்றிய அந்த நாளில் புலிகள் இயக்கம் தோன்றவில்லை. தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அகிம்சை முறையிலான பல முயற்சிகள் எடுக்கப்பட்டு, அவை தோற்கடிக்கப்பட்ட பிறகுதான் புலிகள் உருவாகினர். இந்த உண்மையைச் சொல்ல ஏன் மறுக்கிறீர்கள்? ஒரு பிரச்சினையை அதன் ஆழத்திற்குச் சென்று பார்க்க வேண்டும். இல்லாதுவிட்டால், உண்மை தெரியாது. புலிகள் இதற்குக் காரணமல்ல. தமிழர்களுக்குக் கொடுமை இழைக்கப்பட்டதன் விளைவுதான் புலிகள் இயக்கம். விடுதலைப் புலிகள் இல்லாமல் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று உலக நாடுகள் கூறியுள்ளன. இந்தியா இதை மறந்து விடக்கூடாது" எனவும் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் தமதுரையில் கூறியுள்ளார்.

## தமிழர்களை பாதுகாக்க எத்தியாகம் செய்யவும் தயார்

**- பா. ம. க தலைவர் தீரன்**

"ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் சிறைக்குச் செல்ல மட்டுமல்ல, எந்தத் தியாகம் செய்யவும் தயாராகவுள்ளோம்" என, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் தீரன் அவர்கள் தனது தலைமை உரையில் முழக்கமிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இலங்கையில் இருந்து வருகின்ற தமிழ் அகதிகள் அத்தனை பேரையும் விடுதலைப் புலிகள் என்று கூறுகிறார்கள்: அவ்வாறு எண்ணுதல் தவறு. தமிழர்கள் மீது இனவெறித் தாக்குதல் நடாத்தப்படுகின்றது. 7 இலட்சம் தமிழர்கள் வன்னிக் காடுகளில் அலைந்து திரிகின்றனர். அங்கு வாழ முடியாத சூழ்நிலை காரணமாகவே இங்கு அகதிகளாக ஓடி வருகிறார்கள். அகதிகளாக வருபவர்களை விடுதலைப் புலிகள் என்று கூறுகிறார்கள். விடுதலைப் புலிகள் என்ன கோழைகளா, இங்கு வந்து ஓய்வு எடுப்பதற்கு?" எனவும் கேட்டுக் கொண்டார்.

"இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு வக்காலத்து வாங்கலாமா? எனக் கேட்கிறார்கள்: காந்தியைக் கொன்ற கோட்சேயின் ஆர். எஸ். எஸ் இயக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வாதாடி, போராடி வெற்றி பெற்றவர்கள்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தடையை நீக்கக் கோரலாமா? எனக் கேட்கிறார்கள். தமிழர்களின் பாதுகாப்புக்காகப் போராடும் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?" எனவும் பேராசிரியர் தீரன் அவர்கள் கேள்வி எழுப்பினார்.

## தமிழ் ஈழப் போராட்டம் நீதியானது, சட்டரீதியானது

**-திருமதி. மதலீன் மைக்கேல்**

"தமிழ் ஈழப் போராட்டம், நீதிக்கும் சமத்துவத்திற்கும் நடக்கும் போராட்டம்: இது சிங்கள ஆட்சிக்கெதிராக சட்டரீதியாக நடக்கும் போராட்டம். தமிழ் ஈழ மக்களின் விடுதலைப் போராட்டம். உண்மையான ஜனநாயகப் போராட்டம். அதனால், இலங்கைத் தமிழ் மக்களுக்காக இங்கு மாநாடு நடத்துவது பொருத்தமானதே" என, சுவிட்சலாந்து நாட்டிலுள்ள தமிழ் ஈழ ஒற்றுமை தொடர்பு மையத்தின் இணைச்செயலாளர் திரு. மதலீன் மைக்கேல் தமது சிறப்புரையில் வலியுறுத்தினார்.

"இலங்கையில் சொந்த நாட்டிலேயே தமிழ் மக்கள் அகதியாக உள்ளனர்: பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் படுகின்றனர். தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். பலர் காணாமல் போகின்றனர். வீடு வசதியின்றி கூரை கூட இல்லாமல் காடுகளில் வாழ்கின்றனர். உணவு, மருந்துக்கு அரசு தடை விதித்துள்ளது. தொற்றுநோய் பரவி பலர்

தொடர்ச்சி 14 ம் பக்கம்...



திரு. கோ.மு.வீரபத்திரன், வே. ஆனைமுத்து ஆகியோர் தனிமேடையிலிருந்து பார்வையிட்டபோது....

www.tamilarangam.net



# ஈழத் தமிழர் பாதுகாப்புக்கான....

சாகின்றனர். தமிழ் மக்களுக்குச் சிங்கள அரசு இழைக்கும் இக்கொடுமைகளை உலகறியச் செய்ய வேண்டும். தமிழருக்கென்று சொந்தமாக நாடு இல்லை. தமிழ் ஈழப் போராட்டம் வெற்றி பெறவேண்டும். வெற்றி பெறும்வரை நாம் ஓயமாட்டோம். தமிழ் ஈழம் தமிழ் மக்களுக்கானது - உங்களுக்கானது. தமிழ் ஈழம் வெல்லட்டும்" எனவும் திரு. மதலீன் மைக்கேல் அவர்கள் முழக்கமிட்டார்.

"நீறுபூத்த நெருப்பாக இருந்த தமிழீழ உணர்வு, இன்று கனல் கக்கும் தீயாக ஊதிவிடப்பட்டுள்ளது: அதைப் பெருந்தீயாக மாற்ற வேண்டியது, தமிழ் உணர்வுடைய அனைவரதும் கடமையாகும்"

– டாக்டர் ராமதாஸ்

## ஏன் தமிழர்கள் தனிநாடு கேட்டார்கள்?

**- நீதிபதி அஜித்சிங் பெய்ன்ஸ்**

"தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை இலங்கை அரசு நிராகரித்து விட்டது: தமிழ் மொழியைச் சிங்கள மொழிக்கு நிகராக அங்கீகரிக்கவில்லை. சர்வதேச சட்டத்தில் உள்ள வாழ்வுரிமை, வழிபாட்டுரிமை என்பனவற்றைக் கூட இலங்கை அரசு மீறியுள்ளது. தமிழ் மக்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டனர். தமிழ் மக்கள் முதலில் மொழி, சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளுக்காகப் போராடினார்கள். அவை தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வந்ததனாலேயே தமிழர்கள் தனிநாடு கேட்டார்கள். அதற்காகப் போராடி வருகிறார்கள்" என்று விளக்கமளித்த, பஞ்சாப் மனித உரிமைக்குழுத் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி அஜித்சிங் பெய்ன்ஸ் அவர்கள், இதனாலேயே விடுதலைப் புலிகள் இயக்கம் தோன்றியது எனவும் குறிப்பிட்டார்.

## பேரணியில் எழுப்பப்பட்ட முழக்கங்களில் சில...,

ஈழத் தமிழர் எங்களின் இரத்தம்
அவர் இன்னல் உரைப்பது
எப்படிக் குற்றம்?
ஈழத்துப் பெண்கள் எங்கள் சகோதரி
அவர் துயர் துடைப்பது எப்படிக் குற்றம்?

மொழி உரிமை! மண் மீதுரிமை:
இலங்கைத் தமிழர் கேட்பது தவறா?
கேட்பவர் மீது இராணுவம் ஏவி
மனித உரிமை மறுப்பது முறையா?

சொந்த நாட்டில் அகதிகளாக
ஏழு இலட்சம் ஈழத் தமிழர்!
இந்தக் கொடுமை நியாயந்தானா?
இந்திய அரசே பதில் சொல்லு!

காற்றும் இல்லை: நீரும் இல்லை:
கட்டிக் கொள்ளத் துணியும் இல்லை:
மருந்தும் இல்லை: உணவும் இல்லை:
மடியுது தமிழினம் இலங்கையிலே:
பக்கத்து நாடாம் இந்திய தேசம்
வேடிக்கை பார்ப்பது எதனாலே?

அடிமை வாழ்வும் அகதி வாழ்வும்
தமிழர் வாழ்வில் தொடர் கதையா?

ஈழத் தமிழர் துயர் துடைக்க
பாட்டாளிப் பேரணி வருகுதைய்யா!

ஈரின நாடு இலங்கை என்பதை
இந்திய அரசு ஏற்றிட வேண்டும்:
ஈழத் தமிழர் உரிமைப் போரில்
இந்திய அரசு உதவிட வேண்டும்.

வங்க நாடு விடுதலை ஆக
வழி வகுத்த இந்திய அரசே!
செந்தமிழ் ஈழம் விடுதலை ஆக
செய்தது என்ன சொல்லிடு நீயே!
ஒற்றுமை என்றே கூவும்
வெற்றுரை மனிதரே கேளுங்கள்:
ஒற்றுமை வேண்டிய தமிழர் தலைவர்
ஒன்றா இரண்டா சொல்லுங்கள்:
ஒப்பந்தங்கள் பல நம்பி
ஏமாந்தாரே மனம் வெம்பி!
இதற்குப் பின்னும் ஒற்றுமையா?
இதுதான் உங்கள் கட்டளையா?
மடியட்டும் மடியட்டும், மனிதக் கொடுமைகள்
விடியட்டும் விடியட்டும், ஈழத்தின் காரிருள்!
மலரட்டும் மலரட்டும், தமிழீழம்
உயரட்டும் உயரட்டும்,
பழந்தமிழ்க் கொடிமரம்!

## மாநாட்டு தீர்மானங்கள்

ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில், தமிழினத்தையே இலங்கை மண்ணிலிருந்து பூண்டோடு அழிக்க முயன்றிடும் சிங்கள இனவெறி அரசைக் கண்டித்தும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரித்து ஆதரவும் உதவியும் வழங்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1. போர் நிறுத்தம் செய்யுமாறும் படைகளை விலக்குமாறும் இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்**

யாழ்ப்பாணத்தின் மீதும் கிளிநொச்சியின் மீதும் சிங்கள அரசின் முப்படைகளும் நடாத்திய தாக்குதல்களால், 7 இலட்சம் ஈழத் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டு வவுனியாக் காடுகளுக்கு விரட்டப் பட்டுள்ளனர்.

உணவு, மருந்து, தங்குமிடம் போன்ற எவ்வகை அடிப்படை வசதிகளும் இல்லாமல் குழந்தைகள், பெண்கள், முதியோர் என்ற வேறுபாடு இன்றி அவர்கள் அனைவரும் தாங்கமுடியாத துன்பத்துக்கு ஆளாகி உள்ளனர். அவர்கள் மீண்டும் தங்கள் வசிப்பிடங்களுக்குத் திரும்பி இயல்பான வாழ்க்கை மேற்கொள்ள வேண்டுமானால், சிங்கள அரசு உடனடியாகப் போர் நிறுத்தம் செய்வதுடன் அங்கு நிலை கொண்டுள்ள படைகள் அனைத்தையும் திரும்பப் பெறுதல் வேண்டும்.

எனவே, போர் நிறுத்தத்தைச் செய்யுமாறும் படைகள் அனைத்தையும் பாரம்பரியத் தமிழ் மாகாணங்களில் இருந்து விலக்கிக் கொள்வதை மேற்கொள்ளச் செய்யுமாறும், இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்.

**2. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்தியா தேசிய இனப்போராட்டமாக அங்கீகரித்து, பாதுகாப்பும் உதவியும் வழங்கிட வேண்டும்**

சிங்களவர் மற்றும் தமிழர்களின் இணைப்பாட்சியாக இலங்கையின் அரசாட்சி அமைந்திடல் வேண்டும் என்று விரும்பி, அதற்காக 1948லிருந்து 1976ம் ஆண்டு வரை அறவழிப் போராட்டங்களையே, செல்வநாயகம் போன்ற தமிழர் தலைவர்கள் நடத்தி வந்தனர். அப்படியொரு கூட்டாட்சி சாத்தியமில்லாமல் போகவே, 1976 இல் தனி ஈழம்தான் தீர்வு என்கிற முடிவை தமிழர் தலைவர்கள் மேற்கொண்டனர்.

அதன் தொடர்ச்சியாக, தமது அரசியல் வாழ்வைத் தாமே தீர்மானிக்கும் வகையில் உண்மையான மதிப்புடன் கூடிய நிரந்தரத் தீர்வான தமிழீழம் பெற ஈழத் தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசிய இனப் போராட்டமாக இந்திய அரசு அங்கீகரித்து, உலகின் ஏனைய தேசிய இனப் போராட்டங்களை ஆதரித்தது போலவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஆதரித்து பாதுகாப்பும் உதவியும் வழங்கிட வேண்டும்.

**3. இந்தியா வரும் தமிழீழ அகதிகள் அனைவருக்கும் எல்லா உதவிகளையும் தமிழக அரசும் இந்திய அரசும் செய்தல் வேண்டும்**

சிங்கள அரசின் தொடர்ச்சியான இராணுவத் தாக்குதலின் காரணமாக இலங்கையில் வாழவே முடியாத சூழல் உருவானதினால்தான், அங்குள்ள தமிழர்கள் வெளியேறி பிறநாடுகளில் தஞ்சம் கொள்கின்றனர். அப்படி ஒரு சூழ்நிலையில் தமிழகத்திற்கு வருபவர்களை கடல் நடுவே தடுத்து நிறுத்துவதும் கரை சேர்ந்தவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்வதும் மனித நேயமற்ற செயல்களாகும்.

அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ள இலங்கைத் தமிழர்களை சிறப்பு முகாம்களில் அடைத்துச் சிறை வைத்துள்ள செயலானது எந்த வகை நீதியிலும் அடங்காது. முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள அகதிகளை விடுவிப்பதுடன், தமிழீழ அகதிகள் அனைவருக்கும் சர்வதேச அகதிகள் பராமரிப்பு விதிகளின்படி எல்லா உதவிகளையும் தமிழக அரசும் இந்திய அரசும் செய்துதர வேண்டும்.

**4. ஐ. நா. சபை உடனடியாகத் தலையிட்டு இலங்கையில் தமிழ்த் தேசிய இனம் அழிவுக்குள்ளாவதைத் தடுக்க வேண்டும்**

இலங்கையில் சிங்கள தேசிய இனத்திற்கு ஆதரவாக, இலங்கை அரசு தமிழ்த் தேசிய இனத்தின் மீது கடந்த 14 ஆண்டுகளாக இராணுவத் தாக்குதல் நடாத்தி பல இலட்சம் தமிழர்களை சொந்த நாட்டிலேயே நாடற்றவர்களாக்கியும் கொன்று குவித்தும் வருகிறது.

மனித உரிமைக்கும் தேச விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் முன்னிக்க வேண்டிய உலக அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை இதுவரை இப்பிரச்சினையில் கவனம் செலுத்தாமல் இருக்கிறது. எனவே, இப்பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை உடனடியாகத் தலையிட்டு, தமிழ்த் தேசிய இனம் இலங்கையில் அழிவுக்குள்ளாவதை தடுத்து நிறுத்த முன்வர வேண்டும்.

**5. தமிழர் வாழும் இலங்கையின் வட-கிழக்குக்கு பத்திரிகையாளர்களும் தொண்டர்களும் சென்றுவர அனுமதிக்க வேண்டும்**

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாநிலங்களில் பத்திரிகையாளர்களையும் தொண்டு நிறுவனங்களையும் செல்ல அனுமதிக்க வேண்டும்.

அமைதிக்கான யுத்தம் என்கிற பேரில் இலங்கையின் அதிபர் சந்திரிகா, தமிழீழத்தின் மீது தொடுத்துள்ள போரானது பல ஆண்டுகளாக முன்னைய இலங்கை அரசுகள் நடத்தி வரும் தமிழின அழிப்பின தொடர்ச்சி என்றே பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது.

இத்தீர்மானங்கள் மூலம், தமிழினத்தையே இலங்கை மண்ணிலிருந்து பூண்டோடு அழிக்க முயன்றிடும் சிங்கள இனவெறி அரசை, இம்மாகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. ✷

ஈழத்தமிழருக்கு இன்னல் நிகழும் பொழுதெல்லாம் தமிழகத்திலிருந்து எழும் அனுதாப உணர்வலைகள் ஈவிரக்கமற்ற எமது எதிரிக்கு ஒரு அச்சுறுத்தலாக அமைவதுடன் நொந்து போயிருக்கும் எமது மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் தருகிறது. அத்துடன் ஈழத்தமிழினம் நிராதரவாகத் தனித்து நிற்கவில்லை என்ற உண்மையையும் உலகத்திற்கு எடுத்தியம்புகிறது. தமிழீழ மக்களின் இனப்பிரச்சினை பற்றியும், அவர்களது நியாயமான தேசியப் போராட்டம் பற்றியும், அந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப் புலிகள் பற்றியும் தவறான கருத்துக்களைத் தமிழக மக்கள் மனதில் விதைத்து விட எத்தனையோ சக்திகள் எத்தனித்த போதும், அரசியலுக்கு அப்பால் நின்று, இன உணர்வின் அடிப்படையில், எமது மக்களுக்காக நீதி கேட்டுத் தமிழகம் ஆர்ப்பரித்து எழுவதைக் காண எமக்கு ஊக்கமும் உறுதியும் ஏற்படுகின்றது.

**- தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்



## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினொன்று

(தொடர்ச்சி)

கடந்த நூற்றாண்டில் குறிப்பாக ரஸ்யா, போலந்து போன்ற நாடுகளில் யூதப் படுகொலைகள் அதிகரித்து இடம் பெற்றன. அதைபடுத்து தாய்நாடு திரும்பும் உத்வேகம் நாடுகடந்த யூதர்களிளிடையே ஏற்பட்டது. உம் உலக மகா யுத்தத்தின் போது கிட்லரின் நாசி யேர்மனியில் 60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து 'தாயகம் நோக்கிய பயணம்' யுதர்களின் தாரக மந்திரமாகியது.

பிரிட்டிஷ் கடற்படையை எதிர்த்துப் போரிட என்னிடம் எதுவுமில்லை. உங்களின் பிள்ளைகளில் வயது முதிர்ந்ததை அனுப்பினால் அது தன்னைத் தானே கவனித்துக்கொள்ளும் என நான் நினைக்கிறேன். நாளைமிரவு பொஸ்டாம் (Potsdam) புகையிரத நிலையத்தில் இருந்து பெர்லினைவிட்டு அந்தப் புகையிரதம் வெளிக்கிடுகிறது.

கரேன் தனக்கு விருப்பமான, பழந்துணிகளாலான அந்தப் பொம்மையைத் தூக்கமயக்கத்தோடு அணைத்துக் கொண்டிருந்தாள். தந்தை அவளுக்கு முன்னால், முழந்தாழிட்டுக் கொண்டார். அவரது சுங்கானின் அருமையான மணம் அவளது நாசிகளில் வருடியது.

**லியோன் யூறிஸ்**

"இது ஒரு அருமையான பயணமாக இருக்கப் போகிறது", கரேன் சரியாக பேடன்–பேடனுக்குப் போவது போல் இருக்கும்.

"ஆனால் எனக்குப் போகத் தேவையில்லை அப்பா"

"இதோ பார் உன்னைப் போல் எத்தனை பிள்ளைகள் உன்னோடு போகிறார்கள் என்று"

"எனக்கு அவர்கள் தேவையில்லை. நீங்களும் அம்மாவும், கான்சும் மக்சிமில்லியனும் தான் வேண்டும். இப்ப பிறந்த தம்பியையும் பார்க்க வேண்டும்."

"இதோ பார் என் அருமை மகள் அழக்கூடாது."

"நான் அழமாட்டேன் நான் அழமாட்டேன்.... அப்பா அப்பா நீங்கள் கெதியாக என்னைப் பார்க்க வருவீர்களா?"

"நாங்கள் எல்லோரும் வர முயற்சிப்போம்."

ஒரு பெண் ஜோஹான் கிளமென்றுக்குப் பின்னால் வந்து நின்று, "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.... புகையிரதம் புறப்பட நேரமாகி விட்டது" என்றாள்அவரது தோளில் தட்டி.

"நான் இவளைக் கூட்டிப் போகிறேன்."

"இல்லை என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.... ஒரு பெற்றோரும் புகையிரதத்தில் ஏற முடியாது."

அவர் தலையை அசைத்து விட்டு கரேனை ஒருமுறை இறுக அணைத்துவிட்டு இறங்கித் தனது சுங்கானை பற்கள் நோவெடுக்கும் வரை இறுக்கிக் கடித்துப் பிடித்தபடி நின்றார். கரேன் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்தபடி போக முயன்றவள் நின்று திரும்பித் தந்தையிடம் தனது பொம்மையைக் கொடுத்தபடியே சொன்னாள்: "அப்பா எனது பொம்மையை எடுத்துச் செல்லுங்கள். அவள் எங்களைக் கவனித்துக் கொள்வாள்."

ஏராளமான பெற்றோர்கள் தூக்கத்தோடு புகையிரதத்தின் அருகே நெருங்கியடித்துக் கொண்டு நின்றனர். பிள்ளைகளும் கண்ணாடி யன்னல்களில் முகம் பதித்தபடி சத்தம் போட்டுக் கூப்பிட்டபடி முத்தங்களை வீசியபடி கையை அசைத்தபடி கடைசியாக ஒருமுறை தங்கள் உறவினரைப் பார்ப்பதற்கு முயன்றனர்.

அவர் அவளைப் பார்க்க முயன்றாலும் முடியவில்லை.

அந்த உருக்குப் புகையிரதம் கரகரத்தபடி அசையத்தொடங்கியது. பெற்றோர் புகையிரதத்தோடு இறுதி வழியனுப்பும் குரல்களை எழுப்பிக் கொண்டே ஓடினர்.

ஜோஹான் கிளமென்ற் கூட்டத்தின் வெளிக்ரையில் அசையாமல் நின்றார். கடைசிப்பெட்டி அவரைக் கடக்கும் போது தலையை நிமிர்த்திப் பார்த்த அவர் கடைசிப் பெட்டியின் பின்தளத்தில் கரேன் அமைதியாக நிற்பதைக் கண்டார். அவள் இனியொருமுறை அவரை உயிரோடு காணமாட்டாள் என்பது தெரிந்தது போல் தனது உதடுகளில் கையை வைத்து முத்தம் ஒன்றை காற்றில் தவழ விட்டாள்.

அவர் அவளது சிறிய உருவம் மேலும் சிறிதாகி.... சிறிதாகிப் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். கடைசியாய் அவள் மறைந்தே போனாள். தன்கையில் இருந்த பழந்துணி பொம்மையைப் பார்த்துக் கொண்டே "போய்வா என் உயிரே என முணுமுணுத்தார்."

### அத்தியாயம் பன்னிரெண்டு

ஆகே (Aage), மேற்றா ஹான்சன் (Meta Hansen) தம்பதியினருக்கு, ஆல்போர்க் (Aalbore) புறநகரப் பகுதியில் ஒரு அழகான வீடொன்று இருந்தது. சிறிய பெண் குழந்தைகளுக்கு இது மிகவும் பொருத்தமானதாக இருந்தது. ஏனெனில் அவர்களுக்கென, குழந்தைகள் இருக்கவில்லை. ஹான்சன் தம்பதியினர் கிளமென்றுகளைவிட, வயது முதிர்ந்தவர்கள். ஆகேகுக்கு நரை விழுந்திருந்தது. மேற்றாவுடைய அழகு, மரியத்தின் அழகுக்கு உறைபோடக் காணாது. ஆயினும், கரேனுடைய களைப்படைந்திருந்த சிறிய உடம்பைத் தங்களது காருக்குள் தூக்கிச் சென்றதிலிருந்து, அன்பையும் பாதுகாப்பாக இருக்கும் உணர்வையும் கரோன் பெற்றாள்.

டென்மார்க்குக்கான புகையிரதப் பயணம் மிகவும் குழப்பம் மிகுந்ததாகவே இருந்தது. அவளுக்கு ஞாபகமிருந்ததெல்லாம், தன்னைச் சுற்றிப் பிள்ளைகள் அடக்கிய குரலில் விம்மிக் கொண்டிருந்ததுதான். மிகுதி யாவும் மங்கலாகத்தான் இருந்தன. வரிசைகளில் நின்றவற்றில், பெயர் அட்டைகள் கட்டப்பட்டிருந்தன. புதிய முகங்கள், பழக்கமில்லாத பாஷை, காத்திருக்கும் அறைகள், பேரூந்துகள், மேலும் பெயர் அட்டைகள் இத்தியாதி.

கடைசியாக அவளை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று விட்டுவிட்டு, மேற்றாவும் ஹான்சனும் ஆவல் பொங்க அவளைப் பார்த்தபடி நின்றனர். முன்னதாகப் புகையிரத நிலையத்தில் மண்டியிட்டு அவளைத்தூக்கிக் காருக்குள் கொண்டு வந்தார். வீடு வந்து சேரும் வரை, அதாவது ஆல்போர்க் வந்து சேரும்வரை, மேற்கு அவளோடு செல்லம் கொஞ்சிக் கொண்டு வந்தார்.

கரேனுக்காக அவர்கள் ஆயத்தப்படுத்தியிருந்த அறையினுள் அவளை விட்டுவிட்டு, வாசலடியில் நின்று ஆவலாக, அவள் மெல்ல அடிவைத்து உள்ளே போவதைப் பார்த்துக்கொண்டு நின்றனர். அந்த அறையானது பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள், புத்தகங்கள், உடுப்புகள், ஒலிப்பதிவுத் தட்டுக்கள், (Records) மற்றும் ஒரு சிறு பெண்பிள்ளை எதையெதை விரும்புவாளோ, அவை எல்லாவற்றாலும் நிறைந்திருந்தது. அவளுக்கான கட்டிலில் அமர்ந்திருந்த ஒரு மகிழ்ச்சி பொங்கும் நாய்க்குட்டியை அப்போது கரேன் கண்டாள். அவள், அதற்கு முன்னால் கீழே மண்டிமிட்டு அமர்ந்து, அதனைத் தட்விக் கொடுத்தாள். நாய்க்குட்டியும் பதிலுக்கு அவளை நக்கியது. ஈரமான மூக்கொன்று தன் கன்னத்தில் படுவதை உணர்ந்தாள். அவள் திரும்பி, ஹான்சன் தம்பதியினரைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள். அவர்களும் திரும்பிச் சிரித்தனர்.

தாயும் தந்தையும் இல்லாமல் கழிந்த அந்த சில முதல் இரவுகள் மிகவும் கொடுமையாக இருந்தன. தம்பி ஹான்சுக்காக அவள் ஏங்கிய விதம் அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவள் உணவைக் கொறித்துவிட்டு, மக்சிமில்லியன் என அவள் பெயர் சூட்டியிருந்த நாயோடு அமைதியாக அறையில் உட்கார்ந்து நேரத்தைச் செலவிட்டாள். மேற்றாவுக்கும் ஹான்சனுக்கும் இவளின் மனப்பாரம் புரிந்தேமிருந்தது. இரவில் அவளருகில் படுத்து, அவளது மெலிதான விசும்பல்கள் அடங்கி நித்திரை செய்யுமட்டும் அவளை அணைத்தபடி கிடப்பாள்.

ஒரு வாரத்துக்கு விருந்தினர்கள் பரிசுகளுடன் அவளை வந்து பார்த்து, இன்னும் கூடப் புரிந்துகொள்ள முடியாத பாஷையில் அவளுடன் என்னென்னவோ எல்லாம் கதைத்து விட்டுச் சென்றனர். ஹான்சன் தம்பதியினருக்கு அவளைப் பற்றி மிகவும் பெருமையாக இருந்தது. அவளும் எல்லோரோடும் மிக அன்பாகப் பழகினாள். சில நாட்களில் வீட்டுக்கு வெளியே, மெதுமெதுவாகச் சென்று வரத் தொடங்கினாள்.

கரேனுக்கு, ஆகே ஹான்சனை மிகவும் பிடித்துப் போயிற்று. அவரும் அவள் தந்தையைப் போலவே சுங்கான் பிடிப்பார். அவரைப் போலவே, நடைப்பயணங்கள் போவதிலும் விருப்பமுடையவராக இருந்தார். ஆல்போர்க் ஒரு சுவாரஸ்யமான இடம். கொலோன் நகரைப் போலவே ஆறு ஒன்று அங்கும் ஓடியது. அதன் பெயர் லிம்ஜோர்டன் (Limfjorden). மிஸ்டர் ஹான்சன் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வந்ததோடு, மிக முக்கியமான மனிதராகவும் விளங்கினார். அவரை எல்லோருக்கும் தெரிந்திருந்தது. என்றாலும், அவளுடைய தந்தையைப் போல் முக்கியத்துவம் பெற்றவரல்ல. சிலர் அப்படியும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஒரு நாளிரவு, ஹான்சன் அவளருகில் வந்து சொன்னார், "கரேன் இப்போ மூன்று வாரங்களாக நீ எங்களுடன் இருக்கிறாய். ஒரு முக்கியமான விஷயம் உன்னோடு கதைக்க வேண்டும்."

அவர் தன்னுடைய கைகளைப் பின்னுக்குக் கட்டியபடியே, முன்னும் பின்னும் அறைக்குள்ளேயே உலாத்தியபடியே அவளுக்குப் புரியக்கூடிய விதத்தில் அழகான குரலில் அவளுடன் கதைத்தார். அவளுடைய தாயாரும் தந்தையும் ஜேர்மனியில் நிலைமை அவ்வளவு திருப்தி இல்லாததால், இன்னும் சில நாட்களுக்கு அவள் தங்களுடன் தங்குவதை விரும்புவதாகச் சொன்னார். அவளுடைய சொந்தத் தாய், தகப்பனைத் தங்களால் ஈடு செய்ய முடியாது என்றும், தங்களுக்குக் குழந்தைச் செல்வத்தை இறைவன் அளிக்காதபடியால், அவள் தங்களுடன் இருப்பதில் தாங்கள் மகிழ்ச்சியடைவதாகவும், அவளும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்றும் அன்பாகக் கேட்டுக் கொண்டார்.

கரேனும் தனக்கு நிலைமை நன்றாகப் புரிவதாகவும், தான் அவர்களோடு இருப்பதில் எந்தக் குறையுமில்லை என்றும் தெரிவித்தாள்.

"என் அன்பு கரேன், கொஞ்ச நாளைக்கு நாங்கள் உன்னை இரவலாகப் பெற்றிருப்பது போல்....... நீயும் எங்கள் பெயரை........ தற்காலிகமாக உன் பெயருடன் இணைத்துக் கொள்வாயா?"

இப்படிக் கேட்பதற்கு, ஆகேக்குக்கு வேறு காரணங்கள் இருப்பது, இதைப்பற்றி ஆலோசித்த போது அவளுக்குப் புரிந்தது. அவரது கேள்வி, அப்பாவும் அம்மாவும் பூட்டிய கதவுக்குப் பின்னால் கதைத்த அதே கதையை, தேவையைக் கொண்டிருப்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. அவள்

தொடரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நீதிமன்றம் அமெரிக்காவின் உத்தியோகபூர்வமான பிரசாரத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது

# பயங்கரவாதத்தின் வரைவிலக்கணத்தை அமெரிக்கா திரிபுபடுத்துகிறது

## -பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

**உ**லகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்க விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

பாபரா யக்மன்

**கேள்வி:** ஒரு தேசிய விடுதலை இயக்கம் போர் விதிகளை அவ்வப்போது மீறியிருந்தால் மேலதிக ஒப்பந்தம் 1, குறிப்பிட்ட ஒருவர் போர்க் குற்றங்கள் இழைத்தார் என்ற குற்றச்சாட்டைச் சுமத்துவதற்குப் பொதுவாக உதவியாக இருக்கும்........ அல்லது அக்குற்றச்சாட்டுப்பற்றிய அறிவு திட்டமாக இருக்கவேண்டுமா?

**பதில்:** அது திட்டமாக இருக்க வேண்டும். இராணுவங்களைப் பற்றிக் குறிப்பிடலாம். கனடாவின் இராணுவம் சோமாலியாவில் இருந்தது தொடர்பாக, சோமாலியாவில் சில பிரச்சினைகள் இருந்தன.

ஒரு இராணுவத்தில் இருக்கும் சிப்பாய்கள் சிலர், போர்க்குற்றங்கள் அல்லது மனிதவுரிமை சட்டமீறல்கள் இழைத்தார்கள் என்பதற்காக, முழு இராணுவத்தையுமே கூட்டாக குற்றவாளிகள் என்று கணக்கிட முடியாது.

**நீதிபதி:** இராணுவம் அதனைக் கண்டும் காணாதது போல் இருக்கும் பட்சத்தில்.........?

**சாட்சி:** அப்படியென்றாலும் இல்லை என்பதே (எனது) பதிலாகும். பல இராணுவங்கள் இருக்கின்றன. கனம் நீதிபதி அவர்களே! பொறுப்பு தனிப்பட்டவர்களைச் சார்ந்தது. உதாரணத்துக்கு, X என்ற சிப்பாய் போர்க் குற்றங்கள் இழைக்கின்றான். Y என்ற சிப்பாய் இராணுவத்தில் இருக்கின்றான். அந்த இராணுவம் ஏராளமான போர்க்குற்றங்களை இழைக்கின்றது. இருந்தும் அதை வைத்துக்கொண்டு Y ஐப் போர்க்குற்றவாளி என்று சொல்லிவிட முடியாது. குற்றத்துக்கான பொறுப்பு தனிப்பட்ட முறையில் இருக்க வேண்டும்.

**நீதிபதி:** அது எனக்கு விளங்குகிறது. நான் எதனை விளங்கிக்கொள்ள முயற்சிக்கிறேன் என்றால்........, ஒரு இராணுவம் பேரூந்துகள் மீது குண்டுகள் வீசி அழிப்பதைத் தனது கொள்கையாக வைத்திருந்தால், உமது வார்த்தைகளையே நான் பாவிக்கிறேன். குண்டு வீசுகிறவர் மட்டும் குற்றவாளி, மற்ற யாரும் அதற்குப் பொறுப்பில்லை என்று சொல்கிறீரா?

**சாட்சி:** குண்டுகளை வீசக் கட்டளை பிறப்பிப்பவர்களும் குற்றவாளிகளே. உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், வியட்னாமில்.........

**நீதிபதி:** அப்படி அந்த ஆட்களுக்கு உதவி செய்பவர்கள்.........

**சாட்சி:** அறிந்துகொண்டு உதவியாகவும் உடந்தையாகவும் இருப்பவர்கள்.

**சாட்சி:** அறிந்துகொண்டு உதவி செய்பவர்

**நீதிபதி:** அறிந்துகொண்டு உதவி செய்பவர். நன்றி.

**சாட்சி:** வியட்னாமை எடுத்துக் கொள்வோம். அமெரிக்க இராணுவம், அமெரிக்க ஆயுதப்படைகள் வியட்னாமில் ஜெனிவா மரபுகள், Hague விதிகள், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் இவற்றுக்கு எதிராகப் பாரிய மீறல்களை இழைத்தது.

ஆனால், இது அமெரிக்க இராணுவம் அல்லது ஆயுதப் படைகள் கிரிமினல் அமைப்பு என்ற அர்த்தமாகாது. அல்லது வியட்னாம் அல்லது வடகொரியாவால் பிடிக்கப்பட்ட அமெரிக்க சிப்பாய் ஒருவர், அவர் அமெரிக்க இராணுவத்தில் இருந்தார் என்ற அடிப்படையில் அவர் மீது வழக்குத்தொடர முடியாது. இப்படியான சூழ்நிலைகளில் குற்றம் தனிப்பட்டவர்களைச் சார்ந்தது. தேசிய விடுதலை இயக்கத்தைப் பொறுத்தளவிலும் இந்தக் கோட்பாட்டைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். தேசிய விடுதலை இயக்கங்களையும் இராணுவம் போன்றே நடாத்த வேண்டும்.

பாபரா யக்மன்

**கேள்வி:** வியட்னாமில் அமெரிக்க இராணுவம், சோமாலியாவில் கனேடிய இராணுவம் இழைத்த குற்றங்களை அவை மூடிமறைக்க முயற்சித்தாலும் இதுவே உண்மையாக இருக்கும்?

**பதில்:** எனது அபிப்பிராயப்படி ஆம். அப்படியான சம்பவங்கள் இருக்கின்றன. உதாரணத்துக்கு வியட்னாமில் **My lai** படுகொலையிலும், ஏனைய படுகொலைகளிலும் அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகள் அப்படுகொலைகளை மூடிமறைக்க முயற்சித்தார்கள். ஆனால் அப்படிச் செய்த காரணத்தினால், இராணுவத்தைக் குற்றவாளியாகப் பார்க்க முடியாது.

**கேள்வி:** தனிப்பட்ட குற்றத்தைப் பொறுத்தது. அதாவது, சம்பந்தப்பட்டவர்கள் கிரிமினல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்க வேண்டும். போர்க்குற்றங்கள் இழைத்திருக்க வேண்டும். போர்க்குற்றங்கள் இழைப்பதற்கு உதவியாக அல்லது உடந்தையாக இருக்க வேண்டும். அல்லது போர்க்குற்றங்களை மூடி மறைத்திருக்க வேண்டும் அல்லது அதனை அறிவியாது மறைத்திருக்க வேண்டும்.

**கேள்வி:** நீங்கள் சொல்வதிலிருந்து அதற்குப் பொதுவாக ஆதரவாக இருக்கும் ஒருவரைக் குற்றவாளியாக்காது.........

**பதில்:** இல்லை.

**கேள்வி:** குறிப்பிட்ட அறிவு இல்லாமல்?

**பதில்:** ........அவரது குற்றம், அவர் என்ன செய்தார் என்பதிலும் அவருக்கு என்ன தெரிந்திருக்கிறது என்பதையும் பொறுத்தது. என்ன செய்தார் என்ன தெரிந்திருக்கிறது என்பது ஆங்கில -- அமெரிக்க பொதுச் சட்டமாகும். இது கிட்டத்தட்ட சர்வதேச சட்ட அளவுகோலுக்கு ஒப்பானது.

நும்பேர்க்கில் நடந்த விசாரணை....... நான் நம்புகிறேன் கனடாவும் அதில் பங்குகொண்டிருந்தது. ஆங்கில அமெரிக்க சட்டத்திற்கு ஒப்பான சர்வதேச சட்டத்தின்படி நடந்தது.

**கேள்வி:** எனது முடிவுரை. இந்த வழக்கில் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தப்பட்ட அறிக்கையைப் பெற்றுள்ளீர்கள். ஜெனிவா மரபுகள், மேலதிக ஒப்பந்தம் எடுத்துரைக்கின்ற போர்க்குற்றங்க்ள் பாரியளவில் மீறப்பட்டது........ என்னால் அதன் பிரதியை (நும்பேர்க் வழக்கு விசாரணை அறிக்கை)க் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால், அதுபற்றி பத்திரிகைகளில் தொடர்ச்சியாகக் கட்டுரைகள் எழுதப்பட்டன. FBIS, மற்றும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் வந்தன. உங்கள் எண்ணப்படி இப்படியான வழக்குகளில் தீர்ப்புக் கூறுவதற்கு அவை பொருத்தமான சாட்சியங்களாகக் கொள்ள முடியுமா?

**பதில்:** இல்லை. நான் நினைக்கிறேன், எந்த விதமான வழக்கு விசாரணைகளிலும் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் முடிவு எடுப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

FIBS அறிக்கைகளைப் பொறுத்தளவில், அவை இந்த வழக்கு விசாரணையில் சேர்க்கப்பட்டிருப்பதையிட்டு நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். அமெரிக்காவில் FIBS அமெரிக்க அரசின் பிரச்சார சாதனம் போன்றது என்பது எல்லோருக்கும் தெரியும். அமெரிக்க அரசின் பிரச்சார கரம் FIBS ஆகும்.

ஆனபடியால் இங்குள்ள நீதிமன்றம், அமெரிக்க அரசின் உத்தியோகபூர்வமான பிரச்சாரத்தின் அடிப்படையில் நீதிவழங்க வேண்டும் என ஏன் கேட்கப்படுகிறது என்பது எனக்குச் சரியாகத் தெரியவில்லை. எனது எண்ணப்படி அமெரிக்கா, பயங்கரவாதம் பற்றி ஒரு திரிப்பு வரைவிலக்கணத்தைக் கடைப் பிடிக்கிறது.

**நீதிபதி:** ஐயா, நூறு விழுக்காடு நடுநிலைமையாக எழுதப்படும் ஆவணங்கள் ஏதாவது இருக்கிறது என்று கூற முடியுமா?

**சாட்சி:** நீங்கள் வாசிப்பதென்றால்.......... சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை கண்காணிப்புக் குழு, மற்றும் சுதந்திரமான அரச சார்பற்ற அமைப்புக்களால் வெளியிடப்படும் அறிக்கைகளைப் படிக்குமாறு நான் யோசனை கூறுவேன். ஆனால் FIBS அறிக்கைகள், அவை அமெரிக்க அரசின் பிரச்சார கரத்தின் தயாரிப்புக்கள். ஆனபடியால் நீங்கள், FIBS அறிக்கையில் கூறப்பட்டவையை உறுதிப்படுத்துமாறு கேட்கவேண்டும். அமெரிக்காவினுள் FIBS அறிக்கைகள் எத்தன்மையானது, FIBS இன் பாத்திரம் என்ன, செயல்முறை என்ன என்பது எல்லோருக்கும் தெரியும்.

வெளி வட்டாரங்களில், FIBS அறிக்கைகள் பற்றி விசாரித்துப் பார்க்கலாம். ஆனால், அது தேவையானது என்று நான் நினைக்கவில்லை.

FIBS பற்றி யாரும் கவனம் செலுத்தத் தேவையில்லை. நான் செய்ய மாட்டேன். நான் அதனை (அறிக்கைகளை)ப் படிக்க வேண்டும் என்பதற்காகப் படிக்கிறேன். FIBS அமெரிக்க அரசின் பிரச்சார கரமாக விளங்குகின்றது.

**பாபரா யக்மன்:** இவையே எனது கேள்விகள்.

திரு. Villanccourt பிரபு அவர்களே!

சொந்தக் காரணங்களுக்காக எனக்கு ஐந்து நிமிடங்கள் மட்டுமே தேவைப்படும்.

**நீதிபதி:** மெத்தச்சரி. சில நிமிடங்கள் மட்டுமே எடுக்க விரும்பினால்.........

திரு. Villanccourt: ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுக்க மாட்டேன்.

நீதிமன்றம் சிறிய இடைவேளைக்குப்பின் மறுபடியும் பிற்பகல் 3.10 க்கு கூடுகிறது.

தொடரும்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உண்மைக் கதை

இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் - உணர்வு பூர்வமாக - நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக - நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மாளைக் கும்பிடுறானுகள்.....!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சிங்கள வெறிப் படை -

'அமைதிப் படை' - ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் - போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் - போராளிகளை நேசித்து, அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள் .......

எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.

அவற்றில்....... ஓர் நிகழ்வு.

*"உதுதான் மாவீரர்களைப்பற்றி எழுதின கையே? எண்டு கேட்டு உந்தப் பெடியன்ர கைவிரல்களை எல்லாம் ஊசியாலை குத்தியிருக்கிறாங்கள். பெடியன் துடியாயத் துடித்திருக்கிறான்..."*

*வாத்தியாருக்கு கண்கள் கலங்கிற்று.....*

புத்தூருக்குப் பக்கத்தில் சிறுப்பிட்டி.

கிழவியின் குடிசையில் குப்பிவிளக்கு மங்கி மங்கி எரிந்துகொண்டிருந்தது.

"உந்தப் பெடியன் ஓடையில அல்லே இருக்கிறவன் என்று கேட்டாள் ஆச்சி.

பேத்தி சொன்னாள்.

ஓமென ஆச்சி... புத்தூர்க் கிழக்கு ஓடைதான் திருஞானம் அண்ணையின்ர ஊர்...."

உதேண்டி பிள்ள உந்த நல்ல பெடியனைப் பிடிச்சுக்கொண்டு போனவை...?

வயசெண்டு சொல்லுகினம்.........." என்றார் முகத்தார். அவர் தொடர்ந்தார்.

"இளம் வயசில உந்தப்பெடியன் கலியாணமும் செய்யாமல் அல்லே மக்களுக்கு உழைச்சவன். உழைப்பாளர் சங்கத்தில என்ன பாடெல்லாம் பட்டவன் பிள்ளை..."

புத்தூரில் கொழுத்த தழை எறிந்து தோட்டத்தில் நின்ற செங்கிழங்குப் பயிர்களுக்குப் பக்கத்தில்— அந்த வரப்பில்— அவர்கள் திருஞானத்தின் வாழ்க்கையைப் புரட்டிக்கொண்டிருந்தார்கள்.

"நல்லா எழுதுவான் பாருங்கோ.... 'புத்தெழில்' எண்டு ஒரு சஞ்சிகைகூட அச்சிலை போட்டு வெளியிட்டவன்.... ஒவ்வொரு பக்கத்திலயும் ஏழை எளியதுகள்— தோட்டத்தில வேலை செய்யிறதுகள் பற்றித்தான் எழுதுவான்...."

என்றான் கந்தையா. அவன் சொன்னான்.

"திருஞானம் வைத்திருக்கிற புத்தகக் கடைக்குக்கூட 'புத்தெழில் புத்தகசாலை' எண்டல்லே பேர். கிணத்துக்குள்ள கிடக்கிறமாதிரி வெளியே போகாமல்

# குடிசைகளின் உயிர் நரம்பை அறுத்தவர்கள்

ஆச்சிக்கு அவனை நினைவிருக்கிறது. தன்னுடைய சின்ன ஓலைக்குடிசைக்கு ஒரு நாள் வந்து "ஏதேனும் உதவி வேணுமே ஆச்சி?" என்று கேட்டவன். அந்தக் குடிசையோடு மட்டுமல்ல பக்கத்துக் குடிசை களுக்கெல்லாம் போனான். சிரிப்பும் கலகலப்பும் நீல மோட்டார் சைக்கிளும்...

"ஈ.பி.ஆர்.எல்.எவ் காரன்கள் பிடிச்சுக் கொண்டு போனவையாம் ஆச்சி"

ஆச்சியால் தாங்க முடியவில்லை.

"குறுக்கால போவாங்கள்....." என்று பொருமினாள் அவள்.

புத்தூர்க் கிராமம் பரபரப்பாயிற்று.

27–11–1989

இரவின் அமைதியிலும் வழமைக்கு மாறான மனித நடமாட்டம்.

கந்தையாவைப்பார்த்து முகத்தார் சொன்னார்.

"விடுதலைப்புலிகள் மாவீரர்நாளை இண்டைக்குத்தான் முதல்முதல் கொண்டாடினவையாம்...... இந்த நாளைப்பார்த்து ஈ.பி.ஆர்.எல்.எவ் காரன்கள் உவன் பெடியனைக் கடத்தியிருக்கினம். திருஞானத்தை சின்னவயசில இருந்து எனக்குத்தெரியுமடா தம்பி.... ஓலைக்குடிலுக்குள்ள பிறந்தவன்..... காணியா, வேலியா..... தேப்பன் எப்பவும் வெறுங்கைதான். தாய்க்காரி படாதபாடுபட்டு வளர்த்தவள்."

"எனக்குத் தெரியுமண்ணை" என்றான் கந்தையா. அவன்சொன்னான்.

"பெடியன் நல்ல கெட்டி. தானாப் படிச்சு வளர்ந்து தானே உந்தப் பாடம் சொல்லிக் குடுக்கிற பள்ளிகளுக்கு வாத்தியாராப் போகத் தொடங்கினவன். எத்தினையோ ஊர்களுக்குப் போய்ப் பாடம் சொல்லிக் குடுக்கிறவனாம்...... யாழ்ப்பாணத்துக்கும் போறவனாம்...."

"உவன் பெடியனுக்கு இப்பதான் இருபத்தெட்டு

இஞ்சை இருக்கிறவை. நல்ல புத்தகங்களா அதை இதை படிக்கட்டும் எண்டுதான் புத்தகக்கடையே திறந்தவன்...."

எங்கோ தூரத்தில் ஒரு வண்டியின் வெளிச்சம் அடித்தது.

இருவரும் தோட்டத்தின் உட்புறமாக வீடுகளை நோக்கி விரைந்தார்கள்.

முகத்தார் போகும்போது சொல்லிக்கொண்டே போனார்.

"காலம் கெட்டுப்போச்சுடா தம்பி..."

29–11–1989

மாவீரர் நாள் முடிந்து மூன்றாம்நாள்.

புத்தூரை—ஒட்டிய ஆவரங்காலில் இரண்டு இளைஞர்கள் ஆழமான பேச்சில் தோய்ந்திருந்தார்கள்.

வீட்டு முற்றத்தில் எப்போதும் அவர்கள் உட்கார்ந்து பேசும் மாமரத்தடி.

நாலு மணி நேரத்துக்கு இறங்கு வெயில்.

"யாழ்ப்பாணம் அசோகா கொட்டலிலை ஈ.பி.ஆர்.எல்.எவ். காரன்கள் எங்களின்ர ஊரிலையிருந்து போனவையிட்ட திருஞானம் அண்ணாவைப்பற்றிச் சொல்லி அனுப்பியிருக்கினம்...." என்றான் நீலச்சட்டைக்காரன்.

நெற்றியில் தலைமயிர் விழுந்து கிடந்த அடுத்தவன் கேட்டான்.

"என்னவாம்....?"

"திருஞானம் அண்ணைக்கு சரியான அடியாம்..... தலைகீழாகத் தொங்கவிட்டு அடிக்கினமாம்....."

நீலச்சட்டை தொடர்ந்தான்.

"எனக்குத் தெரியுண்டா... திருஞானம் அண்ணை தொடக்கத்திலை ஈ.பி.ஆர்.எல்.எவ் இலதான் இருந்தவர்.... பேந்துதான் 1986அளவில உவங்களின்ர சுயநலத்தையும் சுத்துமாத்தையும் பார்த்துப்போட்டு – உதைவிட்டு விலகினவர். புலிகளை அவர் ஆதரிக்கிறது உவங்களுக்குச் சரியான கோபம் கண்டியோ."

"பாவம் திருஞானம் அண்ணை...." என்றான் நெற்றிமயிர்க்காரன். அவன் சொன்னான்.

"உவங்களின்ர இயக்கம் சரியாக இருந்திருந்தால் அவர் ஏன்டா புலிகளை ஆதரிக்கப்போறார்? புலிகளின்ர ஒழுக்கமும் வீரமும் அவரை இழுத்திருக்குது... இப்ப பார்க்கலையே.... இந்தியப்படையோட சேர்ந்து எத்தினைபேரை தெருத்தெருவா வெட்டிப்போடுகினம்...... மனுசனை இறைச்சியா வெட்டுறவனுக்கும் திருஞானம் அண்ணைக்கும் எப்பிடி ஒத்துப்போகும்....?"

நீலச்சட்டைக்காரன் தலையை ஆட்டினான். "உண்மைதான்" என்றான் அவன். அவன் சொன்னான்.

"இந்தியப்படை யாழ்ப்பானத்துக்கு வந்து அந்தப்படைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் முண்டு குடுக்கத்தொடங்கின பிறகுதான், திருஞானம் அண்ணை புலிகளை ஆதரிக்கத் தொடங்கினவர்..... புலிகள் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடுறாங்கள் எண்டு அவருக்கு ஒரே கொண்டாட்டம்... புரட்சிகரமான ஆள்...."

நண்பன் தொடர்ந்தான்.

"எப்பவும் ஏழை எளியதுகள் பக்கத்திலைதான் நிற்பார். திருஞானம் அண்ணையைக் கடத்திக்கொண்டு போன நாளையிலயிருந்து குடிசைகளெல்லாம் இருண்டுபோய்க் கிடக்குது...."



நீலச் சட்டைக்காரன் சொன்னான்.

"மாவீரர் நாளுக்கு முதல்நாள் ராத்திரி திருஞானம் அண்ணை மாவீரர் நாள் நிகழ்ச்சிக்கெண்டு நாடகம் பழக்கினது கண்ணுக்குள்ள இருக்குதடா..... மாவீரர் நாளில அவரையும் கொண்டு போட்டானுகள்....... நாடகமும் நடக்கேல்லை..."

"எப்படிப் பிடிச்சவனுகளாம்?"

"திருஞானம் அண்ணை மாவீரர் நாளுக்கு வெளியிடுறதுக்கெண்டு கவிதைத் தொகுப்பு ஒண்டை அச்சில போட யாழ்ப்பாணத்தில குடுத்திருந்தவர். அச்சடிச்ச புத்தகங்களை எடுத்துக்கொண்டு வரேக்குள்ளதான் இருபாலைச் சந்தியில நிண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் காரன்கள் பிடிச்சிருக்கிறான்கள்......

தொடர்ச்சி 18 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாணவர் இருவரை முழங்காலில் நிறுத்திக் கொலை

கிறிஸ்த்தவர்களின் முட்டையடி பெருநாளன்று (11-02-97) முட்டையடியில் ஈடுபட்டிருந்த இரு பள்ளி மாணவர்கள் மட்டக்களப்பு இருதயபுரம் மேற்குப் பகுதியில் சிறிலங்காப் பொலிசாரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கணபதிப்பிள்ளை உதயசேகரம் (18), சுரேஸ் பிரதீபன் (20) ஆகிய மாணவர்களே இனப்படுகொலைக்குள்ளான மாணவர்கள்.

மட்டக்களப்பு புன்னைச்சோலை சித்தி விநாயகர் வீதியைச் சேர்ந்த திருமதி செல்வம் கணபதிப்பிள்ளை தனது மகனை சிறிலங்காப் பொலிசார் மாணவன் என்று தெரிந்துகொண்டே கொன்றுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"எனது மகன் மட்டக்களப்பு உமிர்தகழி சித்தி விநாயகர் பாடசாலையில் படித்து வருகிறார். க.பொ.த. தேர்வு எழுதிவிட்டு பெறுபேறுகளுக்காகக் காத்திருந்த அவர், சம்பவ தினத்தன்று எனது வீட்டிலிருந்து 300 யார் தூரத்தில் அவரது நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்தார். இருதயபுரம் பொலிசார் அவரின் அடையாள அட்டையைப் பரிசோதித்துவிட்டு அவரின் இரண்டு கைகளையும் கட்டிப்போட்டு கொடூரமாகத் தாக்கியுள்ளனர். பின்னர் தங்களிடம் இருந்த ஆயுதங்களை வைத்திருக்குமாறு அவரைப் பலவந்தப்படுத்தியுள்ளனர். அவர் மறுத்துள்ளார். அதன்பின் முழங்காலில் நிற்கவைத்து முதலில் தோற்பட்டையில் சுட்டு அவரைத் துடிதுடிக்க வைத்து ரசித்திவிட்டு பின்னர் தலையில் சுட்டுக் கொன்றுள்ளனர்." இவ்வாறு கண்ணீர் விட்டுக் கதறியவண்ணம் அத் தமிழீழத் தாய் தனது மகனின் படுகொலையை விபரித்தார்.

இம் மாணவர்களின் மரணச் சடங்கில் கலந்தவர்களைக் கூட பொலிசார் பலத்த சோதனையிட்டு துன்புறுத்தியுள்ளனர். ❑

# குடிசைகளின் உயிர் நரம்பை ...

"திருஞானம் அண்ணை மாவீரர் நாளுக்கு வெளிவிடுறதுக்கெண்டு கவிதைத் தொகுப்பு ஒண்டை அச்சில போட யாழ்ப்பாணத்தில குடுத்திருந்தவர். அச்சடிச்ச புத்தகங்களை எடுத்துக்கொண்டு வரேக்குள்ளதான் இருபாலைச் சந்தியில நிண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் காரன்கள் பிடிச்சிருக்கிறான்கள்......... மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால பைக்குள்ள— இருந்த கவிதைப்புத்தகம் காட்டிக்குடுத்துப்போட்டுது......"

என்றான் நீலச்சட்டைக்காரன்.

நல்லூர்க் கோவில் முற்றத்தில்- "கிளாக்கரும் வாத்தியாரும் பேசிக்கொண்டிருந்தார்கள்......

இருவரும் நல்லூர்க்காரர்கள். ஐம்பதைத் தாண்டிய கட்டைகள்.

திலீபன் உண்ணா நோன்பு இருந்தபோது ஒவ்வொரு நாளும் அவன் மேடைக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து அந்தக் கிழட்டு நெஞ்சங்கள் புலிகளோடு ஒன்றிப் போனவை.

இந்தியப்படையும் கூலிகளும் வந்த நாள் தொடக்கம், தங்கள் உணர்வுகளை— எல்லாம் வெளியே கூற முடியாமல், இருவருக்குள்ளாக மட்டுமே மறைவில் பகிர்ந்து கொள்ளும் வழக்கம்.

அது 30-11-1989.

கோவில் மணி ஓசையும், மேளமுமாய்ப் பூசை நடக்கிறது.

'கிளாக்கர்' செல்வாக்குள்ளவர். 'அசோகா கொட்டேல்' வரை செய்திகளைத் திரட்டும் அளவிற்கு அவர் செல்வாக்குப்பாயும்.

எல்லாம் மறைவில் தான்.

"புத்தூரிலை இருந்து திருஞானசேகரன் என்று ஒரு பெடியனைக் கொண்டுவந்து என்ன பாடுபடுத்துறாங்கள் பாவிகள்.........." என்றார் 'கிளாக்கர்'.

நாலு பக்கமும் அவர் பார்த்துக் கொண்டார்.

"சொல்லுங்கோ 'கிளாக்கர்'......... எங்கை? அசோகா கொட்டலிலையே.........? என்று ஆவல் பொங்கக் கேட்டார் வாத்தியார்.

"ஓம் பாருங்கோ......... உதுதான் மாவீரர்களைப்பற்றி எழுதின கையே? எண்டு கேட்டு, உந்தப்பொடியன்ரை கைவிரல்களையெல்லாம் ஊசியாலை குத்தியிருக்கிறாங்கள். பொடியன் துடியாய்த் துடித்திருக்கிறான்......"

வாத்தியாருக்குக் கண்கள் கலங்கிற்று......

"புலியள் போராட்டத்திலை துன்பங்களைத் தாங்குகினம்......... சிலர் அவர்களுக்குத் துணையாக இருந்து— வாற துன்பங்களை ஏற்றுக்கொள்ளுகினம்........ நெஞ்சு வெடிச்சுப் போகும் போலை இருக்கு 'கிளாக்கர்'........" என்று துயரத்தை விழுங்கினார் வாத்தியார்.

'கிளாக்கர்' சொன்னார்—

"எனக்கு உந்தக்கதைகளைச் சொன்னவன் பார்த்துக் கொண்டிருக்கேக்குள்ளையே, மூன்றுமுறை பொடியன் மயங்கி விழுந்துபோட்டானாம்....... அறையெல்லாம் இரத்தமாம்......... 'அசோகா கொட்டல்' இறைச்சிக்கடைபோல இருக்குது. இன்னும் நாலு பொடியங்களைக் காலைக் கையைக்கட்டி நிலத்திலை போட்டு வைச்சிருக்கினம்....... எப்ப தோலுரிப்பாங்களோ தெரியாது" எண்டு சொன்னான் அந்த ஆள்......

கிளாக்கர் நிலத்தில் கிடந்த குச்சால் மணலில் கோடு கிழிக்கத் தொடங்கினார்.

ஒன்றின்மேல் ஒன்றாகக் கிழிந்து கிடந்த அந்தக் கோடுகளில் வாத்தியாருக்கு திருஞானத்தின் உடலே தெரிந்தது.

01-12-1989.

புத்தூரில் ஓடைக்கிராமத்தில் திருஞானம் கட்டிலில் நீட்டி நிமிர்ந்து கிடந்தான்.

"ஓ!" என்று எழும் ஒப்பாரி......... பறை மேளம்......... ஓலத்தோடு ஓலமாய் நாய்களின் ஊளை.

அச்சத்தோடு— மக்கள் வருவதும் போவதுமாய் இருந்தார்கள்.

ஒரு பெரியவர் பக்கத்தில் இருந்த கிழவியைப் பார்த்துச் சொன்னார்—

"நாவாந்துறையில பொடியன்ரை சவத்தைக் கொண்டந்து போட்டிருந்தாங்கள். காலைமிலதான் பேச்சு அடிபட்டுப் போய்ப் பார்த்தனாங்கள். முடங்கிச் சுருண்டு கிடந்தான் பிள்ளை......... உடம்பெல்லாம் காயம்........ உவங்களுக்குத் தலையில இடிவிழ!"

"உங்கினை இருந்துதான் சவத்தைக் கொண்டு வந்தவையே......?" என்று கேட்டாள் கிழவி.

"ஓம்........ ஓம்........ அப்பாவி மக்களைக் கொல்லுறதும் வீதியில போடுறதும் தான்— இந்தியப்படையும் உந்தக் கூலிகளும் வந்து நாம கண்ட நன்மை......... உவங்கள் உருப்படுவாங்களே......? கொலைகாரன்கள்."

பெரியவர் பொருமி வெடித்தார்.

அவர் பார்வை அடிக்கடி அவர் கையிலிருந்த தாள் துண்டிலேயே பதிந்திருந்தது.

மாவீரர் நாள்பற்றி திருஞானம் வெளியிட இருந்த புத்தகத்தில் அவன் எழுதி வைத்திருந்த கவிதை அது.

'தொள தொள' வென்ற குரலில், கிழவர் அதைத் திரும்பத் திரும்பப் படித்தார்.

"இந்த மண்ணின்
அடிமை விலங்கை
உடைத்தெறியக் கிளம்பிய கரங்கள்......
விடுதலைப் பயிரின்
வலுமிகு உரங்கள்......!" ✷

# கிட்லர் ஆட்சியில் கூட இடம்பெறாத அடக்குமுறை தமிழினத்திற்கு எதிராக இடம்பெறுகிறது
## சிறிலங்காப் பாராளுமன்றத்தில் பகிரங்க விமர்சனம்

'உலகில் கிட்லர் ஆட்சியில் கூட நடைபெறாத அடக்குமுறை இங்கு தமிழ் மக்களுக்கு எதிராக இவ் அரசால் நடாத்தப்படுகிறது. சமாதானப் புறாவை ஏந்துவதாக நயவஞ்சக வார்த்தைகள் கூறி வாக்குகளைப் பெற்ற இவ் அரசு, தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது. இன்று உடப்பில் 15 ஆயிரம் தமிழ் மக்கள் – நோயாளிகள், குழந்தைகள், மகப்பேற்று தாய்மார்கள் என்றுகூடப் பாராது உடப்பு திரௌபதை அம்மன் ஆலயத்துக்கு முன்னால் இழுத்து வரப்பட்டு சிறிலங்காப் படையினரால் மனிதாபிமானமற்ற முறையில் சோதனை செய்யப்பட்டனர். முகமூடியணிந்தவர்களே சோதனைகளை மேற்கொள்கின்றனர். பொலிசார் ஏன் மூகமூடி அணிய வேண்டும்.? அவர்கள் பொலிசார் இல்லையென்றால் அப்படி வந்தவர்கள் யார்? எந்தச் சர்வதேசச் சட்டம் இப்படியான சோதனைகளை அனுமதிக்கிறது? உடப்பைச் சேர்ந்த திருமதி. முத்துராஜா எனும் தாய் அவர் மகள் வதனியை முல்லைத் தீவில் உள்ள அவரின் தகப்பனிடம் கூட்டிச் சென்று திரும்பி வந்தபொழுது வவுனியா தடுப்பு முகாமில் ஒன்றரை மாதம் தடுத்து வைக்கப்பட்டனர். உடப்பை வந்தடைந்ததும் பொலிசாரால் கைதாக்கப்பட்டுள்ளனர். இதே போன்று ஒரு சம்பவம் பாலகிருஸ்ணன் என்பவருக்கும் நடந்துள்ளது. இவர்கள் எல்லாம் அப்பாவிப் பொதுமக்கள் என்பதை இப் பாராளுமன்றத்துக்கு உறுதிப்படுத்துகிறேன். பணம் பெறும் நோக்கில் தமிழர்களின் வீடுகள் நள்ளிரவில் படையினரால் பலாத்கார சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகிறது. நாடு முழுவதும் போர் பரவியுள்ளது. வவுனியாவில் போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் வழமைக்கு மாறாக, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த, அங்கு நடைபெறும் விடயங்களை அரைகுறையாகவே பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறிவருகிறார்."

இவ்வாறு சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்துள்ளார். ❑

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யேர்மனிக் கிளை வழங்கும்



நாடகவேளை

தமிழகத்தின் தலைசிறந்த நாடகக் கலைஞர் பங்கேற்கும் நிகழ்ச்சி

தலைக்கோல்

இடம்: Kulturzentrum
Berliner Platz 11
44623 Herne

காலம்: 01 - 03 - 1997
சனிக்கிழமை
நேரம்: 17.00 மணி

பாண்டிச்சேரி நாடகக் கலைஞர்கள் முதன்முதலாக ஐரோப்பாவில்

தெருக்கூத்து

அலங்காரமும் அபிநய விளக்கமும்

நாடகம்- கருஞ்சுழி

ஆக்கமும் இயக்கமும்: பாண்டிச்சேரி வ. ஆறுமுகம்

புனர்வாழ்வுக் கழகம் , யேர்மனிக் கிளை

## தண்ணீர் குடிப்பதற்குக் கூட வசதியில்லை

வவுனியாவில் சிறிலங்கா அரசினால் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பயணிகள் பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கும் குடிக்க குடிதண்ணீர் கூட இல்லை என சிறிலங்காப் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதேபோன்று பயணிகளை பலவந்த அகதியாக்கும் மற்றொரு முகாம் ஒன்று மன்னார் கற்பிட்டியில் சிறிலங்காவால் திறக்கப்பட்டுள்ளதாகவும் சிறிலங்காப் பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ○

## உணவை ஆயுதமாக்குவதில் மற்றொரு சூழ்ச்சி வலை

சிறிலங்கா அரசு, வன்னிப் பகுதியில் உணவை ஆயுதமாக்கித் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் சர்வதேசப் பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டு வருவதை யாவரும் அறிவர். இதில் ஒரு புதிய சூழ்ச்சி ஆரம்பமாகியுள்ளது. சாந்தசோலையில் இருந்து வவுனியா, கிளி-நொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு உணவுகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு கொடுப்பனவுகளை நிறுத்தியுள்ளது. இதனால் பெருந்தொகைப் பணம் கொடுப்பனவாகத் தேங்கிய நிலையில் வாகனச் சொந்தக்காரர்கள் உணவைத் தொடர்ந்தும் ஏற்றிச் செல்ல முடியாததினால் உணவு விநியோகம் மேலும் சீர்குலைந்துள்ளது. ❑


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிமுகம் செய்யும் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை

**தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பத்தாண்டு சேவையின் அனுபவமும், குறிப்பாக 5இலட்சம் மக்களின் இடப்பெயர்வும், அவர்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையில் அம்மக்கள் கழகத்தில் தங்கு நிலையில் இருந்து மாறித்தாமாகச் செயற்பட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் புலம் பெயர்ந்து வாழும் மக்களின் பங்களிப்புடன் மேற்குறிப்பிட்ட திட்டங்கள் பற்றிக் கடந்த களத்தில் பத்திரிகையில் வெளிவந்த ஆக்கத்தின் தொடர்ச்சி**




## வருமான அதிகரிப்புத் திட்டம்:

பின்தங்கிய கிராமங்களில் மக்களின் அன்றாடத் தேவைகளை நியாய விலையில் கொள்வனவு செய்ய வசதி செய்தல்
கள்ளச்சந்தை வியாபாரத்தை ஒழித்தல்
நிறுவனங்களின் வருவாயைப் பெருக்குவதனால் சுயசார்பு நிலையில் செயற்பட வாய்ப்பு
வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பம்

## மனித வள மேம்பாடு

கருத்தரங்குகள், ஆய்வுப்பட்டறைகள், களப்பயிற்சிகள் மூலம் மனித வளத்தின் மேம்பாடு
துறை சார்ந்த அறிவு வளர்ச்சி
சமூக சேவைக்கான விருப்பையும் ஆர்வத்தையும் வளர்த்தல்

## பெண்கள் அபிவிருத்தித் திட்டம்

ஆண்களுக்குச் சமனான பெண்களின் திறனையும் ஊக்குவித்தல்
பெண்களுக்கான வேலைவாய்ப்பு அதிகரிப்பு
சமூகத்திற்குத் தேவையானதை வாங்குவதற்கு வாய்ப்பு
மேம்பாடான வருவாய்
பெண்களின் சுயமரியாதையில் வளர்ச்சி
உழைப்பாளரை இழந்தவர்களை வலுப்படுத்தல்

## பங்காளி நிறுவனப்பலப்படுத்தல்

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவன/ பங்காளர் சேவை வசதிகளில் உயர்ச்சி
மேப்பட்ட முகாமைத்துவம்
செயற்றிறன் வளர்ச்சி
மேம்பட்ட கணக்கியல் முறைமை
நீடித்த நிலை பெறும் தன்மையில் உயர்வு
மேம்பட்ட உள்ளூர் அரசசார்பற்ற நிறுவன அல்லது பங்காளர் ஊழியர் திறன்கள்
மேம்பட்ட கண்காணிப்பு மீளாய்வுத்திறன் நடவடிக்கைகள்
போக்குவரத்து வசதிகளில் வளர்ச்சி

## போசாக்குத் திட்டம்

மிகவும் போசாக்குக் குறைந்த நிலையில் உள்ள குழந்தைகளை போசாக்குள்ளவராக்குதல்
தாய்மாரின் போசாக்கு நிலையிலும் மேம்பாடு
கற்பவதிகள் பாலூட்டும் தாய்மாரின் போசாக்கு வளர்ச்சி
பொதுவான போசாக்கு குறைபாட்டை நீக்குதல்

## நிவாரணப் புனர்வாழ்வு

மனித அடிப்படை வசதிகளை வழங்குதல்
இடம்பெயர்ந்தோர் பராமரிப்பு
பாவனைப் பொருட்கள் வழங்கல்
உடல் உளத்தாககங்க்களுககு ஆறுதல் அளித்தல்
அனர்த்தங்களினால் பிரிந்த குடும்ங்களை ஒன்றிணைத்தல்

## கலை கலாச்சாரம்

பாரம்பரிய கலைகளைப் பாதுகாத்தல்
கலை கலாச்சார நடவடிக்கைகளை மேம்படுத்தல்
கலாச்சார நிகழ்வுகளை ஊக்குவித்தல்
புதிய தொழில்நுட்ப யுத்திகளை இணைத்தல்
கலைஞர்களை ஊக்குவித்தல்

## இலக்கு

1. சுயசார்பு வங்கியை உருவாக்குதல்
2. சமூக சேவையாளர்களை உருவாக்குதல்
3. சமூக பொருளாதார அபிவிருத்தியை உருவாக்குதல்
4. சமூகசேவை அமைப்புகளை வலுப்படுத்தி சுயமாக இயங்க வைத்தல்
5. சமூகசேவை அமைப்புகளுக்கிடையிலான உறவுகளைப் பேணல்.
6. பயனாளிகள் பங்காளிகளாகச் செயற்படும் செயற்திட்டங்களை வளர்ச்சியுறச் செய்தல்
7. மனித வள மேம்பாட்டை உருவாக்குதல்

## பத்து ஆண்டுகளை கடந்து விட்ட பணியில் பங்காளி நிறுவனங்களை இணைத்துச் செயற்படும் சேவையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

நிவாரணம், புனர்வாழ்வு அபிவிருத்தி என்பவற்றை அடிப்படை நோக்காகக் கொண்டு சமூகநலனில் முன்னேற்றத்தையும், மனிதவள மேம்பாட்டையும் சுயசார்பு நிலையை ஏற்படுத்தலையும் குறிக்கோளாக வைத்து சமூக பொருளாதார அபிவிருத்தியைக் கொண்ட சமுதாயத்தை ஏற்படுத்துதலை இலக்காக வைத்து கிராமிய மட்டத்தில் செயற்படும் 07 பேரைக் கொண்ட சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுக்களை அமைத்து அவர்களை கல்வி, சுகாதாரமும் போசாக்கு வீடமைப்பு, விவசாயம், தொழில், புனர்வாழ்வு, பொது விடயங்கள என செயற்படும் வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்தி தனது 10 ஆண்டுகளைக் கடந்துவிட்ட பணியில் வெற்றியடைந்து மகிழ்வுடனும் நிறைவுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிமிர்ந்து நிற்கின்றது.

### இந்த நிலையில் 10 ஆண்டுகளைக் கடந்துவிட்ட பணியில்

* இடம்பெயர்ந்தோர் நலன்புரித்திட்டம்
* நிவாரணப் புனர்வாழ்வுத்திட்டம்
* வீடமைப்புத்திட்டம்
* போசாக்குத்திட்டம்
* சுயசார்புத் தொழில் முயற்சித்திட்டம்
* தொழில் துறை நிலையத்திட்டம்
* பல்துறைப் பயிற்சித்திட்டம்
* முன்பள்ளி மேம்பாட்டுத்திட்டம்
* உழைப்பாளரை இழந்த பெண்களுக்கான திட்டம்
* வலுவிழந்தோருக்கான திட்டம்
* சிறுவர் நலத்திட்டம்
* ஆதரவற்ற சிறுவர் பராமரிப்புத்திட்டம்
* மரநடுகைத்திட்டம்
* வருமான அதிகரிப்புத்திட்டம்
* குடிநீர் வழங்கல் சேவைத்திட்டம்
* சுகாதார சேவைத்திட்டம்
* 1000 குழந்தைகள் தத்தெடுக்கும் திட்டம்
* கிராம மேம்பாட்டுத் திட்டம்
* புத்தொளித் திட்டம்
* எழுச்சி உதயத் திட்
* வறிய மாணவர் கல்வித்திட்டம்
* விவசாய சேவைத்திட்டம்
* ஆய்வுப் பட்டறைகள்
* கூட்டுப் பண்ணைத்திட்டம்
* சமூக நலத்திட்டம்
* மனிதவள மேம்பாட்டுத்திட்டம்
* சமூக அபிவிருத்தித் திட்டம்
* கிராமியக் குழந்தைகள் திட்டம்
* கல்வீச் சேவைத்திட்டம்

எனப் பலதிட்டங்களை செயற்படுத்தி வெற்றி கண்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் புதிய ஆண்டில் புனிதமான சேவையில் பங்காளி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் புதிய முயற்சியை ஆரம்பித்து ஒரு குடை நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.

### தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனங்கள்

#### யாழ்ப்பாண மாவட்டம்

1. வடக்கு – கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம்
2. யாழ்ப்பாண அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம்
3. சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம்
4. முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம்.
5. உழைப்பாளரை இழந்த பெண்களுக்கான வாழ்வு நிலை.
6. வலுவிழந்தோருக்கான வாழ்வு நிலையம்
7. போசாக்கு புனர்வாழ்வு நிலையம்.
8. வாழ்வகம்
9. அறிவு வளர்ச்சி நிலையம்.
10. வெண்புறா தொழில்நுட்ப நிறுவனம்
11. சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனம்
12. சமுதாய முன்னேற்றக் கழகம்.

#### கிளிநொச்சி மாவட்டம்

1. வடக்கு – கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்
2. கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம்
3. கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம்
4. அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம்
5. கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக்கழகம்
6. கிராமியப் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம்
7. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
8. பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம்
9. பூநகரி – முழங்காவில் அபிவிருத்தி நிறுவனம்.

### அன்பார்ந்த தமிழ் மக்களே!

**சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம் இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பணம் அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். எனவே தாமதியாது உதவுங்கள். மேலதிக தொடர்புகளுக்கு**

தமிழர் புனர்வாழ்வுக்கழகம்(பிரித்தானிய கிளை)
Registered Charity No: 1010029
79 Hoe Street, Walthamstow, London E17 4SA
தொலைபேசி இல: 0181 - 520 5876

### தமிழர் புனர்வாழ்வுக்கழகங்களின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்

**TRO** Botswana:Ph/Fax: (267) 309 139
**TRO** Canada: Ph: (1416) 661 6933
**TRO** Denmark: Ph: (4597) 223 647
**TRO** France: Ph((331 46) 489 850
**TRO** Germany: Ph/Fax: (4921) 665 8508
**TRO** U.K. Ph: 44181 520 5876
**TRO** Italy: PH; (39 91) 636 1454
**TRO** Holland Ph: (3172) 644 442
**TRO** New Zealand ;Ph: (649) 537 0258
**TRO** Norway Ph: (47 22) 646 592
**TRO** South Africa Ph: (27 471) 310 213
**TRO** Sweden Ph: (4686) 870 649
**TRO** Switzerland Ph: (41 41) 260 8398
**TRO** U.S.A. Ph: (0 1 301) 937 3097
**TRO** Australia:Ph:/Fax: (613) 9800 3899

# போரும் பொருண்மியமும்

## தமிழீழ மீன்பிடித்துறை

**உலக உணவு ஸ்தாபனத்தின் (FAO) நூற்றாண்டுக் கொண்டாட்டங்களில், தமிழீழ நெற்செய்கையாளர் சிறந்த நெற் செய்கையாளரென்றும், பிலிப்பைன்ஸ் நாட்டவர் சிறந்த மீன்பிடியாளரென்றும், தாய்லாந்து நாட்டவர் சிறந்த பண்ணையாளர் என்றும் கௌரவிக்கப்பட்ட செய்தியைப் பார்க்கும் போது, ஏன் தமிழீழ மீனவர் ஒருவரால் சிறந்த மீன்பிடியாளர் என்ற விருதைப் பெறமுடியாமல் போனது என்ற கேள்வி எழுந்து கொண்டே இருக்கிறது.**

அதற்கான விடையை மிக இலகுவாகவே கூறிவிடலாம். அது, தமிழீழ மீனவர்களின் மீன்பிடித்தொழிலுக்கான உரிமை சிறிலங்கா அரசாங்கத்தால் மிலேச்சத்தனமாக மறுக்கப் படுகின்றது என்பதேயாகும்.

தமிழீழ மக்களுக்கு மீன்பிடித் தடை நடைமுறையிலிருக்கிறது. தடையை மீறி கடலில் இறங்கினால், சிறிலங்காப் படையினரால் வெட்டியும் கொத்தியும் சுடப்பட்டும் கொல்லப்படுகின்றார்கள். அத்துடன் அவர்களின் படகு, தொழில் உபகரணங்கள் யாவும் அழித்தொழிக்கப்படுகின்றன. இதை, உலக உணவு ஸ்தாபனமும் ஐக்கிய நாடுகள் சபையும் ஈழத்தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறலாகப் பிரகடனப் படுத்த வேண்டும்.

இந்த வகையில் நாம், தமிழீழ மீனவர்களையும் அவர்களின் மீன்பிடித் தொழிலையும் இக்கட்டுரையில் சிறிது விபரமாகப் பார்ப்போம்.

தமிழீழத்தின் கடற்பரப்பு, தென்தமிழீழப் பகுதியான பொத்துவிலில் இருந்து வட தமிழீழச் சிலாபம் வரை எல்லையாகக் கொண்டு மிகப்பரந்து விரிந்து காணப்படுகின்றது. இந்தக் கடற்பரப்பிலிருந்து நாங்கள் கூடுதலான மீன் உற்பத்தியையும் அதனோடு சம்பந்தப்பட்ட கடற்றொழில் உற்பத்திகளையும் பெற்றுக் கொள்ள முடியும். அதனால், சுதந்திர தமிழீழத்தைக் கட்டியெழுப்பும் பணியில் மீன்பிடித்துறை மிக முக்கிய பங்கெடுத்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில், விவசாயமும் மீன்பிடித்தொழிலுமே பிரதான உணவு உற்பத்தித் தொழிலாக தமிழீழத்தில் திகழ்கின்றது.

மீன்பிடித்தொழிலை தமிழீழத்தில் விஸ்தரித்து முன்னேற்றும் முகமாக, முக்கியமான சில செயற்பாடுகளை நாம் இங்கே பார்ப்போம்.

மீனவத்தொழிலோடு தொடர்புடைய செயற்பாடுகளை,

1. ஆழ்கடல் மீன்பிடித்தல்
2. பரவைக்கடல் மீன்பிடித்தல்
3. நன்னீர், உவர்நீர் மீன்பிடித்தல்
4. மீன் பண்ணைகளை நடாத்தல் - அதன் தொழில் நுட்பங்களை விருத்தி செய்தல்
5. மீனுணவு, கடல் அட்டை, கருவாடு பதனிடல், மீன் புகையூட்டல் போன்றவற்றை ஊக்குவித்தல்
6. மீன்பிடி துறைமுகங்களை அமைத்து விருத்தி செய்தல்
7. பிடித்த மீன்களை பதனிடல், குளிரூட்டல், களஞ்சியப்படுத்தல், சந்தைப் படுத்தல்
8. முத்து வளர்த்தல், முத்துக்குளித்தல் போன்றவற்றிற்கான தொழில் நுட்பங்களை ஆராய்ந்து அவற்றை ஊக்குவித்தல்
9. கடற் தாவரங்களை விருத்தி செய்தல்
10. மீனவர்களின் சமூக வாழ்வை மேம்படச்செய்தல்
11. மீன்பிடித்தல் தொடர்பான பயிற்சியளித்தல், அவை சார்ந்த சட்டங்களை இயற்றல்

எனப் பிரிக்கலாம்.

### ஆழ்கடல் மீன்பிடித்தல்

தென்தமிழீழக் கடற்பரப்பு, வடதமிழீழக் கடற்பரப்பினூடு ஒப்பிடும் பொழுது மிகவும்




ஆழம் வாய்ந்த கடற்பரப்பைக் கொண்டது. இதையே நாம் ஆழ்கடல் மீன்பிடித்தலுக்குரிய பிரதேசமாகக் கருதுகிறோம். அதாவது அது, பருத்தித்துறை முனைக்கடலிலிருந்து பொத்துவில் அறுகம் குடா வரையிலான பகுதியாகும். இதுவே பிரதான புரதச்சத்துள்ள சூரை, வஞ்சிரன், அறக்குளா, சுறா போன்ற மீன்களைக் கூடுதலாகப் பிடிக்கும் இடங்களாகும். இவற்றை நீண்ட தூண்டற் கயிறுகளைக் கொண்டோ அல்லது சுற்றிவளைத்து பிடித்தல் முறையிலோ அல்லது இழுவைக் கப்பல்களைப் பாவித்தோ பிடித்துக் கொள்ளலாம். இவற்றிற்குரிய முக்கிய இடங்களான பருத்தித்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை, வாகரை, கல்முனை, அறுகம்குடா போன்ற இடங்களைத் துறைமுகங்களாக பாவிக்கலாம். அல்லது இங்கே தாய்க் கப்பல்களை(Mothership)ப் பாவித்து, அவற்றை நடுக்கடலிலே தங்கவைத்து மற்றைய மீன்பிடிக் கலங்களுக்கான உணவு, எரிபொருள், மீன்பிடித்தொழிலாளர்களின் ஓய்வு என்பவற்றிற்கு உறுதி செய்வதோடு, சிறிய மீன்பிடிக் கப்பல்களினால் கொண்டு வரப்படும் பிடித்த மீன்களைப் பதனிட்டு, குளிரூட்டி வைப்பதற்கும் அவற்றைச் சந்தைப்படுத்த பல்வேறு பகுதிகளுக்கு அனுப்புவதற்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும். இது ஒரு நடைமுறைச் செலவு கூடிய தொழிலாகும். ஆனால், ஒரு தொடர்ச்சியான பெருமீன்களைப் பிடிக்கும் தொழிலை ஊக்குவிப்பதால், சூரை (Tuna) போன்ற மீன்களை உலக சந்தையில் விற்று நிரம்ப அந்நியச் செலவாணியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொழிலாகச் செயற்படுத்த முடியும். இன்று என்ன நடக்கிறதெனில், தமிழீழ மீனவரினால் இத்தொழில் செய்யப்பட பல தடைகள் சிறிலங்கா அரசினால் ஏற்படுவதால், அந்நிய நாட்டு மீன்பிடிப்பாளர்கள் குறிப்பாக கொரியா, தாய்வான், யப்பான் போன்ற நாடுகளிலிருந்து பாரிய மீன்பிடிப் படகுகளில் வந்து எமது வளங்களை அள்ளிச் செல்கின்றனர்.

ஆக்கம் - **தேவராஜன்** -

**(தொடரும்)**


**ABOUT THE CONFERENCE**

The conference is aimed at addressing the immediate and future energy requirements and to consider alternative sources of energy, relevant technology and energy economics pertaining to the development objectives and programmes of Tamil Eelam. It is expected that the topics will be considered both from socio-political and technical /economic viewpoints.




**PRESENT BACKGROUND AND IMMEDIATE ENERGY SCENARIO:**

The post October 1995 onslaught on the Tamil civilian people, by overwhelming Government military forces equipped with modern weaponry has also resulted in a diabolical and systematic destruction of the economic and social infrastructure of their homelands in the Northern and the Eastern provinces of Sri Lanka.

The energy requirements in the first place will be determined more by the element of energy input that is considered necessary to meet the urgent and primary economic demands of a devastated society to rebuild roads, houses, schools, hospitals etc., as well as for rudimentary domestic and public lighting and transportation; and to regenerate low-tech labour intensive industry.

**THE FUTURE PROSPECTS:**

Following a political settlement, the energy growth function of Tamil Eelam in the further stages of its development will have to take proper account of both the opportunities presented as well as the constraints on economic growth that result from having to make hard choices from competing social and economic policy options.



Date & Venue : 16 th March 1997 (Sunday) at Imperial College (university of London)

**REGISTRATION FORM**

Title:....................

Surname:..........................................................

First name:.......................................................

Address:...........................................................

..........................................................

..........................................................

Tel.:.............................. Fax:........................

REGISTRATION FEE £15.00
Students and Senior Citizens £10.00
(Including buffet lunch)

Cheques should be made payable to "TEEDOR"

Completed forms to be returned to:

Conference Co-ordinator
TEEDOR
Eelam House
202 Long Lane
London SE1 4QB

Tel.: 0181 365 0249
E-mail: sri@swanmews.demon.co.uk

Closing date for registration 7th March 1997

www.tamilarangam.net



# உலக அரங்கு

## மத்தியகிழக்கு:

# "ஹெப்ரன் நகரம் விடுவிக்கப்பட்டது"

இஸ்ரேலியர்களுக்கும், பாலஸ்தீனியர்களுக்குமிடையே 1993ல் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் முள்ளாய் நெருடிக் கொண்டிருந்த ஹெப்ரன் நகரம் பற்றிய விடயத்தில், சனவரி 15ம் திகதி ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பது, பாலஸ்தீனியருக்கும் ஏனைய சமாதான விரும்பிகளுக்கும் பெரு மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நெட்டன்யாகுவுக்கும், பாலஸ்தீனிய விடுதலை அமைப்பின் தலைவர் யாசர் அரபாத்திற்கும் இடையில் அதிகாலை வேளையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி, கடந்த முப்பது வருடங்களாக ஆக்கிரமிக்கப்பட்ட ஹெப்ரன் நகரின் 80 வீதமான பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் வெளியேறியுள்ளது.

மத்தியகிழக்கு சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்டிருந்த தேக்க நிலையை, இவ் ஒப்பந்தம் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துள்ள போதும், பல முக்கியமான கேள்விகள் இன்னமும் விடையளிக்கப்படாமலேயே உள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

உதாரணமாக ஜெருசலம் நகரின் எதிர்காலம், பாலஸ்தீனியப் பிரதேசங்களுக்கான எல்லைகள் என்பனவும் சிக்கல் நிறைந்த விடயங்களாக விளங்குகின்றன.

தற்போதைய ஒப்பந்தத்தின்படி, மேற்குக் கரையின் கிராமப்பகுதிகளில் உள்ள இராணுவத்தினரும் மூன்று கட்டங்களில் மீள எடுக்கப்பட உள்ளனர். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஆறு வாரங்களில் ஆரம்பமாகவுள்ள இந்நடவடிக்கை 1998 ஆகஸ்ட் மாதத்தில் முற்றுப்பெறும்.

இஸ்ரேலியருக்கும், பாலஸ்தீனியருக்குமிடையில் பேச்சுவார்த்தை விடயமாக நிலவிவந்த தேக்கநிலையை உடைப்பதில், யோர்தான் நாட்டின் மன்னரான உசேன் முக்கிய பங்கெடுத்திருந்தார். முன்னைய ஒப்பந்தத்தின்படி, 1997 செப்ரம்பர் மாதத்தில் இஸ்ரேலியர் வெளியேறுவதாக இருந்தது. ஆனால், நெட்டன்யாகு பிரதமராக வந்ததனை அடுத்து இஸ்ரேல் இவ்விடயத்தில் தயக்கம் காட்டியது.

நிலைமையின் ஆழத்தை உணர்ந்து கொண்ட மன்னர் உசேன், தனது தனிப்பட்ட உலங்கு வானூர்தியில் சடுதியாக காசாப் பகுதிக்குப் பறந்து சென்றார். அங்கு ஏழு மணித்தியாலங்களாக இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் இறுதியில், இஸ்ரேலிய வெளியேற்றத்தை ஒரு வருடத்தால் பின்போடுவது எனும் உசேனின் பிரேரணையை அரபாத் ஏற்றுக்கொண்டார்.

இவ்ஒப்பந்தம் கைகூடுவதற்கு அமெரிக்காவின் விசேட பிரதிநிதியான **டென்னிஸ் றோஸ்** அளித்த பங்களிப்பும் முக்கியமானதாகும். எனினும் பேச்சுவார்த்தையில் நிலவிவந்த தேக்கநிலை காரணமாகச் சலிப்படைந்த றோஸ், வாஷிங்டன் திரும்பவிருந்த நேரத்திலேயே மன்னர் உசேன் ஆபத்பாந்தவனாகத் தோன்றி, நிலைமையைச் சீராக்க உதவினார். யோர்தான் மற்றும் அமெரிக்காவின் அழுத்தங்கள், கைமுறுக்கல்களுக்கு மத்தியிலேயே இவ்ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது எனலாம்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதனை அடுத்து, றோஸ்ஸின் பங்களிப்பைப் பாராட்டிய இஸ்ரேலியப் பிரதமர், "ஒலிம்பிக் மரதன் ஓட்டப் போட்டிக்கான தங்கப்பதக்கம்" அவருக்கு வழங்கப்படல் வேண்டும் என நகைச்சுவையுடன் குறிப்பிட்டார்.

இதேவேளை, இஸ்ரேலியருக்கும் பாலஸ்தீனியருக்குமிடையில் நீண்ட காலமாக நம்பிக்கையீனம் நிலவிவருவதனால் இரு தரப்பினரையும் திருப்திப்படுத்தும் வண்ணம், அமெரிக்கா சில உத்தரவாதங்களையும் அளித்துள்ளது.

இதன்படி, பாலஸ்தீனியக் கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்வதும், பாலஸ்தீனியப் பிரதேசங்களான மேற்குக் கரை மற்றும் காசாப் பகுதிகளுக்கிடையில் ஒரு பாதுகாப்பான பாதை திறக்கப்படுவதும், பாலஸ்தீன விமான நிலையம் திறக்கப்படுவதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதே போன்று, இஸ்ரேலியரைக் கொலை செய்தவர்கள் எனக் கருதப்படுகின்ற பாலஸ்தீனியர்களை இஸ்ரேலுக்குக் கையளிப்பதாகவும் ஹமாஸ், மற்றும் இஸ்லாமிய ஜிகாத் குழுக்களை நிராயுதபாணிகளாக்கி தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவது என்றும், இஸ்ரேலை அழித்தொழிப்பது என பாலஸ்தீனிய சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்களை அகற்றுவது என்றும்

**- சாள்ஸ். தேவசகாயம் -**

பாலஸ்தீனியர்களிடம் உறுதி எடுக்கப்பட்டது.

நோர்வே அரசாங்கத்தால் 1993 இல் ஒழுங்கு பண்ணப்பட்ட ஒஸ்லோ ஒப்பந்தத்தில், இஸ்ரேல் 1967 இல் கைப்பற்றிய நிலப்பகுதியை சமாதானத்திற்காகத் திரும்பக் கையளிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், சமாதானத்திற்காக நிலத்தைத் திரும்பக் கொடுக்கமாட்டேன் எனக் கூறி, கடந்த மே மாதம் தேர்தலில் வெற்றியூட்டிய நெட்டன்யாகு, கடந்த ஆறு மாதங்களாகப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடித்து வந்தார். இத்தேக்க நிலையால் இஸ்ரேலியருக்கும் பாலஸ்தீனியருக்குமிடையில் கெடுபிடி நிலை நிலவி வந்தது.

இஸ்ரேலைப் பொறுத்தவரை பழமைவாத, யூத தீவிரவாதிகள் பலர் ஹெப்ரன் நகரில் வசித்துவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹெப்ரன் உட்பட, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள 144,000 யூதக் குடியேற்றவாசிகள் நெட்டன் யாகுவின் நிரந்தர ஆதரவாளர்களாக விளங்கி வந்தனர். இறுதியாக நெட்டன்யாகு, ஹெப்ரன் மட்டுமல்ல ஏனைய கிராமப்புறப் பகுதிகளில் இருந்தும் இராணுவத்தினரை மீள எடுப்பதற்கு ஒத்துக்கொண்டமை, இக்குடியேற்றவாசிகள் மத்தியில் மனக்கசப்பை ஏற்படுத்திவிட்டது. நெட்டன்யாகு இறுதியில் தம்மைக் கைவிட்டுவிட்டார் எனும் உணர்வு இவர்கள் மனதைப் பாரமாக்கிவிட்டது.

இந்த ஹெப்ரன் ஒப்பந்தம் இஸ்ரேலிய அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டபோது சார்பாக 11 வாக்குறுதிகளும், எதிராக 7 வாக்குகளும் கிடைத்தன. அமைச்சரவையில் உள்ள பழமைவாதிகள், நெட்டன்யாகுவின் முடிவைக் கடுமையாக விமர்சித்தனர். இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் மெனாகம் பெகினின் மகனான **பென்னி பெகின்**, தனது எதிர்ப்பைக் காட்டும்படியாக அமைச்சர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்தார்.

ஆனால், பாலஸ்தீனிய அரசாங்க அமைச்சரவையில் இவ்ஒப்பந்தம் பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது. இதேபோன்று, இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போதும், மிகப் பெரும்பான்மையோர் இவ்ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதாவது, 87 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்த அதேவேளை, 17 பேர்கள் மட்டுமே எதிராக வாக்களித்தமை கவனிக்கத்தக்கது.

ஹெப்ரன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின், நான்கு நாட்கள் கழித்து பாலஸ்தீனிய அதிகாரசபையின் தலைவர் யாசர் அரபாத்திற்கு ஹெப்ரனில் மாவீரருக்குரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. 1965 இல் ஹெப்ரனுக்கு விஜயம் செய்ததன் பின்பு, அரபாத்தின் முதலாவது வருகை இதுவாக அமைந்திருந்தது. எனினும் சமாதானத்துக்கான ஒலிவ் மரக்கிளையை, ஹெப்ரனில் உள்ள யூதர்களுக்கு இவர் நீட்டத் தவறவில்லை.


பாலஸ்தீனியக் கொடிகளை அசைத்து, தன்னை வரவேற்ற பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனியர்களுக்கிடையில் நின்று உரையாற்றிய அரபாத், **"ஹெப்ரன் ஒரு விடுவிக்கப்பட்ட நகரம் என நான் பிரகடனப்படுத்துகிறேன்"** எனப் பெருமையுடன் கூறினார்.

**"தற்போது, இந்த ஹெப்ரன் ஒப்பந்தத்தின் மூலம் நாம் முழு இஸ்ரேல் தேசத்துடனும் சமாதானம் செய்துள்ளோம்: இஸ்ரேல் பாராளுமன்றம் பெரும்பான்மை வாக்குகளால் இவ்ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ளமையானது, மத்திய கிழக்கில் புதிய நிலைமை ஒன்று உருவாகியுள்ளது என்பதைக் காட்டுகிறது"** எனக் குறிப்பிட்டார். குறிப்பாக இடதுசாரித் தொழிலாளர் கட்சியினர் மட்டுமின்றி, சமாதானத்துக்காக நிலத்தைப் பரிமாற்றம் செய்வதற்கு ஆதரவு தெரிவிக்காத வலதுசாரி மற்றும் சமயக்கட்சிகளும் கூட இவ்ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை, அரபாத் உட்பட பல பாலஸ்தீனியர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

ஹெப்ரனில் உள்ள 20 வீத நிலப்பகுதியைத் தவிர்த்தால், மேற்குக்கரைப்பகுதியில் உள்ள 8 நகரங்கள் தற்போது பாலஸ்தீனியரின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன. இந்நகரங்களை உள்ளடக்கிய பகுதி, மேற்குக்கரைப்பகுதியின் மொத்த நிலப்பரப்பில் 7 வீதத்தை மட்டுமே உள்ளடக்குகிறது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஏனைய 24 வீதமான பகுதியில் பாலஸ்தீனியர் உள்ளூர் நிர்வாக வேலைகளைக் கவனிக்கும் அதேவேளை, இஸ்ரேலியர் பாதுகாப்புக்குப் பொறுப்பாக உள்ளனர். இப்பகுதியில் 465 பாலஸ்தீனியப் பட்டினங்களும், கிராமங்களும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யூதக் குடியேற்றங்களையும், பாலஸ்தீனக் நகரங்களையும் உள்ளடக்கிய மீதமான 69 வீத நிலப்பகுதியின் பாதுகாப்பு, இஸ்ரேலியரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகின்றது.




பாலஸ்தீனியரைப் பொறுத்தவரை மேற்குக்கரைப் பகுதியின் 80வீதம் அல்லது அதற்குக் கூடுதலான நிலப்பரப்பு தமது கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என விரும்புகின்றனர்.

1988 ஆகஸ்டில் 80 வீதமான பகுதிகள் தமது ஆழுமையின் கீழ் வரும் என பாலஸ்தீனியர் எதிர்பார்த்தாலும், 50 வீதமான பகுதிகளை மட்டுமே இஸ்ரேல் விட்டுக்கொடுக்கும் என இஸ்ரேலிய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஹெப்ரன் நகரின் மொத்தச் சனத்தொகையில் இஸ்ரேலியர் தொகை 0.4 வீதமாக மட்டும் இருந்தபோதும், வரலாற்று மற்றும் சமயக்காரணிகளால் ஏனைய ஏழு நகரங்களைப்போல முழு இராணுவத்தினரையும் மீள எடுக்க இஸ்ரேலிய அரசினால் முடியாமல் உள்ளது. யூதவம்சம் தோன்றக் காரணமாக இருந்த ஆபிரகாமின் கல்லறை ஹெப்ரனில் உள்ளதாலும், இதனைச்சுற்றி 450 பழமைவாத யூதர்கள் வாசிப்பதாலும், இப்பகுதிகளை அடக்கிய 20 வீதமான பிரதேசத்தில் ஒவ்வொரு இஸ்ரேலியர்களுக்கும் பாதுகாப்பாக தற்போது நான்கு இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். அதேவேளை, ஆபிரகாமே பாலஸ்தீனியரின் தந்தையாக விளங்குவதாலும் ஹெப்ரனில் இவர்கள் தொகை 120,000 ஆக இருந்ததாலுமே இந்த சிக்கல் நிலை ஏற்பட வேண்டியதாகி விட்டது.


எது எப்படியிருப்பினும், "பிற்காலத்தில் பாலஸ்தீனியருக்கு சுதந்திர அரசு ஒன்றை நிறுவுவதற்கு இந்த **ஹெப்ரன் ஒப்பந்தம்** வழி சமைப்பதாக அமைகிறது" என யாசர் அரபாத் நம்பிக்கை தெரிவித்துள்ளார். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லையிற்..... கருகிய பூக்களுக்காக!




முல்லை நம் மண்ணிலே மூண்ட சமர்தனில்
பல்லையிழந்தது பௌத்தசிங்களம்!
வெல்லமுடியுமோ? விடுதலைப்புலிகளை
வேண்டாம் இனியென விரைந்தது ராணுவம்!
கல்லை விழுங்கிய கருநாகம் போலக்
கண்கள் பிதுங்கக் கலங்கிற்று கொழும்பு!
இல்லை நமக்கினி இடமென எண்ணி
இரைந்தன எம்தமிழ் எதிரிகள் வாய்களே!

அடிபட வீழ்ந்தும் அஞ்சி யடங்கி
அரைகுறையாய்ச் சிதைந்தும்
மடியினில் ஏறிய செல்லுடன் குண்டுடன்
மண்ணதிலே சரிந்தும்
குடிகெட வீதியிற் கூவியெழுந்தலை
கூட்டமெனத் திரிந்தும்
இடிபடும் நாளது இன்றுடன் போனது
என்று கொள்வாய் தமிழா!

பொடிபடு வோமெனப் போரினை முடுக்கிப்
போய்ப் பல ஆயுதங்கள்
கடுகதியில் அவர் காசினி நாடெலாம்
கடன் பட்டு வாங்கி வந்தும்
அடிபடும் புலிகளின் ஆத்மிக வலிமையின்
தாக்குதல் தாங்க அஞ்சி
அடிதலை பட அவர் ஓடுதல் பாரடா
அரக்கர்கள் அழிதல் திண்ணம்!

உறுமியே எங்களின் உறுதியைக் கொன்றிட
உயரத்திற் பறந்து வந்த
கருடன்கள் பருந்துகள் கெடுதி செய்வான்படை
கருகியே வீழ்தல் கண்டோம்!
பொறுமையாய்த் தன்படை நகர்த்தியே பாவியர்
பாசறை தகர்க்கும் எங்கள்
தருமத்தின் தலைவனைத் தமிழரின் கண்ணனைத்
தலைதாழ்த்தி வாழ்த்திடுவோம்!

வெடிகளைக் கையினில் ஏந்திய பெடிகளின்
வெறித்தனம் என்று சொல்லி
துடித்தனம் கொண்டவர் துற்றிய வார்த்தைகள்
தேய்ந்தன காற்றினிலே!
படிகளைத் தாண்டியோர் படையெனத் திரண்டும்
பழந்தமிழ் வீரங்கண்டு
வடியடா புதுக்கலை வழங்கடா உன்பலம்
வாழ்த்தடா புலிகள் வாழ!

அரசியற் தலைமையை அங்கீ கரித்திட
அவனியிற் தமிழரெல்லாம்
குரலினைக் கொடுத்தொரு கொடியுடன் திரண்டிடக்
கூடிடும் நாளிதன்றோ!
முரசினைக் கொட்டிடு முழுப் பேரும் கேட்டிட
முகவரி பெற்றோமென்று
உரமெனத் தம்முயிர் உடமைகள் தந்திடும்
உயர்ந்தவர் தாள் பணிவோம்!

கொடி அது வானிலே உயர்வதும் நமதுமண்
குளிர்தலும் நன்றுணர்வாய்!
விடிவினில் நம்மவர் விதியை வென்றோமென
விழிகளை விரித்தல் காண்பாய்!
'எடி! இனிப் போரினில் எது பயன்?' என்றொரு
அடிக்குரல் சிங்களத்தில்
அடிக்கடி எழுவதும் ராணுவம் அசைவதும்
அறிந்தொரு எழுச்சிகொள்வாய்!

கொடியவர் போயினர் கூடடி பாடடி
கோலாட்டம் கும்மியென்றும்
நடிகர்கள் கலைஞர்கள் நாட்டியமேதைகள்
நவின்கலை இயற்றல் காண்பாய்!
ஒடியலும், குரக்கனும், ஊரப்பம் தோசையும்
உறுகடல் மீன், றால், நண்டும்
கடிபடும் இடிபடும் ஓசைகள் மீளவும்
காதினில் வீழ்தன்றோ!

- பங்கயமணாளன் -

www.tamilarangam.net





# உங்கள் கருத்துக்கள்

## இப் படத்தில் தோன்றும் சிறுமியின் உணர்வலைகள் பற்றிய வாசகர்களின் எண்ண அலைகள்



அதிர்ச்சியா? சோகமா? உள்ளக்குமுறலா?
இதனையும் மிஞ்சி இன்னும் சில உள்ளன
இதனை கவனிக்குக.
“பயப்பீதியா? அகதியாகிய நிலையா?
உறவிழந்த துயரா? மனப்பயமா ........?

ஒருவிரல் குவிந்து சூப்பிய - குழந்தாய் நீ
இருகைகூப்பி நிமிர்வாய் - ஒரு நாள்
தலைசீவ மறந்தாய் நீ இன்று - எம்
தலைவன் அதை சொல்வான் - உனக்கு
விழிநொந்து கண்ணீரை விடாதே
விரைவாக தமிழீழம் மலரும்

துரை சிவபாலன்
பலெர்மோ, இத்தாலி

அன்பான ஆசிரியர் குழுவிற்கு,

களத்தில் பத்திரிகை தனக்கே உரித்தான நடையில் புதுமெருகோடு பவனி வருவது கண்டு அக மிக மகிழ்வு. மேன்மேலும் வளரவேண்டும் என்பது எமது அவா.
நிற்க, வாசகர்களை வாசிப்பதுடன் நிறுத்திவிடாது அவர்தம் சிந்தனையோட்டத்தினையும் தூண்டிவிட நீங்கள் எடுத்த புதுமுயற்சி பாராட்டுதற்குரியது.

**சினம்**

சுட்டெரி சுடர் விழியில் சீ எனும் சினம்
இழப்பதற்கு இங்கினி ஏதுமில்லை
என்றோர் இறுமாப்பு
"சிங்களத் திமிர் முற்றிலும் தீ மூட்டிப்
பொசுக்கிடப் புறப்படுகிறேன்!
வெளித்தேசத்திலிருக்கும் அண்ணாமார்களுக்கும்
ஒரு விண்ணப்பம்!
துணிவிருந்தால் கையசைத்து
விடை கொடுங்கள்."

- மு.கணேசன் (இங்கிலாந்து)

### தலைவர் தரிசனம்

நெஞ்சினிலே உனக்குமோர் அதிர்ச்சியேன் கண்ணே?
வஞ்சகரைக் கொல்லாமல் நாம் வாழ்வதால்தான் அண்ணே!
கண்களிலே காணுமோர் சோகமேன் அம்மா?
பெண்களையே கெடுத்துவரும் "ஆமி" யால்தான் ஐயா?
உள்ளத்திலே கடலலைபோல் குமுறலேன் தங்காய்?
வள்ளத்திலே கடற்புலிகள் வரும் சத்தஒலிதான் அக்கா!
வாழ்வினிலே உனக்கிருக்கும் ஆசையெது செல்வமே?
சாகுமுன் தமிழீழம்! அதற்குமுன் தலைவரின் தரிசனம்.

- நம்பியார்

### வாசகர் கவனத்திற்கு!

பிரித்தானியா தவிர்ந்த ஏனைய நாடுகளில் இருக்கும் வாசகர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, எமக்கு ஆக்கங்கள் கிடைக்க வேண்டிய கால எல்லையை நீடிக்கின்றோம். மேலும் உங்களின் ஆக்கங்கள் அனைத்தையும் பத்திரிகையில் கேட்கப்பட்டிருக்கும் விதிகளுக்கு அமைய எழுதுங்கள்.

உங்களின் கடிதங்கள், கவிதைகள் அனைத்தையும் இடவசதியின்மையால் பிரசுரிக்க முடியவில்லை. ஆனாலும் ஆக்கங்கள் அனுப்பியோரின் பெயர்களை இயன்றவரை பிரசுரிக்கின்றோம்.

கௌதமி - பிரித்தானியா , எம். ரதி - பிரித்தானியா
ஆ. செந்தூரன் - இத்தாலி, க. ஆதவன்- இத்தாலி
மாலதி பத்மநாதன் - பிரித்தானியா, கமலேந்திரன் - பிரித்தானியா ,
வள்ளியூர் சிவா - ஜேர்மனி

இ.சம்பந்தன் , ராட்டிங்கன் , ஜேர்மனி

கோழியைப் பிரிந்துவிட்ட குஞ்சுகளிலொன்று
தாயினை இழந்துவிட்ட பிஞ்சுகளிலொன்று
சொந்தங்களைப் பிரிந்துவிட்ட சோகக் குயிலிது
பந்தங்களை இழந்துவிட்ட பைந்தமிழ்ப் பறவையிது
ஏழையாய் வாழ்ந்தாலும் இனிய தமிழ் மரபில்
கோழையாய் வாழாத குடும்பத்தில் பிறந்தவளோ!
தாகமாய்த் தவித்தாலும் தன்மானம் காத்திடவே
வேகமாய் எழுந்துவிட்ட வீரத்தமிழ் மரபிலுதித்தவளோ!


### வாசகர் கவனத்திற்கு !

அனைத்துலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டு (மார்ச் 8) பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள்.
உங்கள் ஆக்கங்களை 13 - 03 - 1997 முன்பாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**'Kalathil' , Eelam House,**
**202 Long Lane ,London SE1 4QB, U.K.**
களத்தில் ஆசிரியர் குழு



www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்